
பூவையின்
சிறுகதைகள்
பூவை எஸ். ஆறுமுகம்

# பூவையின் சிறுகதைகள்

பூவை எஸ். ஆறுமுகம்

பூவை பதிப்பகம்
6/123, காந்தி ரோடு,
மேற்கு தாம்பரம், சென்னை - 600 045.
✆ : 2241 1709

# நூல் - குறிப்பு


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | பூவையின் சிறுகதைகள் |
| ஆசிரியர் | : | பூவை எஸ். ஆறுமுகம் |
| தொகுப்பு | : | பூவை மணி |
| உரிமை | : | திருமதி. ஆ. அகிலாண்டம் |
| முதல் பதிப்பு | : | டிசம்பர் 2003 |
| மொழி | : | தமிழ் |
| நூலின் அளவு | : | டெம்மி 1/8 |
| தாள் விவரம் | : | 11.2 வெள்ளை |
| எழுத்தின் அளவு | : | 12 புள்ளி |
| பக்கங்கள் | : | VIII + 120 |
| பதிப்பகத்தார் | : | **பூவை பதிப்பகம்**<br>6/123, காந்தி ரோடு,<br>மேற்கு தாம்பரம், சென்னை-45.<br>✆ : 2241 1709 |
| நூல் வடிவமைப்பு மற்றும் அச்சிட்டோர் | : | **மாஸ் மீடியா**<br>6/123, காந்தி ரோடு,<br>மேற்கு தாம்பரம், சென்னை-45.<br>செல்போன் : 31145236. |
| விலை | : | **ரூ. 35/-** |



# எளிமையின் எடுத்துக்காட்டு

மாண்புநிறைந்த மனிதப் பிறவியின் சோதனை மிகுந்த மனித வாழ்க்கையிலே படைப்பின் தத்துவத்தையும், விதியையும் தயக்கமின்றி ஏற்றவர் அமரர். பூவை. எஸ். ஆறுமுகம் அவர்கள். தான் படித்த எழுத்துக்களை எல்லோரும் ஏற்கும்படி செய்தவர். எளிய வாழ்க்கைக்கு, தானே ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த அவருக்கு என்று தனிநடை; மிகப்பெரிய உண்மைகளை எல்லாம் மிக எளிமையாக எடுத்துரைத்தவர்; பிறந்த மண்ணின் வழக்கங்களை மறவாதவர். அவர் படைத்த சிறுகதைகளில் சிலவே இந்த நூல். தந்தையின் எளிமையையும், எழுத்தையும் பின்பற்றிவரும் அவருடய வாரிசு திரு.பூவை மணி தந்தை பாசத்தின் உந்துதலால் இந்த நூலை அச்சேற்றியிருக்கிறார்.

இச்சிறுகதைத்தொகுப்பில் உண்மையான காதலை விளக்க **'மஞ்சி விரட்டுப்பூரணி'**

கலப்புசாதி (சீர்திருத்த) திருமணத்தை மையமிட்ட **'மறுபடியும் மகாத்மா'**

ஓடும் எக்ஸ்பிரஸ் ரயிலில் நடந்த சம்பவமாக **'தாயின் மணிக்கொடி'**

ஓதுவார், பாவபுண்ணியம், மண்டபப்பொடி மனிதாபிமானத்துக்கு விளக்கமாக **'பிட்டுக்கு மண்'**

'வினை விதைத்தவன் வினையறுத்துத்தான் தீரணும்' என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக **'கடல் முத்து'**

மனத் தூய்மையை எடுத்துரைக்கும் **'பவளக்கொடி'**

தங்கைப்பாசப் பிணைப்பை உறுதிப்படுத்த **'உலகம் பொல்லாதது'**

குழந்தைப் பாசத்தை எடுத்துரைக்கும் **'தெய்வம் நேரில் வரும்'**

ரோஷக்கார ஆலமரத்தடிக்கிழவர் காசிநாத கண்காணியின் வரலாறாக, **'கால்படி அரிசி ஆத்மா'**

வாழ்வில் சாந்தி இன்பம் என்பன எல்லாம் தாமரை இலையின் ஒளிரும் நீர்த்திவலைகள்தான் என்பதைக்கூறும் **'பிள்ளைக்கனி அமுதம்'**

குடும்பப்பாசம் மற்றும் பர்மீயச்சூழ்நிலை ஆகியவற்றின் விளக்கமாக **'செந்தட்டீ மம்மே பாரே!'**

திருமணங்களில் எதிர்பாராத திருப்பங்களை எடுத்துரைக்கும் **'வாழப்பிறந்தவள்'**

கடன் கொடுத்தவருக்கும், வாங்கியவருக்கும் உள்ளம் உண்டு என்பதை பறைசாற்றும் **'குழந்தை உள்ளம்'**

மணாளனை நிர்ணயிக்க பரிசல் பந்தயம் ஒரு வழி என்பதை விளக்கும் **'போட்டா போட்டி'** ஆகிய கதைகள் இடம் பெற்றுள்ளன.

இக்கதைகள் எளிய நடையில் எழுதப்பட்டிருந்தாலும் அவற்றில் "இந்த லோகத்திலே இப்பைக்கு வேசம் போடுறவங்காதான் மிஞ்சிகிட்டு வராங்க".

"மகாத்மா நீங்க வேடிக்கையான இந்த மனுசங்களோட நெஞ்சுகளிலே விதைச்சுட்டுப்போன அன்பு வித்து இப்ப அபூர்வமாய் அதிசயமாய் முளைகிளம்ப ஆரம்பிச்சுடுசின்னுதான் தோணுது"

"கோயிலுக்கு அடிமைப்பட்டவர்கள் இப்பொழுது மௌனத்திற்கும் அடிமைப்பட்டார்கள்"

"மனம் ஒரு குழந்தை; எடுப்பார் கைப்பிள்ளை. எடுப்பவர்கள் குழந்தை வசம் மனமிழக்கலாம். அதே சமயம் குழந்தை, எடுப்பவரைப்பற்றி அந்நிலையில் தீர்ப்பு, நிர்ணயம் செய்கிறதோ? யார் அறிவார்கள்?"

"விதிக்கு மருந்து இல்லையாம். வினைக்கும் மருந்து இல்லையா?" என்பன போன்ற சிந்திக்கச் செய்யும் கருத்துக்களும் ஏராளமாகவே பிணைக்கப்பட்டிருக்கின்றன.

மேலும் நடைஎளிதாக இருப்பினும் ஆங்காங்கே "இம்மாங்கொத்த நிலையிலே காந்தி செத்துபூட்டார்னு பல்லு மேலே பல்லு போட்ட எந்த புறக்குடிமவனாச்சும் செப்ப வாய்க்குமோ என்ன?"

"உருட்டின சோத்து கவளத்தை லபக்னு வாயிலே போட்டுக்கிடாம நேரம்கெட்ட இம்மாம் பொழுதிலேகூட சொப்பனம் கண்டுகிட்டே இருந்தாங்க"

"என்ன நடந்திச்சு அவுகளுக்கு"

"கண்டீங்களாடி பொண்டுகளா இந்த அதிசய கூத்தை? நம்ப பவளக்கொடி வாழ்க்கைப்பட்டால் தன்னோட சொந்த அயித்தமகன் வீரமணிக்குத்தான் வாழ்க்கைப்படுவேன்; இல்லாங்காட்டி காளிகோயில் பாதாளக்கேணியிலே குதிச்சு உசிரைவிட்டுப்புடுவேனாக்கும்"

"மூனுமுடிச்சுப்போட்டுப்புட ஏறுமா? அப்படிக்கொத்த ஒருஇருசாமம் வரும்னு புரிஞ்சா, அப்பவே எம்புட்டு அம்மான் மகளைச் சிறைஎடுத்துக் கிட்டுப்பறந்திட மாட்டேனா?"

"ஆயி நான் என்னோட அம்மான் பவளத்தை நினைச்சு இப்போ கிலேசம் காட்டல"

"அறந்தாங்கி புதுக்கோட்டை பஸ் வீட்டைச் சுற்றி மடங்கியது"

"இட்லியை நப்புக் கொட்டி சுவைப்பானே!"

"சுற்று வட்டையில் ஏகப்பிரசித்தம்"

"அட்டணைக்காலிட்டு குந்தியிருந்த வரைப்பைசா சுருட்டுத் தேடி வந்தது"

"ஆளுமுண்டலை முடங்கலை"

"ஒண்ணுக்கும் உதவாத இந்த ஒண்டியாலே பாவம், ஒறமொறைக்குள்ளார எதுக்கு வீணாவதாலும் சண்டையும்" போன்ற வாக்கியங்களுக்கும் சொற்றொடர்களும் அவருடைய பிறந்த மண்ணின் வழக்குமொழி வாசனையைச் வீசச் செய்கின்றன.

தமிழ்ப்படைப்பு இலக்கியத்தில் சிறுகதையின் வளர்ச்சிக்கும், வாழ்விற்கும் அருந்தொண்டாற்றி சிறுகதைத் தொகுப்பு, புதினம், நாடகம் ஆகிய வரிசைகளில் 175 நூல்களுக்கு மேல்படைத்த அமரர். பூவை. எஸ். ஆறுமுகம் அவர்கள் என்றும் தமிழ் கூறும் நல்லுறவில் மதிக்கப்படுவார்.

**துரை. இராமு**
கல்வியாளர் & எழுத்தாளர்
6, பிள்ளையார் கோயில் தெரு,
பழையதாம்பரம், சென்னை-45.

# எனது தந்தை

நேற்று என்பது நிஜமில்லை ....
இன்று என்பது இறுதியில்லை ...
நாளை என்பது நம்பிக்கையில்லை ...

- என்ற நிலைப்பாட்டின் தொடர்ச்சியாகவே மனிதர்களின் வாழ்க்கைப் பயணம் தொடர்கிறது.

மனித நேயமிக்கவர்களின் உறவு முறையையும், வாழ்க்கை முறையையும் கிராமிய மண்ணின் பின்னணியோடு எதார்த்த நடையில் கதைகளாக உருவாக்குவதில் எனது தந்தையார் அமரர் **பூவை எஸ். ஆறுமுகம்** அவர்கள் தனிமுத்திரை பதித்துவந்துள்ளார் என்பது இலக்கிய உலகம் அறிந்த உண்மையாகும்.

அவரது வாழ்நாளின் நீண்ட நாளைய கனவு, பதிப்பகம் ஆரம்பித்து அவரது கதைத் தொகுப்புகளை வெளியிடவேண்டும் என்பதாகும். அவர் இருந்த வரையில் சந்தர்ப்ப சூழ்நிலைகள் சாதகமாக அமையாத காரணத்தால் நிறைவேறாத அவரது கனவு, இதோ... இப்போது நிறைவேறியுள்ளது.

பல்வேறு பிரபலமான வார இதழ்களில் வெளியாகி, ஏராளமான வாசகர்களின் பாராட்டுக்களைப் பெற்றுள்ள சிறுகதைகளின் தொகுப்பாக இந்நூல் உங்கள் கைகளில் தவழ்கிறது.

எனது தந்தையார் எழுதிய "இதோ, ஒரு சீதாப்பிராட்டி" என்ற தமிழக அரசின் பரிசு பெற்ற நாடக நூல் "இன்னொரு சீதை" என்ற பெயரில் சென்னை தொலைக்காட்சியில் 17வார தொடராக ஒளிபரப்பானபோது அத்தொடரை இயக்கிய பிரபல தொலைக்காட்சித் தொடர் இயக்குநர் திரு. கா.பரத் அவர்கள் வசனம் எழுதும் வாய்ப்பினை எனக்கு வழங்கிச் சிறப்புச்சேர்த்தார்.

இப்போது எனது தந்தையாரின் சிறுகதைகளை தொகுத்து வெளியிடும் பெருமை இந்நூல் மூலமாக எனக்கு கிடைத்துள்ளது.

எனது வளர்ச்சி மீது அதிக ஆர்வம் கொண்டுள்ளவரும், எனது தந்தையாரின் நீண்ட நாளைய நண்பருமான பெரியவர் திருமிகு. துரை ராமு அவர்கள் என்னுடைய முதல் நாடகமான "சபையிலே

மௌனம்" நாடகத்தை நூல் வடிவமாக கொண்டுவந்த நன்றிக்குரியவராவார். அவரது அணிந்துரையுடன் இந்நூல் வெளிவருவது எங்கள் குடும்பத்திற்கு கிடைத்த பெருமையாகும்.

இந்நூல் சிறந்த முறையில் வெளிவர உதவிய இனிய நண்பர்கள் உதயசங்கர், நந்தகுமார் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி கூறுவது எனது கடமையாகும்.

எனது தந்தையாரின் எழுத்தின்மீது அதிக அன்பு கொண்டுள்ள அருமை வாசகர்களே.... இந்நூலின் வெற்றி இனி உங்கள் கையில்.

இந்நூல் குறித்த உங்களது விமர்சனங்களை எழுதுங்கள்; எங்கள் முயற்சிக்கு ஆதரவு தாருங்கள்!

என்றும் நன்றியுடன்,

**பூவை மணி**

# உள்ளே....


| | | |
|---|---|---|
| 1) | மஞ்சி விரட்டுப் பூரணி | 1 |
| 2) | மறுபடியும் மகாத்மா | 7 |
| 3) | தாயின் மணிக்கொடி | 23 |
| 4) | பிட்டுக்கு மண் | 31 |
| 5) | கடல்முத்து | 44 |
| 6) | பவளக்கொடி | 55 |
| 7) | உலகம் பொல்லாதது | 63 |
| 8) | தெய்வம் நேரில் வரும் | 70 |
| 9) | கால்படி அரிசி ஆத்மா | 79 |
| 10) | பிள்ளைக் கனியமுதே | 87 |
| 11) | செந்தட்டீ மம்மே பாரே! | 93 |
| 12) | வாழப்பிறந்தவள் | 100 |
| 13) | குழந்தை உள்ளம் | 106 |
| 14) | போட்டா போட்டி | 112 |

# மஞ்சி விரட்டுப் பூரணி

ஊர் மூக்கின் மேல் விரலை வைத்தது!
செம்பவளம் தீர்ப்பு வழங்கிவிட்டாள்.

"வாழ்க்கை என்கிறது ஒரு வெளையாட்டுக் கணக்காகும். பல்லாங்குழி, தாயம்னு ஆடறதில்லையா? அப்படித்தான். கெலிக்கவும் கெலிக்கலாம்; தோற்பு ஏற்பட்டாலும் ஏற்படலாம்; இப்படியான ரெண்டு மனநிலைகளையும் சரிசமதையாகப் பாவிக்கிற வீர உணர்ச்சி என்னோட இந்தப் பாளத்த மனசுக்கு இப்பதான் கூடவந்திருக்கு; கைகூடியும் வந்திருக்கு, மஞ்சி விரட்டு பந்தயக் கெடுவிலே தான் நான் புதுசாய்ப் பொறக்கவேணும் என்கிறது ராக்காச்சி ஆத்தாளோட தீர்ப்புப் போலே! நான் என்னோட பவித்தரமான ஆசைக்கு ஒரு நல்ல பேரை உண்டாக்கிக் காட்டிப்புட வேணும்னு கனாக்கண்டு, அந்தக் கனாவுக்கு ஒரேயொரு அன்பான வடிவமாக அமைஞ்சிட்ட என்னோட நேச மச்சானை ! அதான் எங்க மாங்குடி மச்சானை இந்தப் பொங்கல் கடுத்தத்திலே கண்ணாலம் கட்டிக்கிட்டு அந்த ஆம்பளைச் சிங்கத்துக்கே முந்தானை விரிச்சுப் போடணும்னுதான் ரோசனைப் பண்ணியிருந்தேன், ஆனாக்கா. எம்புட்டு மனசான மனசை சோதிக்கிறதுக் குன்னு என்னென்னமோ தகவல்கள் ஏற்பட்டுப் பூடுச்சி. எல்லாத் தீவினைங்களும் எதாலே வந்ததின்னு ஒங்களுக்கெல்லாம் புட்டு வச்சாப்பிலே தெரியவும் தெரியும்; அசலான பூலோக ரம்பையாட்டம் நான் இந்த பூவத்தக்குடி மண்ணிலே ஓடி ஆடினதாலே எம்மேலே யார் யாரெல்லாமோ எப்படி எப்படியெல்லாமோ ஆசை வைக்க ஆரம்பிச்சிட்டாங்க பாழாய்ப்போன இந்தச் சோதிப்பிலிருந்து விடுதலை அடையறத்துக் கோசரமேதான், நானே எனக்கின்னு ஒரு சோதிப்பை ஏற்படுத்திக்கிடவும் துணிஞ்சேனாக்கும்."

சிலந்திப் பூச்சி தான் அகப்பட்டுக்கறத்துக்கின்னே வலை பின்னிக்கிட்ட கதைதான்! பொல்லாத பாய்ச்சல் காளை அப்படின்னு திக்கெட்டும் பேரேடுத்திட்ட எம்புட்டு ஆலத்தாம்பாடி பூரணி செவலையைக் காளையை இது மட்டுக்கும் கண்ணாலம் கட்டிக்கிடாத

எந்த இளவட்டம் இந்த மஞ்சி விரட்டிலே லாந்திப்புடுச்சி. அது கழுத்திலே சாயம் கரைச்சலேஞ்சிலே முடிஞ்சிருக்கக்கூடிய ரூபா ஆயிரத்தையும் அவிழ்த்துக்கிடுதோ, அந்த இளஞ்சிங்கத்துக்கு நான் வாழ்க்கைப்படத் தயார்னு பதினாறு நாட்டிலேயும் தண்டோரா போடச் செஞ்சேன். இம்மாங்கொத்த விஷப் பரிட்சையிலே என்னைத் தூண்டித் துருவி இறங்கவச்சதே என்னோட நேச மச்சான் முத்துலிங்கமேதான்! எனக்கு மனசொப்பிப் புடிச்சிப்பூட்ட இந்த மாங்குடிக்காரவுகளை என்னோட மனசுப்படி நான் கண்ணாலம் கட்டியிருக்கலாம். ஆனா விதி விளையாட நானும் ரோசத்தோட. வெளயாட வாய்ச்சிடுச்சு. ஆனா எந்தக் காளையை மடக்கிப் பிடிச்சுக் கெலிச்சு. மஞ்சி விரட்டு மம்முதன் அப்படிங்கிற கியாதியைத் தட்டிக்கிடுறத்தோட, வீரத்தின் பேராலே ஒரு நல்ல பேரை உண்டாக்கி அதன் மூலம் என்னையும் தட்டிக்கிடச் சொப்பனம் கண்டாகளோ அந்த நேச மச்சானை. அந்தக்காளை ஆமா என்னோட சொந்தக்காளை மண்ணைக் கவ்வச் செஞ்சிடுச்சி! ஆனபடியினாலே; நான் வச்ச ஆணைக்கு நானே தலைவணங்கிக் காட்டவும் துணிஞ்சி, விதி படிச்ச தீர்ப்புப்படிக்கு நான் முக்குடி முரடன் முத்தையனையே கைப் பிடிக்கவும் துணிஞ்சிட்டேன். என் விதி என்னோட ஆகச்சே. எனக்குக் குறுக்கு மறிக்க இனிம எந்த விதிக்குமே திராணி இருக்காதாக்கும்! ஆமா, இந்தச் செம்பவளம் சொன்னால் சொன்னதுதான்.

தோழிகள் விம்முகின்றனர்.
விடலைகள் சிலையாகின்றனர்.
"எலே! பவளப் பெண்ணே!"
செம்பவளம் ஏறிட்டுத் திரும்பினாள்.
ஓ! முத்துலிங்கம் மன்மதன்.
சிரிக்க வேண்டியவள். அழுகிறாள்.

பாவம் முத்துலிங்கம். செம்பவளத்தின் முரட்டுக் காளையின் மூர்த்தண்யமான தாக்குதலுக்கு இலக்கன ஆண்பிள்ளைச் சிங்கம் அதோ. ரத்தம் சொட்டச் சொட்டக் கிடக்கிறான்; புழுதியோடு புழுதியாகக் கிடக்கிறான். அவன் கண்களினின்றும் உதிரம் மட்டுந்தானா சிந்திச் சிதறிக் கொட்டுகின்றது?

அவன் அவளைக் கண்களால் பார்க்கவில்லை; நெஞ்சால் பார்த்தான். நல்ல ரத்தம் ஓடும் பாதத்திலே நெருஞ்சி முள்

தைத்துவிட்டால், குருதி பூம்புனல் வெள்ளமாகப் பாய்ந்தோடுவது உண்டு. அந்தப் பாங்கில் அவனது இதழ்களிலிருந்து சொற்கள் பாய்ந்தோட வெள்ளப் பாய்ச்சலாகப் பாய்ந்தோடத் தவித்தன. துடித்தன. ஆனால், உதிரக் கண்ணீர்தான் வெள்ளத்தின் சுழிப்போடு பீறிட்டது, வீரிட்டது. "பவளப்பெண்ணே!...." விழித்தான்.

கன்னி கழியாப் பதுமை. அசல் பதுமையாகவே உருக்கொண்டாள்.

"பவளம். நீ தருமத்துக்கும், சத்தியத்துக்கும் கட்டுப்பட்ட நல்ல பாம்பு! அந்த துப்பு எனக்குத் தெரவுசாய்த் தெரியும்; அதொட்டிதான் உம்புட்டு மாடு பாய்ஞ்சி உசிருக்கு ஆபத்தாகிக் கெடந்த என்னை ஏறெடுத்தும் பார்க்காம இருந்த அலங்கோலத்தைக் கூட நான் பொருட்படுத்தலே! உங்கிட்ட கெலிச்சிருச்சு! ஆனா, உம்புட்டு செவலைக்கு அந்த முரடன் முத்தையனைத்தான் புடிச்சிருக்கும்போல; அதனாலேதான் அது அந்த ஆள்கிட்ட தோத்து போட்டு, ஒன்னை என்னொட கையிலே ஒப்படைச்சிடப் போவுது. பவளம். எந்தவிதியை நான் இது பரிந்தம் நம்பாமல் இருந்தேனோ அந்த விதியை நான் நம்பித் தீரவேண்டிய கட்டத்திலே நான் நின்னுக்கின்னு இருக்கேன். ஒன்னைக் கொண்டுக்கிடுறதுக்கு இந்தப் பாவிக்குப் பொசிப்பு இல்லை. முத்தையன் அண்ணாச்சி கொடுத்து வச்ச புள்ளியேதான்! அட்டியே கெடையாது! நீங்க ரெண்டு பேரும் நல்லா இருக்கணும்; இதான் எம்பூட்டுக் கடைசியான, அந்தரங்க சுத்தியான ஆசையாக்கும்!"

"மச்சானே!..."
"ஊம்!"

"ஒங்களுக்கு ரொம்ப ரொம்பச் சுத்தமான மனசுங்க! இந்தப் பெரிய மனசு நம்ப ஊர் நாட்டிலே யாருக்குமே வராதுங்க. சத்தியத்தை நாம வாழ வச்சாதான், சத்தியம் நம்பளையும் வாழ வைக்கும். அதே சத்தியத்தை நம்பியேதான், நீங்களும், நானும் உசிருக்கு உசிராய் பழகினோம். ஒரே உசிராகவும் பழகினோம். எல்லை தாண்டாமலும் பழகினோம். அந்த பரிசுத்தமான நேசத்தை நீங்களும் மறக்க ஏலாது. நானும் மறக்க வாய்க்காது. இந்த கதை காரணத்தை என்னோட புது மச்சான் காரவுகளும் தெரிஞ்சு வச்சிருக்காமல் இருக்க மாட்டாங்க. நம்மோட துல்லியமான அந்த நேசத்தை நாம கையெடுத்துக் கும்பிட்டு சத்தியம் எப்பவும் இந்தச் சென்மத்திலே மட்டுமில்லை. இனி ஏழேழு

சென்மத்திலேயும் வாழ்த்திக்கிட்டே இருக்கும். வாழ வச்சிக்கிட்டும் இருக்குமுங்க, அந்தாலே பாருங்க எம்புட்டுப் புது மச்சானுக்கு, எம்புட்டு வீராதி வீரத்தனமான பூரணிக் காளையையே அடக்கி மடக்கிப் போட்ட சூராதி சூரரான எம்புட்டு புதுசான மச்சானுக்கு இன்னமும் கூட எங்கிட்டே நெருங்கவே வல்லமை வரலலே. அவுக அங்கிட்டே நிக்கட்டும்; அவுகளை அப்பாலே நானே கையைப் புருச்சிக் கூப்பிட்டுகிடுவேன். அதுக்குள்ளாற, எனக்கின்னு உண்டான ஒரு தவக்கடமை இருக்குதுங்க! ம், நீங்க மெதுவா எந்திருங்க ஊம், நான் சொல்லுறேன்; பைய.... பைய.... எந்திருச்சி எங் கழுத்தை கட்டிப் பிடிச்சுக்கிட்டு எம்பூட்டு பொட்டி வண்டிலே வச்சு அறந்தாங்கிச் சர்க்காரு ஆசுபத்திரிக்கு அழைச்சிகினு போகப் போறேன்; நீங்க நல்லபடியாய் பிழைச்சு, என்னையும் எம் மச்சானையும் சத்தியமான மனசோட வாழ்த்தவேணும் என்கிறது என்னோட ஆசையாக்கும்!"

முத்துலிங்கம் உருகுகிறான்!

செம்பவளம் அவனை நெருங்குகின்றாள்!

அந்தி சிரிக்கின்றதே?

"பவளம். ஒனக்குக் கோடிப் புண்ணியம் உண்டு; என்னைத் தீண்டிப்புடாதே!"

"மச்சானே!"

"உம்புட்டு மச்சானான அந்த பழைய முத்துலிங்கம் மாண்டு மடிஞ்சிட்டான். நான் புது முத்துலிங்கம். நீ தீண்ட வேண்டியது என் முத்தையா அண்ணாச்சியைத்தான். காலத்தோட சேர்ந்து ஊரும் கெட்டுக்கிடக்கிற நேரம் இது. நீயும் முத்தையனும் ஆயிரங்காலத்துப் பயிராய் வாழவேண்டியவங்க. அந்த தருமத்துக்குக் குறுக்காலே என்னை இழுக்காதே. நான் வரவும் ஒப்பமாட்டேன. பவளம்! நீ எட்டி நில்லு. அதோ ஒன் புது மச்சான் வந்துகிட்டு இருக்குது பவளம்!"

செம்பவளத்தின் நிழலில் ஒண்டினான் முத்தையன். தலையை உயர்த்தி மதுரை வீரன் மீசையை முறுக்கி விட்டான். கட்டமொம்மன் கண்களை திரட்டி உருட்டி, நாளாலப் பக்கத்திலும் சுழலவிட்டான். இருந்திருந்தாற் போல, ஒர் அதிர்வேட்டுச் சிரிப்பையும் முக்கினான்! "ஏலே புள்ள பவளம், தம்பி முத்துலிங்கம் தங்கக் கம்பி! நான் உன்னைக் கண்டு பயப்பட்டேன். ஆனா நம்ப முத்துலிங்கம் தம்பி ஊர்

உலகத்தைக் கண்டு பயப்படுது. ஓட்டிவாடி குட்டி! நீயும் நானும் சேர்ந்து நம்ப முத்துலிங்கத்தை கைத்தூக்கலாய்த் தூக்கி, ஒம்புட்டு வண்டியிலே வச்சு, ஆஸ்பத்திரிக்கு அழைச்சுபோய். நல்ல வைத்தியமாய் பண்ணி வைப்போம். ம்... வா, புள்ளே, வா" என்று கொஞ்சினான்.

செம்பவளத்தின் ஸ்பரிசம் முத்துலிங்கத்தின் மேனியைத் தீண்டியதுதான் தாமதம்!

மறு இமைப்பிலே -
"ஐயையோ! பவளப் பெண்ணே!"
அலறியவன் முத்துலிங்கம்.
அப்போது.
செம்பவளம் மாத்திரம் சிலையாகவில்லை.

முரடன் முத்தையனும் சிலையாகிவிட்டான். சிலை பேசவும் தொடங்கிவிட்டது. "செம்பவளப் பெண்ணே! நடப்பு லோகத்துக்கு தக்கனை நானு சத்தியத்துக்குப்பயப்படாத முரடனாகவே வளர்ந்துப்புட்டேன். ஆனதாலே எனக்கு ஏத்த பொஞ்சாதியாக நீ ஒருநாளும் இருக்க ஏலாதாக்கும்! நான் வந்த தடத்திலே திரும்பிடறேன். மஞ்சிவிரட்டிலே எனக்கு கிடைச்ச கெலிப்பு என்னோட முரட்டுத் தனத்துக்குக் கிடைச்சிட்ட கெலிப்பாகவே இருந்துப் புடட்டும்! ஆனா, அதே மஞ்சு விரட்டுல தோத்து போயிட்ட எந் தம்பி முத்துலிங்கத்துக்கு என்னோட கெலிப்பை வெற்றியை தாரை வார்த்துக் கொடுத்துப்புட்றேன். பாரத சண்டையிலே கர்ணமவராசரு யார்கிட்டேயோ தருமத்தையோ எதையோ தாரைவார்த்துக் கொடுக்கலையா, அது கணக்கிலே!

அப்பாலே, தம்பி முத்துலிங்கம் மஞ்சுவிரட்டுப் பந்தயத்திலே கெலிச்சவனாகே ஆயிடும். இல்லையா? ஓ... இந்த ஒரு நல்ல நினைப்பு இந்த முரடன் மனசிலே தோணுறதுக்குக் கூட, நீங்க ரெண்டுபேரும் மதிச்சுக்கிட்டு இருக்கிற அந்த தருமமான சத்தியமேதான் காரணமா இருக்குமோ? பவளம், ஓம் புண்ணியத்தாலே. நானும்கூட ஒரு மனுஷனாக ஆகிப்பூட்டேன் போலத்தான் தோணுது! பலே பலே பவளம், நீ உம் மச்சானை உன் ஆசைப்படி புள்ளையாட்டாம் நெஞ்சிலே சாய்ச்சிகிட்டு உன்னோட வண்டிக்கு ஓடியா. எந் தம்பியைப் பார்த்தியா, பவளம்? எந் தம்பி எம்பேச்சுக்கு கட்டுப்பட்டு, என்னமாய் பொட்டிப் பாம்பாய் அடங்கிக் கிடக்கிறான் பாத்தியா செம்பளம்?

ம்... உம்... அம்புட்டுதான்...! பூலோக ரம்பைக்குத் தெரியாத இனிநோக்காடு கூடுதலாகாதாக்கும்! உன் அணைப்பு ஒன்னே போதும். அவனை மறுபிறப்பு எடுக்கச் செய்யுறதுக்கு. என் தம்பி கொடுத்து வைத்தவன் அதான் ஒன்றை எடுத்துகிட்டான். ஒங்க ரெண்டு பேரோட சுத்தமான சொப்பனம் பலிச்சிருச்சு! ம். மெதுவா நட, நான் ஓடிப்போய் வண்டியைக் கட்டுறேன்! நான் கண்ட பாரத சண்டை பயாஸ்கோப்பிலே, கண்ண பரமாத்மாதேரை ஓட்டின சங்கதியை நான் எப்பவும் மறந்திட ஏலாதாக்கும்!...”

முத்தையனின் இடப்புறக் கண்ணின் முனையிலிருந்து கண்ணீர் வெளிச்சத்திலே மின்னிப் பளிச்சிட்டுச் சிந்தி சிதறுகிறது!

செம்பவளம் விம்மியபடி கையெடுத்துக் கும்பிடுகிறாள்!

ஈட்டிமுனை கொம்புகளில் காவிப்பூச்சு மின்ன, தலைநிமிர்ந்து நின்ற அந்த ஆலத்தாம்பாடிப் பூரணிச் செவலைக்கும் இப்போதுதான் போன உயிர் திரும்பியிருக்க வேண்டும்!......

❑

# மறுபடியும் மகாத்மா!

## 1

அந்திக் கன்னி மஞ்சள் பூசிப் பொட்டிட்டுப் புன்னகை செய்துகொண்டிருக்கின்றாள்! . . .

விடிந்தால், மகாத்மா காந்தி பிறந்த நாள்!

'காந்தி மகாத்மா செத்து விட்டாரென்று எந்த பயல் சொன்னவன்?'

சேரிச் சாம்பான் தனக்குத் தானாகவும், தன்னின் தானாகவும் சிரித்துக்கொண்டார். சிரிப்பின் அலைகளிலே, மாறிய காலத்தின் - ஊகூம், மாற்றப்பட்ட காலத்தின் அதிசயம் சலசலக்கிறது!

'ஆவணத்தாங்கோட்டைத் தேவர் குடியிருப்பிலேருந்து ஊருக்கு ஒசந்த பெரும்புள்ளியான கண்டிச்சீமைக் கங்காணி ஐயா இங்கிட்டு ரேக்ளாவிலே வந்திருந்தாக; வெத்திலை பாக்குப் போட்டுக்கிட்டாக; காந்தி விழா கைச்செலவுக்கு நூத்தியொரு ரூவா அசல் சலவைத் தாளவே தந்தாங்க. பொறக்குமாசத் தீவாளி விருந்துக்கு என்னைய பெரிய மனசு வச்சு அழைச்சிருக்காங்க; கும்பிடு கொடுத்தாக; கும்பிடு வாங்கிக்கிட்டாக; அப்பாலேதான். புறப்பட்டுப் போனாங்க!...'

'இம்மாங்கொத்த நிலைமையிலே, காந்தி செத்துப் பூட்டார்னு பல்லு மேலே பல்லுப் போட்ட எந்தப் புறக்குடிப் பயமவனாச்சும் செப்ப வாய்க்குமா, என்ன?' - நெஞ்சின் ஈரம் கண்களில் தெரிந்தது. எட்டாக் கையிலே கிடந்த வெற்றிலைக்குட்டானை எட்டி எடுத்துவிட்டார். அதிலேகூட, அவருக்கு ஒரு பெருமை; பெருமிதந்தான்!

'என்னைத் தொட்டாக்கத் தீட்டு ஒட்டிக்கும்னு, நல்ல காலம் இந்த வெத்திலைங்க மாஞ்சுமடியல்லே!...ப் பூவே! - இந்த

வெத்திலைங்க என்ன பெரிய ஒசத்தியாக்கும்? - எட்டிப் பிடிக்க வாய்க்காத அம்புட்டு ஒசரத்திலே குந்தியிருக்கக் கூடிய கங்காணி ஐயாவே என்னோட குடிசையைத் தேடி வந்திட்டாகளே?... இப்படிப்பட்ட அதிசயத் திருக்கூத்துக்கெல்லாம் யாராம் காரணம்? காந்திதான். ஆமா! எங்க காந்திச் சாமியேதான் காரணமாக்கும்! ஐயையோ...! எங்க காந்தித் தெய்வத்தை விதியாட்டம், சொல்லாமல் கொள்ளாமல் அவசரப்பட்டுச் சுட்டுக் கொன்னுப்பூட்டானே எவனோ ஒரு பாவி?...' விம்மல் வெடித்தது; நெஞ்சும் வெடித்துவிடுமோ?

காக்கை கத்துகிறது.

குருவியும் தான்!

ஏக்கப் பெருமூச்சோடு ஏறிட்டுப் பார்த்தார் சாம்பான்.

எட்டடிக் குச்சி, மண் சுவரின் சனி முடுக்கில், கைக்கு எட்டும்படியாக அண்ணல் பொக்கை வாய்ப் புன்னகையைச் சிந்திக் கொண்டிருக்கிறார்!

காந்திஜியைப் போன்று, சாம்பானுக்குச் சிரிக்கத் தெரியவில்லை. காலம் 'சடுகுடு' ஆட, அந்தக் காலத்தின் மணல் வெளியில் பதிந்திட்ட அடிச்சுவடுகளென நினைவுகள் 'உப்புக்கோடு' மறித்தனம்; அந்த ஆட்டத்தில் கங்காணியும் சேர்த்தி!

'கடவுளே, காந்தி மகாத்மாவே! எங்களையும் மனுச சென்மங்களாய் மதிச்சு, எங்களுக்கும் ஒரு விடிமோட்சம் ஏற்படுத்துறதுக்காக நீங்க உங்க காலத்திலே எம்புட்டோ பாடுபட்டீங்க; நீங்க செஞ்ச போதனைக்கு உண்டான பலனை ஒரளவுக்கு நீங்களே கண்ணுக்குக் கண்ணாய்க் காணவும் வாய்ச்சதென்னமோ பொய் இல்லேதான்; ஆனாலும், எங்களுக்குப் பரிபூர்ண விடுதலை கிடைச்சிட்டுதுன்னு எங்களாலே இன்னமும்கூட பரிபூர்ணமாய் நம்ப ஏலலே!

கங்காணி மாதிரி, ஆயிரத்திலே ஒருத்தர் அத்தி பூத்தாப்பிலே எங்களையும் ஒரு பொருட்டாய் மதிக்கத் தலைப்பட்டிருக்காங்க; இந்த நடப்பிலேகூட, உண்மை எந்த மட்டுக்கு ஒளிஞ்சுக்கினு இருக்குது என்கிறதும் எங்களுக்கு மட்டுப்படல்லே. ஏன்னா, இந்த லோகத்திலே இப்பைக்கு வேசம் போடுறவங்கதான் மிஞ்சிக்கிட்டு வாராங்க! இந்தத்

துப்பு ஒங்களுக்குப் புரியுமுங்க. நீங்க ஒசந்தவங்க; ஆனதாலேதான், ஈனச் செம்மங்களான எங்களையும் ஒசத்தப் பாடுபட்டீங்க.

நீங்க கண்ட கனாவோட நல்லது - கெட்டதைத் துல்லியமாய்ப் புரிஞ்சுக்கிடறதுக்கு ஏத்த சமயம் இதுதானுங்களே சாமி...? ஆனா, நீங்க எங்களையெல்லாம் தவிக்கவிட்டுப் போட்டுப் போயிட்டீங்களே? - பாளத்த பாவி ஒருத்தன் கண்ணை மூடிக்கிட்டு, ஒங்களைச் சுட்டுப்புட்டானே என்கிறதுக்காவ, நீங்களும் கண்ணை மூடிக்கிட வேணுங்களா, சாமியே?... ஐயையோ, தெய்வமே, எங்க தெய்வமே!'

கிழவாடி இன்னமும் மதுரைவீரன் சிலையேதான்.

யாரோ கூப்பிட்டார்கள்.

ஊகூம், மூச்!

பணம் இருந்தும் மனம் இல்லாத - அதாவது, சமுதாயநலப் பற்றுதல் இல்லாத சமூகத் துரோகியை நினைவுகூர்ந்து நினைவூட்டிப் பிரகடனப்படுத்துகிற பாவனையில், மிக மிகப் பலவீனமாக எரிந்துகொண்டிருக்கிறது மண்ணெண்ணெய்ச் சிம்னி விளக்கு.

புகையிலை எச்சில் குமட்டிக்கொண்டு வரவே, சாம்பானுக்குச் சுயபிரக்கினையும் வந்தது. தலையைத் தாழ்த்தியவராகப் பத்திரமாகவே வெளியே வாசலுக்கு வந்தார். ஆத்தாடி!... நல்லமூச்சு வந்தது. வாசல் கொட்டகையில் எத்தனை நெற்குதிர்களாம்!

"எம்புட்டு வாட்டி அலட்டுறதாம்?" என்று கோபப்படுகிற பாவனை செய்தபடி, வந்து நின்றாள் கிழவி.

"என்னையா கூப்பிட்டே, புள்ளே?"

"எனக்கு ஒடமை கொண்ட ஒங்களைக் கூப்பிடாம, மறுகா, யாரை கூப்பிடுவேனாம்?"

வாழ்க்கைத் தடத்தில் கிட்டத்தட்ட எழுபத்தேழு தொலைக் கற்களைத் தாண்டிவிட்ட பெரியவருக்கு இப்போதுதான் சிரிக்க வேண்டும் போலத் தோன்றியிருக்கலாம், பல் போனாலும், சொல் போகாத மானி மானஸ்தர். "எம்வூட்டு ஆசைப் பெண்டாட்டிக்குக் கோவத்தைப் பாருங்களேன், கோவத்தை!" பொக்கை வாயில் புன்னகை பூவாக மலர்கிறது; மணக்கிறது.

ஏண்டி அங்காளம்மைக் குட்டி! கஞ்சிப் பொழுதுக்குக் குடிசையிலேருந்து பறிஞ்ச, அமாசை இருட்டுப் பறிஞ்சடியும் வந்திருக்கீயே? என்னாவாம் சங்கதி? மூத்த பயலையும் இன்னம் கண்ணுப்புறத்திலே காண வாய்க்கல்லியே? போன எடம், வந்த எடத்திலே தட்டுப்பட்டானா?"

தன்னுடைய ரதிக்கிளியான கிழவியை விழுங்கி விடுகிற மாதிரி பார்த்தார் அவர்.

கிழவி என்றால், வெட்கமான வெட்கம் வரக்கூடாதென்று சட்டமா, என்ன?

அந்த நாளிலே, அழகுக் கலாபமயிலான அங்காளம்மையின் வெட்கத்தைக் கண்டும், ரசித்தும் வெட்கப்படாமல் அவளைக் கட்டிக்கொண்டவர் இந்த சாம்பான் என்பது சிதம்பர ரகசியம்!...

"மச்சான் காரவுங்களே!"

"........."

"இந்தாலே பாருங்க, ஒங்களைத்தானுங்களே?"

தொட்டுணர்வின் இனிமையான சுகத்தில் முதியவர் இன்பமான சொர்க்கத்தை உணர்ந்திருக்க வேண்டும். சொப்பனம் கண்டு விழிப்பவர் போன்று, விழிகளை மூடி மூடித் திறந்தார்.

"ஏ.. புள்ள! ஒனக்குச் சங்கதி தெரியுமாங்காட்டி?... ஊர் நாட்டுக்கு ஒசந்த கண்டிச்சீமைக் கங்காணி முத்து வீரப்பத் தேவர் ஐயா நம்ம குடிசைக்குத் தேடி வந்து, நாளைக்குக் காலம்பற நடக்கப்போற காந்தி செயந்திச் செலவுக்கு நூத்தியொரு ரூவா தந்தாராக்கும்! ஆமாடி, அங்காளம்மே! இது நம்ம தாராடிச்சாமி சத்தியமாய் மெய்யான தாக்கலாக்கும்!" என்றார் சாம்பான். வாயெல்லாம் பல் இல்லை, சிரிப்பு; அடங்காச் சிரிப்பு; அது ஆனந்தச் சிரிப்பு.

"காந்தியைக் கொண்டாடுறதுக்குக் கங்காணி எசமானரு நூத்தியொரு ரூவாய் குடுத்தது, மெய்யாலுக்குமே நூத்திலேயொரு சேதிதானுங்க, மச்சானே?"

"இந்த நடப்புத் தாக்கல் நாளைக்கு விடிஞ்சதும் விடியாததுமாய் ஊர் முச்சூடும் பரவி, கங்காணியைப் பெருமையோட உச்சாணிக்

கொம்பிலே குந்தவச்சுப் புடாதுங்களா? சோழியன் குடுமி சும்மாவே ஆடாதுங்க! இப்பிடி நூத்தியொரு ரூவா கொடுத்ததாலே, ஊர் மத்தியிலே நாலு பேர் நல்லதனமாய்த் தம்மைப் பத்திப் பெருமையோடப் பேசுவாங்க என்கிற நப்பாசை கங்காணிக்கு மட்டும் இருக்காதா என்ன? அவரும் மனுஷப் பிறப்புத்தானுங்களே? சுயநலப் பித்து அவருக்கு மட்டும் இருக்காதுங்களா, மச்சானே? ... அது போகட்டும்! பெரிய எடத்து விசயத்திலேருந்து நம்மோட சின்ன எடத்து விசயத்துக்கு வரலாமுங்க!..."

"என்னா"

"மூத்தவன் வீரமணி எங்கண்ணுக்குத் தட்டுப்படல்லே; ஆனா, அவனோட கண்ணாலம் காட்சி சம்பந்தப்பட்டவங்க தட்டுப்பட்டாங்க; சங்கதியை நேரு சீராய் முடிச்சுப்புட்டேனுங்க. சாகுபடி செய்கிறதுக்குக் கூட கோயம்புத்தூர்லே ஒரு படிப்பைப் படிச்சுப் பட்டத்தையும் வாங்கிக்கிட்ட நம்ம ராசாப் பயலுக்குப் பொண்ணு குடுக்கிறதுக்கு எங்க அண்ணாச்சி எம்புட்டோ குடுத்து வைச்சிருக்க வேணுமுங்க!"

கிழவிக்கு இருமல் வந்தது.

இந்தக் கிழவர் மறுபடி கனவு காண ஆரம்பித்துவிட்டாரோ?

"மச்சானே!"

"................"

"ஏங்க, மச்சான்காரவுகளே! நானு பேசிக்கிட்டே இருக்கேன்; நீங்க பாட்டுக்குப் பேசாமல் இருக்கீகளே? ஏதுனாச்சும் கனா கினா காணுறீங்களா?"

"ஆமா, புள்ளே, ஆமா... நான் கனவுதான் காணுறேன்; மனுசங்களுக்கு மட்டுமில்லே, தெய்வத்துக்கும் நாயமான ஒரு கனவைத்தான் காணுறேன்! ஆனா, நீ கனா காணுறதாட்டம், படிச்சுப் பட்டம் வாங்கிக்கிட்ட என்னோட செல்வத்தை ஒன்னோட படிக்காத அண்ணன் மவளுக்குக் கட்டிக் கொடுக்கவே மாட்டேன்!"

"என்னாங்கிறேன், இப்படிச் சொல்லிப் போட்டீங்க?"

"பின்னே எப்படிச் சொல்லிப் போடணுமாம்?"

"நையாண்டி நைச்சிகமா பண்ணுறீங்க; பண்ணுங்க, பண்ணுங்க!... என்ன செய்யுறது? ஒங்க காட்டிலே மழை பெய்யுதே? அது சரி; நம்ம வீரமணியை எங்க பவளத்துக்கு கண்ணாலம் பண்ணிவைக்காமல், பின்னே, ஊருக்கு ஒசத்தியான கங்காணி மகள் செண்பகத்துக்குக் கட்டி வைக்கப் போறீங்களாக்கும்?..."

## 2

அங்காளம்மை பேசிய பேச்சுகள் சாம்பானை சிலிர்க்க வைத்தன.

கண்கள் ஜொலிக்க அவளைப் பார்த்தார்.

"ஏண்டி, புள்ளே! எம் மகன் வீரமணிக்கு இந்தச் சாம்பான் பெத்த பிள்ளையான வீரமணிக்கு அந்தக் கங்காணி மகளை ஊர் உலகத்துக்கு ஒசந்த கங்காணி மகள் செண்பகத்தைக் கண்ணாலம் பண்ணி வச்சால் செல்லாதா, என்ன?..." சூறைக் காற்றில் பறந்த மயிர்க் கற்றையைக் கோதியெடுத்து அள்ளிச் செருகிக் கொண்டார் சாம்பான். தன்னை மறந்து சிரித்தார்; ஊர் உலகத்தையும் மறந்து சிரித்தார்; ஆனால், காந்தியை மட்டும் அவர் மறந்து விடவில்லை!

"நல்லாச் செல்லும்; செல்லும்படியும் ஆகும்; நல்லாக் கனவு காணுங்க! மேளதாளத்தோட வேணும்னாலும் கனவு காணுங்க!"

"ஏலே, அங்காளம்மை! நீ எந்த அர்த்தத்திலே வேணும்னாளும் சொல்லிக்கிட்டுக்கிட; ஆனா இந்த ஒரு சங்கதியை மட்டுக்கும் ஒன்னோட இந்தச் சுங்கடி முந்தானையிலே முடிச்சுப் போட்டு வச்சுக்கிடு! இந்தச் சாம்பான் கனவு கண்டாக்க, அது நடந்தே தீருமாக்கும்! அந்தக் கனவு கட்டாயமாய்ப் பலிச்சே தீருமாக்கும்! ஆமா!" மதுரை வீரனுக்குப் பேசத் தெரிந்தால், இவ்வாறுதான் உக்கிரமாகவும், ரோஷமாகவும், அகங்காரமாகவும் பேசியிருப்பாரோ?

சோற்றுக் கைத் தழும்பிலே, ஒரு சொட்டுக் கண்ணீர் தெறித்தது; சிதறியது!

மனிதர்களுக்குள் எந்தச் சாதி வித்தியாசமும் கிடையாதென்று காந்தி மகாத்மா படித்துப் படித்துப் பாடம் சொல்லித் தரவில்லையா?

ஆனாலும், அந்தக் காலத்தில், ஒரு கட்டத்தில், சேரிச்சாம்பான், செட்டித் தெருவில் வாசலோரமாக நடந்து செல்லப்போக, அதற்குத் தண்டனையாக, அன்பின்றி, ஈவிரக்கமின்றி, வாசலிலிருந்த பூவரச மரத்தில் கட்டி வைத்து, திருக்கை மீன்வால் கொண்டு அடிஅடியென்று அடித்துப்போட்ட அதே 'சூனா பானா' வை நீதிதேவன் சந்நிதானத்திலே நிறுத்தி வைத்து அபராதம் கட்டச் செய்த புள்ளி ஆயிற்றே இந்தச் சாம்பான்? சாம்பான் ராஜ்யத்திலே, அவர்தான் ஆறுகரைத் தலைக்கட்டிற்குத் தலைமைப் புள்ளி. கிழக்கே தாராடிப் பொட்டல்காட்டு வெளிதொடங்கி, மேற்கில் காளி ஆத்தா கம்மாய் முடியவும், வடக்கே வாஞ்சி அய்யன் நஞ்சைத்தாக்கிலிருந்து, தெற்கே செட்டிமார் சுடுகாடு வரையிலும் அங்கங்கே தொட்டும் தொடாமலும், பட்டும் படாமலும், அங்கீகாரம் பெற்ற வாய்மையைப் பரவியும் விரவியும் வாழ்ந்து வருகின்ற நாற்பத்தெட்டு குடிகளுக்கும் இவரது வாக்குத்தான் வேதம்; வேதவாக்கு! மயிர் பிளந்து நியாயம் வழங்குவதில் மன்னர்.

பாரதி கனவு கண்டாரே, 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்று! அந்த மன்னர் ரகம்! இயற்கைத் தாயின் மண் மடியிலே உழைத்து உழைத்து, உள்ளத்தை உயர்த்திக் கொண்ட சாம்பான், தன் அருமைத் திருமகன் வீரமணியை அவன் விருப்பப்படி விவசாயப் பட்டம் பெறவும் செய்துவிட்டார் அல்லவா? சாம்பான் என்றால், சாம்பான்தான்! ஒரு கெட்ட பழக்கம் உண்டா? மூச்! ... குடித்தால், தண்டனை என்று ராசாங்கம் விதி விதித்தது ஒரு பக்கம் இருக்கட்டும்! இங்கே, சாம்பான் ஆளுகைக்கு உட்பட்ட எல்லைக்குள் பறைச்சேரி ஆட்கள் யாருமே குடிக்கக் கூடாது; அதாவது, கள், சாராயம் அல்லது, மது எதையுமே குடிக்கக் கூடாது! இது, சாம்பான் சட்டம்! நாளைக்கே, மதுவிலக்கு ஒருவேளை தளர்த்தப் பட்டாலோ அல்லது நீக்கப்பட்டாலும் கூட, இந்தச் சேரிப்புறத்தில் யாருக்குமே குடிக்க அதிகாரம் இருக்காது!

சாம்பான் சிரித்தார்; மெய்மறந்து சிரித்தார்; மெய்யை மறக்காமல் சிரித்தார்; இனம் விளங்கியதும், இனம் விளங்காததுமான ஒரு தவிப்புடன் ஏக்கத்துடன் ஆதங்கத்துடன் விம்மிக் கொண்டே சிரித்தார். 'காந்தி மகாத்மா!...' தலையிலே 'லேஞ்'சைக் கொய்து 'முண்டாசு' சுற்றியவர், மறு இமைப்பில் அதை அவிழ்த்து ஏனோ ஆத்திரத்துடனும், ஆவேசத்துடனும் இயலாமையுடனும் எட்டத்திலே

வீசி எறிந்தார்; வெளிச்சத்தில் செய்திப் பத்திரிகையை மீண்டும் புரட்டினார்.

வெளியே, அட்டகாசமாகவும், நிர்த்தாட்சான்யமாகவும் கை கொட்டிச் சிரிக்கிறது இருள்.

* * *

புது வீடு என்றால், சேரியைப் பொறுத்தமட்டில், அது சாம்பான் வீட்டைத்தான் குறிக்கும். சங்கராந்தியன்றைக்குப் புதுமனை புகுவிழா நடப்பதாக ஏற்பாடு, மின்சார இணைப்பு நடந்து முடிந்தால், முடிந்தது வேலை.

அங்கே, வேப்பந்தூரடியில் இப்போது காந்த விளக்கு எரிந்தது.

காந்தி ஜயந்திக்கான முன் ஏற்பாடுகள் சுறுசுறுப்பாக நடைபெறுகின்றன.

விழாவின் நாயகரான காந்திஜிதான் முதன் முதலில் தயாரானவர்.

தோரணங்கள் கண்களைப் பறிக்கின்றன.

இசை உபகரணங்கள், கொம்பு தப்பு தாளம் என்று சர்வ சுதந்திரத்தோடு அணிவகுத்தன.

சாம்பானுக்குக் 'குடிக்காணியாட்சிப் பாத்தியதை' கொண்ட தோப்புக்களினின்றும் வாழைத்தார்கள், மொட்டை வண்டிகளில் வந்திறங்கின; சுமங்கலிக்கோலம் ஏந்திய ஏந்திழைகளின் பாவனை பிரதிபலித்தது.

"அப்பாலே, இன்னம் என்ன சோலி மிச்சம் சொச்சம் இருக்குது, வேலப்பா?" என்று அதிகாரத் தோரணையில் வினவினார் சாம்பான்.

"வெத்தலை-பாக்கு, சந்தனம் வாங்கனுமுங்க, பெரியப்பா!" என்று மரியாதை பளிச்சிடப் பதில் சொன்னான் வேலப்பன். குடிச் சிறையிலிருந்து தன்னை விடுதலை செய்து, தன்னையும் தன் குடும்பத்தையும் காத்த புண்ணியவானுக்குக் காட்டுகின்ற 'நன்னி'. அந்த மரியாதையில் முகம் பார்த்திருக்கலாம்.

"பிஸ்கோத்தும், மிட்டாயும் வாங்க வேணும்."

"பெரிய மனுசங்களுக்குக் கொடுக்கத்தானே, பெரியப்பா?"

"மனசாலே உயர்ந்த பெரிய மனுசங்களுக்கும் கொடுப்போம்; மனசளவிலே உயரப் பழகிக்கிட்டு வர்ற நம்மளை மாதிரி ஆளுங்களுக்கும் கொடுப்போம்!"

"சவாசு! அப்படியானா, உண்டனவே வாங்கிக்கிடலாம். கங்காணி ஐயாதான், சுளைசுளையாய் நூத்தியொரு ரூபா காந்திச் சாமியோட விழாச் செலவுக்குக் தந்திருக்காரே?"

"கங்காணி ஐயா பணம் தந்தது வாஸ்தவந்தான். ஆனா, அந்தப் பணத்தை நான் தொடப் போறதில்லே!"

"ஏங்க, அந்தக் காசை நாம தொடப்புடாதுங்களா?"

"ஆமாப்பா; தொடத்தான் படாது!"

"அது பாம்புங்களா, பெரியப்பாரே?"

"ஊம்; அந்தப் பாம்பு, நல்லதா, கெட்டதான்னு குணங்குறியைத் தெரிஞ்சுக்கிறவரைக்கும், அதை நான் தொடவே மாட்டேன்! காந்தி விழாச் செலவுக்கு, வளமைப்படி நானே செலவழிச்சுக்கிடுவேன்; காந்தி தெய்வம் தந்த பணத்தை, அந்த மகராசருக்குச் செலவழிக்காமல், பின்னே வேறே யாருக்குச் செலவழிக்கிறதாம்?"

வானக்கரையில், கண்ணுக்குச் சரிவரப் புலப்படாமல், ஆகாயக் கப்பல் ஒன்று, மெல்லிய ஓசை பரப்பி நீந்திக் கொண்டிருந்தது.

"சாமான் சட்டு அம்புட்டுத்தானே, மூத்தவுகளே?" என்று குறுக்கே பாய்ந்தார் முத்தரசன்.

காந்திப் புன்னகையை வெளியிட்டார் சாம்பான். "யாபகம் வந்தால் சொல்லப்பா, முத்தரசா!...." என்றார்.

"மாலை, கீலை வேணுங்களா?" என்று கேட்டவன், பொடியன் பொன்னப்பன்.

"மாலைதான் வேணும்; 'கீலை' வேனாம்!" என்றார் சாம்பான். சிரிப்பின் சலசலப்புக்கு ஊடே காலையிலே, சாயரட்சை மாலை வாங்கியாந்திட்டேன்; ஒரு மாலை, நம்ம காந்திசாமிக்ு

இன்னொண்ணு, நாளைய விழாவுக்குத் தலைமை தாங்கிறவங்களுக்கு!" என்று விவரம் கூறினார்.

"பெரியவுக கூட்டத்துக்குத் தலைமை தாங்க யாரைப் போடப் போறாகளாம்" - அஞ்சலைப் பாட்டி.

"அக்கரைச் சீமையிலேயிருந்து இப்பத்தான் பிறந்த மண்ணை நாடி வந்து குதிச்சிருக்கிற நம்ம கண்டிக் கங்காணியைத்தான் போடலாம்னு ரோசிச்சிருக்கேன்! நம்ம ஆளுங்களுக்கு இது சம்மதமில்லைன்னா, மனசை விட்டுப் பயப்படாமல் சொல்லிப்புடலாம்; உங்க இஷ்டப்பிரகாரம் வேறே ஒருத்தரைப் போட்டுக்கிடலாம்!"

"அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லேங்க; நீங்க நல்லதைத்தான் செய்வீக; அதிலே, நாயமும் கட்டாயம் இருக்கும்; ஆனபடியினாலே, கங்காணியையே உங்க மனசுப்படி விழாவை நடத்திச் தரச் சொல்லுங்க" பற்பல குரல்கள். ஒரே குருலாக ஒருங்கிணைந்து, ஒருமைப் பட்டு ஒலித்தன.

"சரி, சரி, காரியங்களைச் செஞ்சுக்கிட்டிருங்க; பசியாறிட்டு ஓடியாரேன், எங்க வீரமணி இப்பவாச்சும் திரும்பியிருப்பானோ, என்னமோ? சரி, சரி, நான் வரேன்!" - புறப்படலானார் சேரித் தலைவர்.

* * *

வட்டிற்சோறு ஆவி பறக்கிறது; அகல் விளக்கின் சன்னமான ஒளியில், ஆவியின் புகை சன்னமாகச் சுற்றிச் சுற்றி அலைகிறது.

"உருட்டின சோத்துக் கவளத்தை லபக்னு வாயிலே போட்டுக்கிடாமே, நேரங்கெட்ட இம்மாம் பொழுதிலே கூட சொப்பனம் கண்டுக்கிட்டே இருந்தாக்க, அப்பாலே, ஒங்க மேனி என்னாத்துக்கு ஆகுமாம்?" - அங்காளம்மை உரிமை பூண்ட உறவில் வருந்தினாள்.

"வாழ்க்கையே சொப்பனம்தான் அப்படின்னு ஒரு சித்தர் பாடியிருக்கார்; அந்தச் சொப்பனத்தையே வாழ்க்கையாக்கி விளையாட வேணும். விளையாட்டுக்காட்ட வேணும்னுதான் நான் சதா சொப்பனத்திலே மூழ்கிக் கிடக்கேனாக்கும்!"

சோற்றுக் கவளங்கள் விரைந்தன.

தண்ணீர்க்குவளை காலி.

"கச்சப் பொடிக் குழம்புக்கு உப்பு திட்டம்தானுங்களே, மச்சான்காரவுகளே."

"ஓ! உப்பு பத்தாட்டி நான் ஒன்னை விட்டீருப்பேனா?"

"ஒங்களை மாதிரிதான் ஒங்க தலைச்சன் வீரமணிப் பயலும்!"

"பலே! பலே!"

கடைக்குட்டி வாண்டு கரவொலி எழுப்புகிறான். நாளைய காந்தி விழாவை அமர்க்களப்படுத்த இவன் ஒருவனே போதும்!

அப்போது -

திட்டிவாசல் வெளியில், சைக்கிள் மணிச் சத்தம் கேட்கிறது.

"வெரசாய்ப் போய்ப் பாரேன்; முக்காலும் நம்ப ராசாவாத்தான் இருக்கோணும்; இப்பவே, நம்ப செல்வம் வீரமணியோட மனசையும் கண்டு தண்டிக்கிணு, அவனோட கண்ணாலத்தை இந்த ஐப்பசிக் கடுத்தத்திலேயே நடத்திப்பிடலாம்; அப்பவே, புது வீட்டுக்கும் குடி புகுந்திடலாம்! ம்... சல்தியா ஓடுடி, புள்ளே!"

இருட்கன்னி நெற்றியில் இட்டுக் கொண்டிருப்பது இரத்தத் திலகமா, என்ன?

"மகனே, வீரமணி"

அங்காளம்மை பெற்ற பாசம் துடிதுடிக்கக் கதறுகிறாள். வீரமணியின் முகம் ரத்த விளாராக இருந்தது!

## 3

அங்காளம்மை, தன் மகனின் முகத்தைப் பார்த்து அரற்றினாள்.

"என்னப்பா நடந்திச்சு? நானும் ஒன் ஆத்தாளும் தொட்டுத் தொட்டு அழகு பார்த்து, மாறி மாறி முத்தம் கொடுத்து ஆனந்தமடைஞ்ச உன் கன்னங்க ரெண்டிலேயும் ரத்தம் பீறிடுதே?" - யாரப்பா உன்னை இப்படி ஈவு இல்லாம, இரக்கம் இல்லாம அடிச்சுப் போட்டது? ... ஊம், சொல்லு வீரமணி, சொல்லு!" - மூர்த்தண்யமாகப் பெற்ற பாசம் சீற முழங்கினார் சேரிச் சாம்பான். கண்கள், மிளகாய்ப் பழங்களாகச் சிவந்தன; சுடுசரம் சுடுகிறது; வழிகிறது.

"வாயைத் தொறந்து பேசுடா, எந் தங்கமே!" - தாய் அலறுகிறாள்; கதறுகிறாள்.

"அப்பாரே, கேட்டுக்கிடுங்க; நடப்புப்படி சொல்லுறேன். அடிநாளையிலே, நானும் நம்ம கங்காணி ஐயா மகள் செண்பகமும் காளி ஆயி ஒழுங்கை மணலிலே கமுக்கமாகச் சந்திக்சுக்கிட்டு, மணல் வீடு கட்டி, புருசன் பெண் சாதி விளையாட்டு விளையாடுவோம். ஒன் ஃபைன் மார்னிங்... ம்... வந்து... ஒரு அழகான காலைப் பொழுதிலே, அது மாதிரியே நானும் செண்பகமும், புருஷன் பெண்டாட்டி விளையாட்டு விளையாடினப்ப, எங்களுக்குள்ளே சண்டை மூண்டிடுச்சு; கணவன் மனைவின்னா, சண்டை சச்சரவு வாராமல் இருக்குமுங்களா? இருக்கலாமுங்களா? எங்களுக்குள்ளாற சண்டை வந்ததாலே, என்னோட அது செண்பகம் டூ, போட்டுடுச்சு! ... ஆனா, அந்தச் சம்பவத்துக்குப் பிறகு, நானும் செண்பகமும் சந்திக்கவே வாய்க்கல்லீங்க; அது அக்கரைச் சீமைக்குப் போயிடுச்சு. இப்ப, நானும் படிப்பை முடிச்சு இங்கிட்டு பிறந்த மண்ணை மிதிச்சேன்; செண்பகமும் இப்ப திரும்பிடுச்சு, செண்பம் பிஞ்சுப் பிரயாத்திலே என்னோட டூ போட்டுட்டுப் பிரிஞ்ச அந்தத் துயரத்தை இன்னைக்கு வரைக்கும்கூட, என்னாலே மறக்கவே முடியல்லீங்க! அந்தத் துன்பம் என்னோட அன்பான நெஞ்சிலே, செண்பகம் கொலு இருக்கிற என்னோட பாசம் மண்டின மனத்திலே ஒரு வடு கணக்கிலே ஏற்பட்டு உறுத்திக்கிட்டே இருந்திச்சு. அதனாலே, எப்பாடு பட்டாச்சும், செண்பகத்தை சமைஞ்சு பக்குவமடைஞ்சிட்ட செண்பகத்தைக் கண்டு பேசி, என் கூட போட்டிருந்த டூ வைக் கலைச்சு என்னோடே அந்தச் செண்பகத்தை ராசி ஆகிப்பிடச் செஞ்சிட வேணும்னு தீவிரமான வைராக்கியம் கொண்டேன்; என் ஆசை கூடிவந்திச்சு; காலமும் கை கூடிச்சு; செண்பகத்தைச் சந்திச்சேன், அந்தியிலே; என் மனசைத் திறந்து காட்டினேன்; செண்பகம் ஆனந்தக் கண்ணீர் விட்டுச்சு! வீரமணி! ... நீங்களும் நானும், புருஷன் பெண்சாதி விளையாட்டு, விளையாடினப்ப, நான் உங்களோட 'டூ' போட்டேன்; இத்தனை வருஷம் கழிச்சு, நான் உங்க கூட போட்ட அந்த 'டூ' வைக் கலைச்சு நான் உங்களோட 'ராசி' ஆகணும்னா, நீங்களும் நானும் மறுபடியும் நிஜமாகவே புருஷன் பெண்சாதி ஆகிப்புட வேணுமாக்கும்! என்று செருமிச்சு! என்னோட நெஞ்சத்துக் கனவை இனம் புரிஞ்சுகிட்டாப்பிலே, அது அந்தச் செண்பகம் பேசினதும், நானும் அப்பவே 'சரி' ன்னு என் சம்மதத்தைச்

சொல்லிட்டேன்! செண்பகம், வானத்துக்கும் பூமிக்குமாகக் குதியாட்டம் போட்டுச்சு; 'டு' கலைஞ்சுது; நாங்க ரெண்டு பேரும் 'ராசி' ஆனோம்! ... மகமாயி சந்நிதியிலே நானும் செண்பகமும் விதியையே சாடிட்ட பெருமிதத்தோட ஜோடியாய் நின்னு கும்பிடு போட்டுக்கிட்டிருந்தோம்! அப்பத்தான், மகளைத் தேடிக்கிட்டு வந்தார் எங்க ஒசத்தியான கங்காணி! அவரேதான் இப்படி என்னை சவுக்குமிளாறினாலே அடிச்சுப் போட்டார்! செண்பத்தோட கண்ணீருக்காக, என்னோட செண்பத்தோட அந்தப் புனிதமான உயர்வான சத்தியமான தருமமான அந்தக் கண்ணீருக்காக நான் மௌனப்பிண்டம் ஆயிட்டேன். கங்காணிக்கும் 'மாப்பு' கொடுத்தேன்!... வினாத் தெரிஞ்ச காலந்தொட்டு, என் நெஞ்சைத் தொட்டு, என் நெஞ்சிலே கண்கண்ட தேவதையாகக் குடியிருக்கிற அந்தப் பரிசுத்தமான நெஞ்சைச் சுமந்துக்கிட்டு இதோ, உங்க சந்நிதானத்திலே வந்து நிற்கிறேனுங்க அப்பாரே!"

வாழ்ந்து காட்டிய சேரிச் சாம்பானின் குழிவிழுந்த கண்களின்றும் கண்ணீர் முத்துக்கள் குழி பறித்துச் சிந்தின.

அது ஆனந்தக் கண்ணீர்!

மாட்டுத் தொழுவத்திலிருந்து பிணைக் கயிற்றைக் கட்டறுத்துக்குக் கொண்டு வெளியே ஓடி வந்து குதித்தது செவலைக்கன்று.

பாதிச் சோற்றோடு எழுந்த சாம்பான், கை கழுவியானதும், நேராகக் காந்தி அண்ணலைச் சந்தித்தார். அண்ணலின் திருச்சந்நிதியில், அகல்ஒளியில் மண்டியிட்டார். காலடியிலே திருக்கை வார் மண்டியிட்டுக் கிடந்தது.

"மகாத்மா! நீங்க வேடிக்கையான இந்த மனுசங்களோட நெஞ்சுகளிலே விதைச்சிட்டுப்போன அன்புவித்து இப்ப அபூர்வமாய், அதிசயமாய் மூளை கிளம்ப ஆரம்பிச்சிடுசின்னுதான் தோணுது!... கேட்டீங்களா, எங்க வீரமணியோட கதையை?... அன்புக்குச் சாதி இல்லே, மதம் இல்லே அப்படி இப்படின்னு நீங்க ஏகமாச் சொல்லிட்டீங்க! பரிசுத்தமானது; நியாயமானது; யதார்த்தமானது என்கிறதுக்கு இந்தப் பறைச்சாம்பான் மகன் வீரமணியும், அந்த ஒசந்தகுடிக் கங்காணி மகள் செண்பகமும் சாட்சியாய் நிற்கிறாங்க!

ஆனா, கங்காணிக்குப் புத்தி சொல்லிக் கொடுக்கிறதுக்கு, நீங்க இப்ப இருந்திருக்கப்படாதுங்களா? ... ஐயாவே, என்ன கமுக்கமாய்ச் சிரிக்கிறீங்களே? ... ஓ, எங் காலடியிலே கிடக்குதே, அந்தத் திருக்கைமீன் வாரைக் கண்டா, அப்படிச் சிரிக்கிறீங்க?... என் மகனை அடிச்சவன் எந்தக் கொம்பனாக இருந்தாலும், அவனைப் பதிலுக்குப் பதில் அடிக்காம விடவேமாட்டான் இந்தச் சாம்பான்! ஆனா, நீ பாடம் சொல்லித் தந்திருக்கிற அந்த அன்புதான் என் கைரெண்டையும் கட்டிப் போட்டுப்புடுச்சீங்களே, சாமியே? ... இப்ப, இந்த ராத்திரி வேளையிலே, நானும் எம்மகனும் அந்த உயர்வான கங்காணி பங்களாவுக்குப் புறப்படுறோம்; உங்களையும் உங்க அன்பையும் துணையாய்க் கொண்டுதான் புறப்படுறோம்! போயிட்டு வாரோமுங்க தெய்வமே!"

வீரமணியின் அழகான கண்களில் கண்ணீர் நிறைகிறது.

இருதலைமணியன் பாம்பு மாதிரி சுருண்டு நெளிந்து கிடந்த திருக்கை மீன் வாரை, தூர வீசி எறிந்தார் சாம்பான். "மகனே! புறப்படு!"என்றார்.

"நானும் வாரேனுங்க, மச்சான்காரரே"

"ஓ!"

பட்டி வண்டி புறப்பட்டது.

* * *

கண்டிக் கங்காணியன் பேரழகுப் பெருமனையின் தலைவாசலில்,மின்னொளி வெள்ளத்தில், மக்கள் நெரிந்தனர்.

புறப்படத் தயாராக நின்ற கங்காணியின் ரேக்ளா வண்டிக்குக் குறுக்கே பாய்ந்து நின்றது சாம்பானின் பெட்டி வண்டி.

"அடடே, சாம்பானா? வாங்க! வாங்க!!" என்று வரவேற்றார் கங்காணி. "உங்களைத் தேடித்தான் இப்ப புறப்பட்டுகிட்டு இருந்தேன்"என்று தொடர்ந்தார்.

"என்ன விசயம், சொல்லுங்க" - சாம்பானின் பேச்சி நெருப்பு தூள் பறந்தது.

"நீங்க வந்த விசயத்தை முன்னாடி சொல்லப்புடாதா?"

"காந்தியோட பிறந்த நாள் கொண்டாட்டச் செலவுக்காக நீங்க நன்கொடையாய்க் கொடுத்த நூத்தியொரு ரூபாயை உங்ககிட்டவே

திரும்பக் கொடுத்திட்டுப் போகவேணும்னுதான் வந்தேன். காந்தி மகாத்மா செத்துப் போயிட்டதாக நான் இன்னமும்கூட நம்பாமல்தான் இருந்துக்கிட்டிருக்கேன்! ... இந்த நிலைமையிலே, ஊரார் மெச்ச வெளிவேஷம் போடுற உங்களை மாதிரி போலி மனுசங்களோட நன்கொடையை காந்தி விழாவுக்கு உபயோகப்படுத்தினா, அது தெய்வத்துக்கே அடுக்காது! காந்தி மெய்யாலுமே செத்துத்தான் போயிட்டார்னு நான் கூட நம்பத்தான் நேரிடும்!... அப்பாலே?"

"ஊம், அப்பாலே?"...

"என் மகன் வீரமணிக்கு உங்க மகள் செண்பகத்தைப் பெண் கேட்கவும் வந்தேனுங்க, கங்காணி ஐயாவே"

கங்காணி விம்மினார்; உணர்ச்சிவசப்பட்ட நிலையிலே விம்மினார். "சாம்பான், ஒங்களுக்குக் கோடிப் புண்ணியம் கெடைக்கும்; காந்தி பிறந்த நாள் விழாவுக்கு நான் தந்த நன்கொடையை மட்டும் என்கிட்டே திரும்பத் தந்திடாதீங்க!... என்னையும் ஒரு மனிதனாகத் தலைநிமிர்ந்து நடமாட ஒரு சந்தர்ப்பத்தையும் கொடுத்திடுங்க!... என்ன, சரிதானே? ... ம்... வீரமணி! என்னோட கொஞ்சம் உள்ளே வாங்க!" என்று வீரமணியை அழைத்தார். "சாம்பான், நீங்களும் வாங்க; அங்களாம்மை! நீங்களும் வாங்க!" என்றார்.

அப்போதுதான், செண்பகம் கண்களை மெள்ளத் மெள்ளத் திறந்தாள்.

வீரமணி செருமினான்.

"வீரமணி, என்னோட மகளை உங்களோட அன்புக் கைகளிலே ஒப்படைக்கப் போற நல்ல சேதியைச் சொல்லத்தான் நான் உங்களைத் தேடிப் புறப்பட்டேன். தெய்வம் தேடி வர்றமாதிரி, நீங்களே வந்தீட்டீங்க... உங்களுக்குச் சொந்தமாக இருக்க பொசிப்பு இல்லாத உயிர் வேண்டவே வேண்டாம்னு எங்க பாதாளக் கேணியிலே விழுந்த எம் மகள், உங்களுக்காகவே செத்துப் பிழைச்சிருக்காளுங்க, வீரமணி! அன்பின் சட்டம் சரணாகதி அடைகிறதுதான் அப்படின்னு காந்தி சொன்ன பேச்சோட உண்மையும் நியாயமும் தருமமும் இப்பத்தான் எனக்குப் புரிஞ்சுதுங்க, வீரமணி!" விம்மி வெடிக்கிறார் கங்காணி.

* * *

*காந்திஜியின் பிறந்த நாள் விழா கோலாகலமாக நடைபெறுகிறது.*

*தாயின் மணிக்கொடியின் பட்டொளி நிழலில் கொலு வீற்றிருந்தார் அண்ணல் காந்தியடிகள்.*

*விழாத் தலைமையாளர் கண்டிச் சீமைக் கங்காணி எழுந்தார்; காந்திஜிக்கு உணர்ச்சிவசப்பட்ட நிலையில் மாலை அணிவித்தார். திரும்பினார். "மகாஜனங்களே! ஊர் உலகத்தைப் போலே நானுந்தான் காந்தி செத்துப் போயிட்டார்னு நம்பிக்கிட்டிருந்தேன்; ஆனா, காந்தி செத்துப் போயிடல்லே என்கிற ஒரு சத்தியமான உண்மையை நேத்து ராத்திரிதான் நான் புரிஞ்சுக்கிட்டேன்? இந்தப் புதுப் பாடத்தைச் சொல்லிக் கொடுத்தவளே என்னோட அருமைப் பொண்ணு செண்பகம்தான்! திருவாளர் சாம்பான் அவர்களின் மகன் வீரமணிக்கு சொந்தமாவது என் மகள் செண்பகத்தின் உயிர் என்கிற தெய்வ நீதியையும் நான் தெரிஞ்சுக்கிட்டேன்! என்னோட வீட்டிலேயிருந்து இந்தக் கலியாணத்தை நான் நடத்தி வைக்கவேணும்னா, காந்தி மகாத்மா மறுபடியும் புதிதாகப் பிறந்துதான் தீரணும்! ஆனதாலே, நானும் சேரிவாசிகளிலே ஒருத்தனாக மாறி, இந்தக் கலியாணத்தை, காந்தி பிறந்த இந்தப் புனித நாளிலே நடத்தி வைக்கப் போறேன். அன்பு உள்ளம் கொண்ட உண்மையான காந்தி பக்தர்கள் புது மணத் தம்பதியை அன்போட வாழ்த்தும்படியும் கேட்டுக் கொள்கிறேன்!"*

*அவர்கள் மட்டுமா வாழ்த்துகிறார்கள்.*

❑

# தாயின் மணிக்கொடி

அதோ, எக்ஸ்பிரஸ்.

சென்னை - கொச்சி எக்ஸ்பிரஸ்,

எக்ஸ்பிரஸ் ஓட்டமாகவே ஓடிக்கொண்டிருக்கிறது!

அவன்....?

யாரோ ஒருவன்!

என்னவோ ஒரு பேர்!

ஏதோ ஓர் ஊர்!...

ஊர் என்றவுடன் -

'யாதும் ஊரே, யாவரும் கேளிர்!' என்று பாட்டு ஓட்டமாக ஓடிவரவேண்டாமோ?

அவன்... கிடக்கிறான்!

எக்ஸ்பிரஸ் வேகம் அதிகமாகிறது. ஜாக்கிரதை!

நாட்டிலே இப்போதெல்லாம் 'ரோஷ' உணர்ச்சியைப் பற்றி ரொம்பவும் தூக்கலாகவே பேசப்பட்டு வருகிறது.

அதனால்தானோ என்னவோ, அந்தத் துரிதவண்டி கொச்சியைக் குறிவைத்துப் பூஞ்சிட்டாகப் பறக்கிறது; பறந்துகொண்டிருக்கிறது. 'சற்றே விலகி இருக்கிறேன்!' என்று சொல்லாமல் சொல்லி, தமிழ்மண் சற்றே ஒதுங்கியிருக்க வேண்டும்!

இங்கே, அவன் மனமும் ஓடத் தொடங்கிவிட்டது. அவனுக்கு இன்னமும் 'ஸ்தலம்' கிட்டவில்லை. சென்னையில், சென்ட்ரல் ஸ்டேஷனில் தொடர்ந்த 'ஒற்றைக்கால் தவம்' மேலும் தொடர்ந்தது; தொடர்கிறது. பாதங்கள் கெஞ்சின்; கொஞ்சின.

பாவம், உமையவள்!...முன் ஒரு காலத்திலே, ஒற்றைக் கால் தவம் செய்தாளாமே? அன்னையின் கால்கள் எப்படி எப்படியெல்லாம் வலித்திருக்கும்?

அவன் தவித்தான்; பாசத் தவிப்பாக இருக்கலாம்; பாசத்தின் தவிப்பாகவே இருக்க வேண்டும்! பட்டணத்தில் சாஸ்திரி நகரில் பெண்டு பிள்ளைகள்! எல்லாம் நண்டும், சுண்டும்! 'மஹேஸ்வரனே, நீயும் பிள்ளைக் குட்டிக்காரன்தான்; பாசம் படுகிறபாடு உனக்கும் தெரியத்தான் வேணும்! அதனாலேதான், உங்கிட்டே ஒரு சின்ன யாசகத்தை, ரொம்பச் சின்னதான ஒரு பிச்சையைக் கேட்கணும்னு இப்ப என்புத்திக்குத் தோணுது. என்னோட உசிரை இன்னும் ஒரு ஆறேழு வருஷத்துக்காச்சும் கட்டிக் காப்பாற்றி என் கையிலே ஒப்படைச்சிடுவியா, அப்பனே அம்மையப்பனே? உன் பெண்களுக்குக் கல்யாணம் காட்சி நடக்கவேணுமே!' அவனுக்கு மட்டுமல்லாமல் அவனுடைய கண்களுக்கும் அழத் தெரிகிறது!... வெள்ளம்!...

காலம் ஓடுகிறது.

ரயிலும் ஓடுகிறது.

கொட்டாவி பீறிடுகிறது.

இப்போது நெஞ்சும் வலிக்கத் தொடங்கவே, ஆற்றாமை மேலிட்டது. பாதங்களை மாற்றிப் போட்டு நிற்கக்கூட முடியவில்லையே? 'இந்நேரம் அரசாங்கத்துச் செலவிலே முதல் வகுப்பிலே ஜாம்ஜாம்னு பிரயாணம் செய்ய வேண்டியவன், இப்ப எப்படியெல்லாம் பிராண அவஸ்தைப்பட வேண்டியதாயிடுச்சு! கொச்சியிலிருந்து நேற்றைக்குத் தகவல் கிடைச்சிருக்குமே? அரசு முறையிலே மனிதர்கள் இயந்திரமாக அலுவல் பார்த்தாலும், வயது ஐம்பத்தெட்டு முடிந்துவிட்டால், உடனே பதவி ஓய்வு கொடுத்துவிடுவார்கள்!' அவனுக்கு இப்போது சிரிப்புச் சிரிப்பாக வந்தது. 'நாளை மறுநாள் எனக்கும் ஓய்வு கிடைச்சிடும். இந்த ஓய்வைக் கொண்டாட, என்னைக் கூப்பிட்டிருக்காங்க. நாளைக்கு நான் "நன்னி" பறையனும்!' விதியோடு விளையாடுகிறவனுக்குச் சிரிப்போடு விளையாடத்தானா தெரியாது...?

கோடைக்கும் குளிர் அடிக்குமோ...?

தேய்பிறை நிலவு அதோ, நெடிதுயர்ந்த தென்னை மரங்களில் கண் சிமிட்டுகிறது.

கண்மூடி மௌனியாக மகிழ்ந்த அவனது ரசனை மனம் வாசனை மல்லியாய் மணக்கிறது.

என்னவோ சத்தம் கேட்டது.

ஒலவக்கோடு!

பின்சாமம் கொடிகட்டி உறங்கிய 'சமயம்' அது என்றாலும், 'ப்ரயாணம்' விழித்திருக்க வேண்டாமா?

கிழவி ஒருத்தி இறங்கினாள்.

எங்கோ ஓர் இடம் காலி ஆகியிருக்கக்கூடும்.

'ஞான் சோதிக்கட்டே?'

'ஐய்யடா!'

இடப் பிரச்சினையில், பீடிகளின் முணுமுணுப்புகள் வந்த சுவடு தெரியாமலே தேய்ந்து விடுகின்றன.

காலியான இடம் அவனுக்காகவே காத்திருக்கவேண்டும்; முண்டியடித்துக் கொண்டு முன்னேறியவன், 'சரணம் சாமியே, ஐயப்பா!' என்று சோர்ந்து உட்கார்ந்தான். நாவறண்டது; கோயம்புத்தூர் சந்திப்பில் காப்பி சாப்பிட்டதோடு சரி. காலாறத் தரையிலே கால் பாவி நின்று காப்பியைச் சுவைத்தும் ருசித்தும் குடித்துக் கொண்டிருந்த நேரத்தில், அவன் உள்மனத்தில் ஆழமாகவே பதிந்து விட்டிருந்த சுதந்திர தினவிழாக் காட்சிகள் மறுபடி சட்டை உரித்துக்கொண்டு படம் எடுத்தன; படம் காட்டின. ஜங்ஷனில் கண்டெடுத்துப் பத்திரப்படுத்தின தாயின் மணிக்கொடி, மற்றும் காந்தி மகாத்மாவின் படங்கள் சட்டைப் பையில் இப்போதும் உறுத்தவே செய்கின்றன..! ஊம்!

சாயா வந்தது.

பைசா போனது.

ரயிலுக்குக்கூட பூங்குயிலாகக் கூவத் தெரிகிறது.

அவன் இப்போது நல்ல மூச்சு விட்டான். சென்னைக்கும் கொச்சிக்குமாக எத்தனை தரம்தான் கூடுவிட்டுக் கூடுபாய்ந்து கொண்டிருப்பான் அவன்! 'விடிந்தால், எல்லாமே விடிந்துவிடும்!' அசலான விதியைப் போலவே, அந்நியமான அவனுக்கும் சிரிக்கத்

தெரியும். நேரங்கெட்ட அந்நேரத்தில் அவன் மறுபடி 'எழுத்துக்காரன்' ஆனான். சிருஷ்டியின் கர்வம் அவன் நெஞ்சிலும் நினைவிலும் ஆலப்புழைப் பச்சை ரக ஏலக்காயின் மணத்தைக் கூட்டுகிறது! நினைவுகள் சிரிக்கவே, சுற்றிச் சூழ விழிகளைச் சுழலவிடுகிறான் அவன். இருந்திருந்தாற்போல், அவனிடம் ஒரு பதற்றம் மிஞ்சியது. அவன் அமர்ந்திருந்த பலகைக்கு அடியிலே கிடந்த அந்த முரட்டு மனிதனை அவன் மறந்துவிட மாட்டான்; மிதித்து விடவும் மாட்டான்!

*ஆஹா!*

*யார், அந்தப் பூவை...?*

*ஓ...!*

பூலோக ரம்பையாகத்தான் இருக்க வேண்டும். அவள் தான் உறங்குகிறாள்; ஆனால், அவள் அழகு உறங்கவில்லையே! நல்ல பருவம்; நல்ல வயது. சேர நல்நாட்டு இளம்பெண் அல்லவா? தமிழ்ப் பெண்மை குலுங்க, அடக்க ஒடுக்கமாகச் சாய்ந்து கிடந்தாள். அவளுடைய மார்போடு மார்பாக அணைந்து கிடந்த 'ஆண்குட்டி' உறக்கக் கிறக்கத்தில் பாலமுதம் பருகிடத் துடிக்கிறது; தவிக்கிறது. பட்டு மேனியில் பட்டும் படாமலும் ஆடிவரும் தேனாகத் தவழ்ந்து கிடந்த 'முண்டு' ரொம்பவும் கெட்டிதான். மதி!...

அவனும் தவித்தான்; துடித்தான். 'சேச்சி எழுந்திருக்க மாட்டாளா? குழந்தையின் அச்சன் எங்கே கிடக்கிறானோ? பாவம்! அதற்கு ஞானப்பால் வேண்டாமே, பரமாரி அம்மே!'

'குட்டி' வீரிடுகிறது ...

அது, குழந்தை.

குழந்தையும் தெய்வமும் ஒன்றுதானாம்; ஒன்றேதானாம்...! 'ஒன்றே குலம் ... ஒருவனே தேவன்!' நினைப்பதற்கென்று இப்படிச் சில விதிகள்...!

அவன் இப்பொழுது 'பச்சைமண்' ணின் செப்பு வாயைத் தேடினான். ஆனால், அவன் திருஷ்டியில் பட்டதோ, பட்ட மரம் தளிர்த்த மாதியான 'சௌந்தர்யமாய்' தரிசனம் ஒன்று. மெய்சிலிர்க்க, நினைவுகள் வீட்டுக்காரியிடம் தஞ்சமடைய, நல்லவேளையாக, அவன்

மெய் உணர்ந்தான். க்ஷணப்பித்தமான குற்ற உணர்வுக்காகக் கழிவிரக்கம் கொண்டு, நேத்திரங்களை வேறுபுறம் திருப்பினான்.

அங்கே:

யாரோ ஒரு 'சிர்ப்பக்காரன்' இன்னமும் 'அந்தக் காட்சி' யைக் கண்காட்சியாக்கி ரசிப்பதில் லயித்திருக்கிறானே...? எதிர் ஆசனப்பலகையில், தலையும், காலுமாக நீட்டிக் கிடந்த அந்தப் பெண்ணின் அந்தத் தாயின் கால் மாட்டில் நின்றுகொண்டிருந்த அந்த இளவட்டம். பிரயாணச் சாதனங்கள் வைப்பதற்குப் பயன்பட்டுப் பயனளிக்க வேண்டிய பலகையின் விளிம்பிலே இரு கைகளையும் ஊன்றி அணை கொடுத்தவனாகக் காட்சியளித்தான். அவனுடைய முகத்தில் நிழலாடிய 'மோக வெறி' கூடுதல் அடைந்துகொண்டே இருந்தது.

சே...!

உடம்பில் உறைந்திருந்த 'தணிப்பு' மாறி, 'சூடு' உறைக்கவே, கனைத்தான் அவன்.

மூச்!... அந்த் வெறியனுக்குச் சொற்பமாவது 'பேடி' உண்டாக வேண்டாமோ? ...பேடி! அவன் ஆத்திரப்பட்டான். 'சுத்தத் தள்ளிப்பொளி!'

அழகான தாயின் பூங்கரங்கள், அவளுடைய கச்சையின் பூவிலங்காக அமைந்த அடி முடிச்சை அத்தனை தூக்கக் கலக்கத்திலும் ஞாபகமாக இறுக்கிக்கொள்வதில் முனைந்தன; கண்கள் இன்னமும் விழித்துக்கொள்ளவில்லை. பிள்ளையைப் படுக்கை ஒண்டலில் மாற்றிக்கிடத்திவிட்டு, அவளும் இப்போது மாறிக் கிடக்க எத்தனம் செய்தாள். 'முண்டு' சீர் அடைந்து, சீர் பெற்றது. 'கஞ்ச மலர்ப்பாதங்கள்' சேலைக்கரையில் ஒளிந்துகொண்டன.

ஓ...!

எவ்வளவு நாணயமான அழகோடு அவள் தரிசனம் தருகிறாள்... அந்த அழகை நிதர்சனமான அழகென்றும் சொல்லவேண்டும்! அவன் எண்ணமிட்டான். குழற்கற்றையில் மூன்றாம்பிறையாகப் பூத்து மணம் பரப்பிய மல்லிகைப் பூச்சரம் எத்துணை கம்பீரமான தருமத்தோடும், சத்தியத்தோடும் அவளுடைய மாண்புமிக்க அழகைப் பிரகடனப்

படுத்திக் கொண்டிருக்கிறது! தாலிப்பொட்டின் புனித நிறச் சரடு பின்கழுத்தின் பூஞ்சை மயிர்த்தொகுதியில் வனவாசம் செய்திருக்கலாம்.

அவன் அந்தக் காமவெறியனை மறுபடி நோக்கினாள்.

ஆனால், அந்தக் காமுகனோ, இன்னமும் கூட அந்தப் பேரழகுச் சிங்காரியையே ரசித்துக்கொண்டிருந்தான்...!

கைந்நொடிப் பொழுது கழிந்தது.

என்ன அநியாயம்...!

அந்தக் காவாலிப்பயல் அவள் காலடியில் குந்தி, சில வினாடிகளுக்கெல்லாம் அவளுக்குப் பக்கத்தில் சாய்ந்துவிட்டான்!

அவனது ஆத்திரம் வளர்ந்தது... 'யார் இந்தப் பொறுக்கி...? இவன் அந்தப் பெண்ணோட "பர்த்தாவு" அல்லவே ! அவள் இவனுக்குப் "பாரியாள்" ஆகுவும் இருக்க முடியாது. இவன் யாராம்? அப்படியானால், அவளோட புருஷன் எங்கே?' தவிப்பும் ஏக்கமும் வளரத் தொடங்கின. 'ஒருவேளை, என் காலடியில் ஸ்மரணை தப்பிக்கிடந்த முரடன் தான் அந்தக் கேரளப் பைங்கிளிக்கு வாய்த்த காதல் கணவனாக இருப்பானோ?' அவனுடைய கைகள் துருதுருக்கின்றன! அந்தத் தறுதலைப் பயலை ஹிப்பி முடியைப் பிடித்து அலக்காகத் தூக்கி வெளியே வீசியெறிந்தால் என்ன...?

'பதினாலாம் ராவுத்தது மானத்தே!'

இந்நேரத்தில் ஏது பாட்டு? யாரோ, எங்கோ பாடுகிறார்கள்.

கேரளத்தின் கள்ளங்கவடு இல்லாத, குழந்தைத் தனமான இயற்கையின் லாவண்யத்திலும் சிருங்காரத்திலும் ஓர் அரைக்கணம் அவன் சொக்கி மெய்ம்மறந்திருக்கத்தான் வேண்டும்!

இருந்திருந்தாற்போல, என்னவோ அரவம், அரவம் மாதிரி சீறியது.

சபாஷ்!

அந்தப் பெண்தாய் தாய்ப்பெண் இனம் விளங்காத அந்தப் 'புதிய ஸ்பரிச'த்தின் தொட்டுணர்வை இனம் புரிந்து அறிந்து விழிப்புப்பெற்ற தவிப்பில், துடிப்பில், கோபத்தில் தட்டித் தடுமாறியவளாக வாரிச்

*சுருட்டிக்கொண்டு எழுந்து, அந்த மனிதமிருகத்தின் மிருக மனிதனின் ஹிப்பி முடியை எட்டிப் பிடித்து நெட்டித் தள்ளிவிட்டாள்... 'ஓளங்கள்' படத்திலே ஒரு கட்டத்திலே பூர்ணிமா கொடுங்களூர்ப் பகவதியாகச் சினந்து கொதித்தெழவில்லையா? அப்படித் தோன்றினாள் அவள்! 'சேட்டா!' என்று கூவி, அலறிப் புடைத்துக்கொண்டு ஓடிவந்தாள், கீழே காலடியில் கும்பகர்ணனாக உறங்கிக்கிடந்த முரடனை எழுப்பினாள். அவனை ஒட்டி உரசியபடி அவனிடம் என்னவோ 'பறை'ந்தாள். அவன்தான் அவளுடைய 'சேட்டன்.' சேட்டன் என்றால் இங்கே கணவன்தான்; அண்ணன் இல்லை!*

*லட்சணமான அழகிக்கு அவலட்சணமாக வாய்ந்த முரட்டுக் கணவன். கண்கள் இரண்டும் ரத்தமாகச் சிவக்க எதிர்ப்பக்கம் பாய்ந்தான்! ஆடு திருடிய 'கள்ளனாக' விழித்துக்கொண்டே, அங்கிருந்து தப்பிப் பிழைக்க முனைந்த அந்த அநாகரிகப் போக்கிரியை அவனது கழுத்தில் கையைக் கொடுத்து இழுத்து நிறுத்தினான்.*

*"ராஸ்கல்!" வாய்க்கு வந்தபடி திட்டிக்கொண்டே, பாரதத்தின் பாரம்பரியப் பண்பாட்டின் நன்றியை மறந்த அந்தப் பாவியை அடித்து நொறுக்கக் கைகளை ஓங்கினான்!*

*"நாயர்!...."*

*அவன் தடுத்தான்; மனிதத் தன்மையில் சிலிர்த்த மனிதாபிமானத்தோடு முரடனைத் தடுத்தான் அவன். "சேட்டன் என்னைச் சமிச்சு மாப்புத் தரணும்!" என்று எச்சரித்தவனாக, அழகியின் முரட்டுக் கணவனிடமிருந்து அந்த அசிங்கமான மனித மிருகத்தை விடுவித்துத் தன் பக்கமாக இழுத்து, அந்த மிருக மனிதனின் நாகரீகமான, நயமான, சிவப்பான கன்னங்கள் இரண்டிலும் மாறி மாறி மாற்றி மாற்றி அறை கொடுத்தான் அவன்! பட்டணமாக இருந்திருந்தால், இப்படிப்பட்ட அநியாயத்திற்குத் தண்டனை கொடுப்பதில் அவனுடைய பெண்டு பிள்ளைகளும் தோள்கொடுத்திருப்பார்கள்...!*

*மறுகணம்...*

*அடிப்பட்ட ஈனப்புலி, இப்போது அவன் மீது பாய்ந்தது!*

*அவன் சிரிக்கிறான்! அவனைத் தற்காத்துக்கொள்ள அவனுக்குத் தெரியும்!*

'அதர்மம்' மண்ணைக் கவ்விற்றி!

'மாத்ருபூமி' படபடத்தது; நாட்டின் அமைதியையும் ஒற்றுமையையும் பராமரிக்க வேண்டுமென்று பிரதமர் இமாசலப் பிரதேசத்தில் பொதுமக்களை கேட்டுக் கொண்டிருந்தார்!

மலையாளப் பொற்பாவை, இப்போது விதியாகவும், வினையாகவும் சிரிக்கிறாள்!

'ஞங்ஞள் மலையாளியாண; ஞங்களிண்டே ஸ்வந்தக் காரியங்கள்லே எடை படண்ட்ட ஆவச்யம் உண்டாக்க நிங்ஙள் ஆராண...?' அந்தப் பேடி, 'பேடி' கொண்டு, குனிந்த தலையை நிமிர்த்தாமல், அவனிடம் 'சோத்தியம்' கேட்கிறான்!

அவனைக் கேள்வி கேட்க இவன் யார்? அவனைப்பற்றி இவனுக்கு என்ன தெரியும்? என்ன புரியும்? அவனுக்கு ரத்தம் கொதிக்கிறது; தமிழனாகத் தலை நிமிர்ந்து நின்றான். 'நிங்கள் ஆராண?' விடை சொல்ல வேண்டாமோ...!

'ஞான் ஒரு இந்தியனாண' அவன் உணர்ச்சிகளின் பிழம்பாகி விம்முகிறான்!

அந்த ரௌடி எங்கே...?

கேரளத்தின் அன்பு பைங்கிளி கண்ணீர்த் தரிசனம் தருகிறாள்! அதோ... அதோ ....!

எக்ஸ்பிரஸ் ஓடிக்கொண்டிருக்கிறது!

அவனுடைய சட்டைப்பையில் ஊசலாடிய அந்தப் படத்திற்கு அப்போது மூச்சுத் திணறியிருக்க வேண்டும்...!

அது...அது... 'தாயின் மணிக்கொடி!' ...

❑

# பிடுக்கு மண்

ஸ்ரீமந் ஆனந்த நடராஜ மூர்த்திக்கு நவராத்திரி வந்துவிட்டதென்றால், கூத்தும் கொண்டாட்டமுமே! நவராத்திரியின்போது, அந்த ஒன்பது நாட்களிலும் நாளைக்கோர் அலங்காரமும், வேளைக்கோர் ஆராதனையுமாக ஏற்பான் அவன். அவன் 'கால் மாறிக் குனித்தவன்' அல்லவா? ஆண்டவனின் மகிழ்ச்சி வெள்ளம் அந்தக் கோயில் மடத்திலே ஆனந்த வெள்ளமாகத் திரை எழுப்பி, நுரை எழுப்பிப் படர்ந்து பரவும்; பரவி ஓடும்.

ஆண்டவனுக்குக் குதூகலமென்றால், ஆளப்பட்ட ஊருக்கும் ஊர் மக்களுக்கும் அந்தக் குதூகலத்தில் பங்கு இருப்பது இயல்புதான். ஆகவே, நவராத்திரித் தருணத்தில் பூவைமாநகர் விழாக்கோலம் ஏற்கும்.

இந்தப் பூவைமாநகரிலே 'பசை' மிக்கது செட்டித் தெரு, ஊரோடு ஊராகப் பசையாக ஒட்டிக்கொண்டது இது. இங்கே செட்டி மார்கள் ஒரே இனம். ஆனால் அவர்களுக்குள் 'புரப்' பிரிவுகள் மட்டும் பல உண்டு. இவற்றுள், 'ஆதியான் செட்டியார் புர' த்தவர்களுக்குக் குடிக்காணியாட்சிப் பாத்தியதை கொண்டது இந்த நடராஜர் மடம். ஆதியில் மடமாகக் கூத்தப் பிரனானின் படத்தை மட்டிலுமே கொண்டு விளங்கியது. இப்போது கோயிலாகிவிட்டது. நியமப்படி பூசனைகள் தூபதீபம் ஏற்று நடக்கும்.

இத்தகைய பரம்பரை, வழிபாட்டில் நவராத்திரிக் காப்புக் கட்டும், கடைசி நாளன்று நிகழும் வெள்ளி ரதப் பவனியும் எடுப்புமிக்கவை. முதலும் இறுதியுமான இவ்விரு நிகழ்ச்சிகளுங்கூடக் கோயிலை அடிமை கொண்டவர்களுக்கே உரிமை பூண்டிருந்தன. ஏனைய விழாக்கள், பண்டைய மரபுப்பிரகாரம் ஆளுக்கொரு மண்டபப் படியாக உபயம் ஆகும்.

பின், கூத்தன் கூத்தாடக் கேட்பானேன்?

* * * *

விடிந்தால், மகாளய அமாவாசை, புண்ணியகாலம். நவராத்திரி விழா ஆரம்பமாகிவிடும். துதியை திதி, உத்தரட்டாதி நட்சத்திரம் கூடிய சித்தயோகம் சிம்ம லக்கினத்தில் அம்பலக் கூத்தனுக்குக் காப்புக் கட்டி விடுவார்கள். கொலு ஏறி விடுவான் ஆண்டவன்; மகர் நோன்பு முடிய நவராத்திரி கொண்டாட்டந்தான்!

ஓதுவாருக்கு இனிமேல நிற்க நிலைக்க நேரம் இருக்காதுதான். இரவு முழுவதும் விழாச்சம்பந்தமான அலுவல்கள் சரியாக இருக்கும். நவராத்திரி நாட்களில் அவதாரங்களுக்கான அலங்காரப் பொருட்கள், அணிமணிகள், பட்டுடைகள், வெள்ளித் தீபவரிசைகள் முதலானவற்றைக் கிட்டங்கியில் உள்ள இருப்புப் பெட்டகத்தினின்றும் பிரித்தெடுக்க வேண்டும். கல்யாணம் காட்சி மாதிரி தெய்வ காரியங்களிலுங்கூட வேலைகள் சுற்றிச் சுற்றி வரும்; இயல்புதான்.

அந்திப் பொன்னொளி. சிந்தூரக் கனவாகி இயற்கையின் புதிர்மயக்கம் கொண்ட சூனியப் பெருவெலியில் சித்து விளையாடிக் கொண்டிருக்கிறது.

கைப்பிடியில் சிக்கெனப் பற்றியிருந்த காகிதச் சீட்டுக்களை மேலும் ஒரு தடவை உன்னிப்பாகப் பார்வையிட்டார். "அப்பனே! நடராஜப் பெருமானே!" என்று பாசமும் பக்தியும் உருகி வழியத் தமக்குள், தமக்குத்தாமே முணுமுணுத்துக் கொண்டார். கழுத்தில் இழைந்து கிடந்த ருத்திராட்ச மாலையை நெருடிவிட்ட வாக்கில் எதிர்ப்புறத்தில் பார்வையை ஓடவிட்டார் அவர்.

ரங்கன் ஓடி வந்தான். எதற்கெடுத்தாலும் அவனுக்கு ஓட்டந்தான். மடத்தின் காவலாளி என்றால், பின் சாமானியமா? "ஐயா, மடத்து அடிமைக்காரங்களும் மண்டபப்படிக்காரங்களும் கோயில் பிரகாரப் பந்தலிலே வந்து கூடியிருக்காங்க, உங்களுக்கோசரம் எல்லாரும் காத்துக்கிட்டிருக்காங்க" என்று தகவல் கொடுத்தான் அவன்.

"ஓ, அப்படியா?"

"ஆமாங்க!"

"சாடாப் பேர்களுப் வந்தாச்சா?"

"ஓ!"

இனம்புரிந்த தவிப்பும் இனம் புரியாத கலக்கமும் ஆண்டு நிற்க, "அம்பலவாணன் செட்டியாரும் வந்துட்டாராப்பா?" என்று கேட்டார் ஓதுவார்.

ரங்கன் கைகளை அகல விரித்தவாறு, "ஊகூம்; இல்லீங்களே! அவர் மட்டுந்தான் பாக்கி!" என்று தாழ் குரலில் விடை சொன்னான்.

'தெய்வமே?'

⁕ ⁕ ⁕ ⁕

புரட்டாசிக் கெடுவில் வாடைக்குப் பஞ்சம் இருக்குமோ? இருக்கலாமோ?

ஓதுவார் பற்றறுத்த துறவியைப் போலே மயில்கண் துவாலை மார்புக்குக் குறுக்கு வசத்தில் புரள, நெற்றிப் பட்டைகளும் தாமுமாகக் கைப்புறம் படிந்த காகிதக் கற்றைகளோடு நடை ஒற்றிவந்தார்.

"வாங்க ஐயா! ஐயா வாங்க?"

உலகம் பலவிதம் என்கிற சித்தாந்தத்துக்குச் சாட்சியம் அளிக்க இப்போது ஒலி பிரிந்து குரல் ஈந்த சத்தபேதங்களே போதும்.

"ஆமா!" என்று சொல்லித் தலையை உலுக்கி, கும்பிட்ட கரங்களுக்குப் பதில் கும்பிடு கொடுத்துக் கொண்டே விரிப்பில் சம்மணம் கோலி அமரலானார் ஓதுவார். ஓதுவாரென்றால், சுந்தரமூர்த்தி ஓதுவார் எனப் பொருள்.

"ஐயாவோட பூர்வாங்க அலுவலெல்லாம் கைகூடி முடிஞ்சிருக்கும்னு நினைக்கிறோங்களே."

சொன்னவர் 'தீனாரூனா' : அதாவது திருவம்பலம் செட்டியார்; பல்போனாலும் சொல் போகாத பழுத்த பழம்.

"வாஸ்தவந்தான். என் கடன் பூராவும் மாமூல் பிரகாரம் முடிஞ்சாச்சு!" மென்மைத் தன்மை நிரக்கக் கூறினார் ஓதுவார்.

"ஐயா, மண்டபப்படிக்கான முறிச்சீட்டுக்களையும் சாமான் சிட்டங்களையும் உடையவங்ககிட்டே சேர்ப்பிச்சுக் கையொப்பம் வாங்கிக்கிடுங்க. விடிஞ்சானதும், சாமியைக் கொலு ஏற்றத்துக்குண்டான காரியங்களைக் கவனிக்கலாம்!" என்றார் பாகவதர் கிராப் விடலை.

பேச்சில் சிக்கிரி கலந்த காப்பித்தூள் மணத்தது. காப்பித் தூள், சிக்கிரி விகிதாசார ரகசியமா? மூச்! அது சிதம்பர ரகசியம்!

"ஆகட்டும்!" என்கிறார் ஓதுவார்.

சம்மணக் கோலத்தை மாற்றி உட்கார்ந்த ஓதுவார். கைவசம் அடங்கியிருந்த உரிமைச் சீட்டு வகைகளைக் கண்குவித்துப் படிக்கலானார். முதல் முறை படித்தாயிற்று. மறு தரம் வரிசைப்படுத்தி வாசித்துக்கொண்டு வந்தவர், அடுத்து வந்த சீட்டுத்தாளைக் கையில் தனியே எடுத்து வைத்துக் கொண்டார். "நவராத்திரி அஞ்சாவது நாள் மண்டபப்படி நம்மள் சோவன்னா மானா அம்பலவாணன் செட்டியாரோடது" என்று சொல்லி, தொடர்ந்த சொற்களைத் தொடர் சேர்க்க வாய்க்காமல் நிறுத்தினார் ஓதுவார்.

"ஆமா; அதுச்கென்ன, ஐயா?"

"அதுக்கு ஒண்ணுமில்லீங்க. ஆனா, அந்தப் 'பிட்டுக்கு மண்' மண்டபப்படியை நடத்தறது யாரின்னுதான் நான் யோசிக்கிறேனுங்க!"

"பிட்டுக்கு மண் மண்டபப்படியை நடத்தப் பாத்தியம் கொண்ட அம்பலவாணன் செட்டியார் இருக்கரால்லவா?"

"புள்ளி இருந்திருந்தால், இந்தப் பிரச்னை ஏன் இப்படிக் கிளம்பப் போகுது? நீங்க பட்டணமே கதின்னு ஆகிட்டவங்க. உங்களுக்குக் கதையே தெரியாது போலிருக்குது, தம்பி!"

"என்ன நடந்திச்சு அவுகளுக்கு?"

"என்ன நடக்கக் கூடாதாதோ, அத்தனையும் நடந்திருச்சுது!"

"ஆமா தம்பி, எனக்குங்கூட மறந்து போயிட்டுது. அம்பலவாணன் செட்டியார் நம்ப மண்ணைத் துறந்து போய்ப் பத்து மாசத்துக்கு நெருங்கப் போகுது!"

"அட கடவுளே!"

"கடவுள் என்ன செய்வார், பாவம்!"

ஓதுவார் இடைமறித்தார் : "பாவ புண்ணியத்தோட ஐந்தொகைக் கணக்கைப்பற்றி வெறும் மனுஷங்களான நமக்குப் பேசுறதுக்கு அருகதை இல்லை. ஆனா இந்த ஊர்ச்

செட்டிமார்களுக்குள்ளாற, அம்பலவாணன் செட்டியார் ஒரு தனிப் புள்ளியாய்த்தான் இருந்துக்கிட்டு வந்தார். என் அநுபவத்திலே என்னோட மனசறிஞ்ச உண்மையான தாக்கல் இது. அந்தக் காலத்திலே, பர்மாப் பணம் ஆட்டம் போட்ட சங்கதியும் தெரியும். இடை நடுவாந்தரத்திலே இந்த ஊரே நொடிச்சு அந்தரத்திலே நின்ன கதையும் தெரியும்; இப்போ காபித்தூள், தூள் பறந்துக்கிட்டு இருக்கக்கூடிய இந்த ஊர்நடப்பும் எனக்குப் புரியும். ஆனா, அம்பலவாணன் செட்டியார் இப்படிப்பட்ட விதிக்கெல்லாம் விலகி, ஒரு விலக்காகவே இருந்தார். கொடிகட்டி வாழ்ந்தவர் அவர். கொடி அறுந்தால் என்ன செய்கிறது? பூர்வஜன்ம வினைப்பயன்; அந்தப் புண்ணியவான் தம் பெண்டாட்டியை இழந்தார்; வாரிசு இல்லாத ஆளுக்குச் சொத்துப் பத்து எதுக்குன்னு ஆண்டவன் நினைச்சிட்டானோ என்னவோ? பழகின சிநேகிதருக்கோசரம் இரக்கப்பட்டு, பிராமணாள் காபிக் கிளப்பை விலை கொடுத்து வாங்கி அறந்தாங்கியிலே நடத்தினார். உண்டானபோது கோடானு கோடின்னு சொல்லுவாங்க, இல்லையா? அது மாதிரி அவரைச் சுற்றிச் சுற்றி வந்து சாப்பிட்டவங்களும், நயவஞ்சனையாலே ஏய்ச்சவங்களும் ஒரு குறைச்சலும் இல்லாமல்தான் இன்னிக்கு இருக்கிறாங்க. ஆனா, அவருக்குத்தான் நஷ்டத்துக்கு மேலே நஷ்டம் வந்திச்சு. சொத்து சுகம் வீடு வாசல் எல்லாம் போயிடுச்சு! பத்து மாசத்துக்கு முந்தி அவர் இந்த மண்தூசியை உதறிப்பிட்டுப் போனவர்தான். இதுநாள் பரியந்தம் அவரைப்பற்றி ஒரு தகவலுமே இல்லை!”

ஓதுவாருக்குத் தொண்டை அடைத்தது; கனத்தது.

“அம்பலவாணன் செட்டியாரோட பந்துக்களிலே மேலவளவு கந்தசாமிச் செட்டியாரும் நடுத்தெரு தங்கராஜ் செட்டியாரும் ‘ஓகோ’ன்னு இருக்காங்களே; அவங்களுக்காச்சும் அவரைப்பத்தி ஏதானும் தெரியமோ, என்னவோ?” என்று விசாரணை செய்தார் பல் போன பலராமன் செட்டியார்.

ஓதுவார் விநயமாகச் சிரித்தார் : “பிச்சையாண்டி ஆகிட்ட அம்பலவாணன் செட்டியாரைப்பற்றி யாருக்கென்ன கவலை, பெரியவரே! நீங்க கண்ணாலே பார்க்க, பாயிலே படுத்தவங்க தரையிலேயும், தரையிலே படுத்தவங்க பாயிலேயும் கிடக்கலீங்களா? ஆனா, நம்ப அம்பலவாணன் செட்டியார் மானாபிமானம் மிக்கவர்!

ரொம்ப ரொம்ப ரோசக்காரர்! ரொம்ப ரொம்ப மானி! பிறந்த மண்ணை மட்டும் துறந்திட்டார் அம்பலவாணன் செட்டியார்னு தோணல்லே; அநுதினமும் கைகடுக்கக் கும்பிட்டுக் கால்கடுக்க வலம் வந்த இந்தத் தெய்வத்தையுங் கூடத் துறந்திட்டாரோன்னு கூட எனக்குத் தோணுது. இல்லாட்டி, எந்தத் தில்லியிலே இருந்தாலும், இந்த நவராத்திரிக் கெடுவுக்கு இங்கிட்டு வந்து குதிச்சிருக்க மாட்டாரா? ஈச்வரா!"

ஓதுவார் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

"அது சரி, இப்ப என்ன ஆகிறதாம்? அம்பலவாணன் செட்டியாரோட உபயமண்டபப்படி என்ன ஆகிறதாம்?" என்று கேட்டது கடுக்கன் இளவட்டம்.

"சட்டுப்புட்டுன்னு ஒரு முடிவுக்கு வந்தால் தான் தேவலாம். பசிநேரம் இது" என்றது புதிய மீசை.

கோயிலுக்குச் சொந்தம் பூண்டிருந்த எட்டுப் பேர்களும் ஒருவரை ஒருவர் மேலும் கீழுமாகப் பார்த்துக் கொட்டக் கொட்ட விழிக்கலாயினர்.

ஓதுவார் நரை திரண்ட முடிகளை வேதனையோடு கோதிவிட்டபடி, அவர்களை ஒரு முறை ஊடுருவினார். பிறகு, "ஒரு முடிவும் தோணலீங்களா உங்களுக்கெல்லாம்?" என்று வேதனை தாளாமல் வினவினார்.

"ஊஹூம்!"

குரல்கள் எட்டு வகையாகப் பிசிறு தட்டிக் கேட்டன.

"ஒரு வேளை, அம்பலவாணன் செட்டியார் எங்காச்சும் அநாதையாகிக் காலமாகி....?"

உள்ளம் நடுங்க, உடல் நடுங்கக் குறிக்கிட்ட ஓதுவார். "ஐயையோ!... உங்க பேச்சை ஈவிரக்கமில்லாமல் முடிச்சுடாதீங்க, கடுக்சன்காரத் தம்பி!" என்று கெஞ்சினார், விழிகள் துளும்பின; நெஞ்சம் துளும்பியது.

"சரி, சரி, ஏதாச்சும் முடிவு பண்ணினால் தானே?"

"ஒண்ணமே மட்டுப்படலையே!"

"அந்த அம்பலவாணன் செட்டியார் திருவிழாவை நடத்தாமல் விட்டுப்புட வேண்டியதுதானோ?"

"என்ன சொன்னீங்க, மீசைக்காரத் தம்பி?" ஆவேசமும் ஆத்திரமும் முழங்கக் கேட்டார் ஓதுவார். நெற்றி நரம்புகள் புடைத்தன.

"பின்னே, என்னவாம்?"

ஓதுவார் ஆற்றாமையோடு பெருமூச்செறிந்தார். "சோதனைகள் பாழாய்ப்போன இந்த மனிதர்களைத்தான் விட்டு வக்கிறதில்லைன்னு நினைச்சிருந்தேன். இப்போ தெய்வத்துக்கும் அல்லவா சோதனை வந்திட்டுது? ஈச்வரப் பிரபோ!" குரல் தழுதழுத்தது.

"ஓதுவார் ஐயா, நீங்களே இதுக்கு ஒரு யோசனை சொல்லுங்களேன்?"

ஓதுவார் உணர்ச்சி சுழிக்கப் பேசினார் : "லட்சக்கணக்கான பணத்திலே புரண்டுக்கிட்டு இருக்கிற உங்களுக்கெல்லாம் தோணாத மார்க்கமும் யோசனையுமா மண்ணிலே புரண்டுக்கிட்டு இருக்கிற எனக்குத் தோணப்போகுது? ஊம். அம்பலவாணன் செட்டியார் எப்படி எப்படியோ உச்சத்திலே வாழ்ந்தவர்; வாழ்ந்து காட்டினவர்! அந்த மனிதரை யார் மறந்தாலும் நல்லவங்க ஒருநாளும் மறக்க முடியாது. அது மாதிரியே அவர் வருஷம் வருஷம் கோலாகலமாய் நடத்தி வந்த 'பிட்டுக்கு மண்' மண்டபப்படியையும் யாருமே மறக்க வாய்க்காது. அப்படிப்பட்ட புண்ணியவானோட மண்டபப்படியைப் பெருமையோடவும் மனிதாபமானத்தோடவும் ஏற்று நடத்தக் கோயில் அடிமைக்காரங்களாகிய உங்களுக்கெல்லாம் மனசு வரல்லே! ... பரவாயில்லை. அம்பலவாணன் செட்டியாரோட மண்டபப்படியை என் தலையை அடமானம் வச்சாவது, எப்படியாவது பணம் தோதுபண்ணி நானே நடத்திடுறேன். இது என் கடமையாக்கும்; இது என் பாக்யமாக்கும்! "

கோயிலுக்கு அடிமைப்பட்டவர்கள் இப்போது மௌனத்துக்கும் அடிமைப்பட்டார்கள்.

❋ ❋ ❋ ❋

அப்போது

"ஐயோ!"

புதிய குரலொன்று எதிரொலித்தது.

எல்லோரும் பார்வைகளைத் திசைமாற்றினார்கள்.

யாரோ ஒரு பண்டாரம் மொட்டைத் தலையும் திருநீற்றுப் பூச்சும் ருத்திராட்ச மாலையும் பொலியக் காட்சி தந்தார்.

"யோவ்! இது ஆண்டி மடம் இல்லே; கோயில் மடம்! இங்கிட்டுப் பிச்சை போட மாட்டாங்க! ஊருக்குள்ளே போய்ப் பாருங்காணும்!"

கடுக்கண் வைரக் கடுக்கன் ஆயிற்றே! அது ஏழரைக் கட்டைச் சுருதியில் ஆணையிட்டது.

அந்தப் பண்டாரம் ஏன் அப்படிச் சிரிக்க வேண்டும்? உலகாளும் ஆண்டவனே ஒரு கட்டத்திலே "பிச்சை ஆண்டி" யாக வேடம் புனைய நேர்ந்த விதியை நினைத்திருப்பாரோ?

ஓதுவார் மலைத்தார்.

"ஐயா, பிச்சைக்காக நான் இப்போது இங்கு வந்து நிற்கவில்லை!"

"பின்னே?"

"இங்கே சுவாமிக்குப் பூஜை பண்ணுகிற ஓதுவார் ஒருத்தர் இருக்காராமே, அவர் யார்? எங்கே இருக்கார் அவர்?" என்று விசாரித்தார் ஆண்டிப் பண்டாரம்.

"ஏன், நான்தான்!" என்று சொல்லிக்கொண்டே முன்னே வந்தார் ஓதுவார். பண்டாரத்தைக் கூர்ந்து பார்த்தார். ஏக்கமும் ஏமாற்றமும் நிழலிட, "சுவாமிகளே, சுவாமி சந்நிதியிலே இப்படி உட்காருங்க" என்று உருக்கமாக வேண்டினார். "என்ன விஷயமுங்க, ஐயா?" என்று கேட்டார்.

விளக்குடையான் கழலடியில் நின்ற தூண்டாமணி விளக்குச்சுடர் தெறித்தது.

பண்டாரம் திருவாய்மலர்ந்தார் : "ஐயா, இவ்வூரைச் சேர்ந்திருந்த அம்பலவாணன் செட்டியார் என்பர் தம்மோட 'பிட்டுக்கு

மண்' மண்டபப்படித் திருவிழாவை வழக்கம் போலவே விமரிசையாக நடத்தச் சொல்லி உங்ககிட்டே இந்த இருநூற்றைம்பது ரூபாயைச் சேர்ப்பிக்கச் சொன்னார். இந்தாங்க பணம்! எண்ணிச் சரிபார்த்துக்கிடவேணும்!"

ஓதுவார் மேனி சிலிர்த்தார். பணத்தை நடுங்கும் விரல்களால் சரி பார்த்து இடுப்பு மடியில் வைத்துக் கொண்டார். "அந்தத் தர்மசீலர் நல்லபடியாக இருக்காரல்லவா?" என்று ஆர்வத்துடன் உணர்ச்சி வயப்பட்டு விசாரித்தார்.

"ஊம்!" கொட்டினார் பண்டாரம்.

"எங்கே இருக்கார் அவர்"

"எங்கேயும் இருப்பவர் ஐயா அந்தப் புண்யவான்."

"தம்மோட மண்டபப்படி விழாவன்றைக்காகினும் அம்பலவாணன் செட்டியார் வருவாரா, சுவாமிகளே?" மனிதாபிமானத்தின் ஆர்வம் பிடர்பற்றித் தள்ள விசாரித்தார் சுந்தரமூர்த்தி.

"வருவார்னு தோணலீங்க!" என்றார் ஆண்டி.

"அட கடவுளே! தெய்வம் அவரை மறந்திடுச்சே என்கிறதுக்கா, அவரும் மறந்திட்டாரா என்ன? ஐயோ! என்ன சோதனை இது? நடராஜப் பிரபோ!"என்று உருகிக் கரைந்தார் அர்ச்சகர்.

"ஐயா, தெய்வம் அவரை மறந்திடுச்சு என்பதோ, அல்லது அவர் தெய்வத்தை மறந்திட்டார் என்பதோ இந்தப் பொய்யான வாழ்க்கையிலே நமக்கு நாமே கற்பிதம் செய்து கொள்ள வேணுமானால் உபயோகப்படலாம். ஆனா, மெய்யாகவே ஆளுகிறவனுக்கும் மெய்யாகவே ஆளப்படுகிறவனுக்கும் ஊடாலே இப்படிப்பட்ட பொய்யான மயக்கங்கள் செல்லாக் காசுக்குச் சமதைதான். தெய்வசித்தம் என்கிற ஒரு மகத்தான மாயசக்திக்கு முன்னே நாமெல்லாம் எம்மாத்திரம்; இந்தக் 'கட்டை'க்கு நாழி ஆகுது. விடை வாங்கிக்கிட வேணும், ஐயா!"

பண்டாரத்தின் விழிகள் பொங்குகின்றன.

❋ ❋ ❋ ❋

அன்றைக்குத்தான் 'பிட்டுக்கு மண்' மண்டபப்படி விழா. அம்பலவாணன் செட்டியார் மரபு காத்து நடத்தும் இத்திருநாள் வைபவத்துக்கு விசேஷமாகக் கூட்டம் கூடுவது வழக்கம். மேளக் கச்சேரி, பிட்டு, சர்க்கரைப் பொங்கல், கடலைப் பருப்புச் சுண்டல், தாம்பூலம், தேங்காய் மூடி என்று அன்று தடபுடலாகவே உபயங்கள் எல்லாம் நடந்தேறும். "தெய்வம் தந்தது என்னோட சொத்து. அந்தத் தெய்வத்துக்கு விமரிசையாய் மண்டபப்படி செய்கிறதிலேதான் என்னோட மனச்சாட்சி அமைதி காணும்; அதுதான் என் மனசுக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கும்; கொடுக்கவும் முடியும்" என்பார் செட்டியார்.

அப்படிப்பட்ட மெய்ப் பக்தரான அம்பலனவாணர் இல்லாமலேதான் அவர் மண்டபப்படி விசேஷம் நடைபெற வேண்டுமென்று விதித்துவிட்டதா என்ன?

நிரம்பி வழிந்த ஒளி வெள்ளத்திலே கூட்டம் நிரம்பி வழிந்தது.

ஓதுவார் ஏக்கம் தேங்க, சோகம் பாகமிட, மெய்யொடுங்கி, மெய் விதிர்த்துப் போய்விட்டார். 'அப்பனே' ஏன் இப்படிச் சோதிச்சிட்டே? இதோ, தீபாராதனை நடக்கப் போகுதே! உன்னை அல்லும் பகலும் அனவரதமும் துதித்துக்கொண்டிருக்கப் பழகிவிட்ட அம்பலவாணன் செட்டியாரை மறந்திட்டியா? இல்லை, மறக்கப் போறியா? உன்னை மறக்காத அவரை நீ மறந்தால், மறக்க நேர்ந்தால் அது தருமமாகுமா, நியாயமாகுமா? சொல், அம்மையப்பா!' நெஞ்சம் நெக்குருகியது; உருகிக் குலைந்தது; குலைந்து விம்மியது; விம்மி வெடித்தது.

திருப்புகழ் பாடிக் கொண்டிருக்கிறது நாகசுரம். 'அனித்த மறத் திருப்பொதுவில் விளங்கு நடத்தரசு' க்கு இன்றைக்குப் பிட்டுக்கு மண் சுமந்த வேடம் புனை வடிவம். அதாவது, அவதாரம்! பிட்டும் மண்ணும் கதை அல்லவே!

பிட்டு விற்ற கிழவி வந்தியின் சார்பிலே, வைகைப் பெருவளத்தை அடைக்க அல்லது அடக்கச் சோமசுந்தரக் கடவுள் மண் சுமந்து, அரிமர்த்தன பாண்டியனிடம் பிரம்படிப்பட்ட திருவிளையாட்டை நினைவுறுத்தியும் நினைவு கூட்டியும் விளங்கும் அந்தக் கோலத்திற்கென்று அப்படியொரு மகிமை போலும்!

மண்வெட்டி, பிட்டுத் தட்டு, ஐந்தடுக்கு நாமுகத் தீபம் எல்லாமே வெள்ளிப் பொருள்கள்தாம்; வெள்ளியம்பலத்தே திருநடம் புரிந்த ஐயனுக்கு உகந்தவைதாம். இவை அனைத்தும் அம்பலவாணரின் பக்திச்சுவை சொட்டும் உபயங்களேயாம்.

“ஊம்! ஐயா, பூஜை ஆரம்பியுங்கள். மணி இப்போதே பத்தடிக்கப் போகுதுங்களே, ஓதுவார் ஐயா!”

உத்தரவு பிறந்தது.

ஓதுவாருக்குத் திகீரென்ற ஓர் அச்சஉணர்வு அச்சாரம் கொடுத்து உலுக்கி விட்டிருக்கவேண்டும். இமைகொட்டாமல், ஆனால் தேள் கொட்டின துடிப்போடு ஆண்டவனைப் பார்த்தார்; பார்த்துக்கொண்டே நின்றார். நெஞ்சிலும் நினைவிலும் நிழலாடிய அம்பலவாணன் செட்டியாரின் அன்பின் உருவம் மனக்கண்ணிலே ஆடியது கண்ட பாங்கிலே ஆடியது. ஏக்கமும் ஆர்வமும் தழலாகக் கொதிக்க, கைக்கு மெய்யான ஏமாற்றமும் சோகமும் சாட்டைப் பம்பரமாகச் சுழல, அவர் சுற்றுமுற்றும் பார்வையைச் செலுத்தினார். முடியவிழ்ந்த நரைமுடிக்கற்றைகள் வாடகை காற்றில் அசைந்தாட, அலைந்தாட நுட்பமாகக் கண்டோட்டம் பதித்தார். அம்பலவாணன் செட்டியார் திடுதிப்பென்று இங்கே சுவாமியின் திருச்சபையின் சந்நிதியின் முன்னே வந்து குதித்துவிட மாட்டாரா? அம்புலிக்கு ஆசைப்படும் மழலையென அவர் மனப்பால் குடித்துவிட்டாரோ? மறு இமைப்பில், நெடு மூச்சுப் பிரிந்ததுதான் மிச்சம். மணியைக் கையில் ஏந்தினார்.

வில்வ இலைகள் சிந்தின, சிதறின. அம்பலவாணன் செட்டியாரின் ஜன்ம நட்சத்திரமான பூரட்டாதி நட்சத்திரத்தைச் சொல்லி அர்ச்சனையைத் தொடங்கினார் ஓதுவார்.

மேளச் சத்தம் முழங்கிற்று. நாதசுரம் வழிந்தது. கையெடுத்துக் கும்பிடவேண்டும். அதோ, தீபாராதனை நடக்கிறது.

தீபம் ஏந்திய ஓதுவாரின் அன்புக் கரங்கள் ஏன் அப்படி நடுங்குகின்றன? ‘ஈசனே, எம்பிரானே! சோதனை கடந்தவன் ஆயிற்றே நீ? ஆனாலும் சோதனை நடத்திவிட்டாயே? உன் சித்தம் இந்த அற்பனுக்கு எப்படித் தெரியும், புரியும்? உன் விருப்பம் போல் நீ விளையாடு. அலகிலா விளையாட்டுடையவன் ஆயிற்றே நீ?

அம்மையப்பா! எங்கள் அம்பலவாணன் செட்டியாரை எங்கிருந்தாலும் நல்லபடியாகக் காப்பாற்றவாவது அருள்பாவிப்பாய் அல்லவா?' இமை வட்டங்களிலே சுடுநீர் வட்டம் போட்டது.

ஆராதனை தொடர்ந்தது.

"ஹரஹர மகாதேவா!"

கண்டாமணி ஓசையெனக் கணீரென்று முழுக்க மிட்டது பக்திச் சுவை குலுங்கிய புதிய குரலொன்று.

கூட்டம் ஏறிட்டு விழித்தது, அங்கே...

ஏக்கமும், உருக்கமும் மேலிடக் கைகுவித்து நின்றார் அந்த மொட்டைத் தலை ஆண்டிப் பண்டாரம்.

'எண்குணங்கள்' பெற்ற அந்த ஆண்டவன் ஏன் அப்படிச் சிரிக்கிறான்? புதிர்ச் சிரிப்பல்லவா அது?

* * * *

ஆம்; அம்பலதரசனின் அந்தப் புதிர்ச் சிரிப்புக்குத் தாராளமாகப் பொருள் இருக்கத்தான் இருக்க வேண்டும். அப்படியென்றால்?

அதோ, கோயிலின் வெளிப் புறத்துப் பந்தலிலே, கும்பலோடு கும்பலாகவும் தாடியும் மீசையும் எலும்பும் தோலுமாகவும், நின்றுகொண்டே, மேனி குலுங்கிட, கண்கள் குலுங்கிட, மனம் குலுங்கிட, பக்தி பரவசத்தோடு மெய்மறந்து, ஆனால் மெய்யை மறக்காமல் கைகூப்பிக் கும்பிட்டுக்கொண்டே இருக்கிறதே ஓர் உருவம், அந்த உருவத்தைப் பற்றறுத்துப் பாருங்கள்!

"அப்பனே! நடராஜப் பெருமானே! உன்னோட அன்புக்கும் கருணைக்கும் ஈடேது, எடுப்பேது? நீ ஆட்டுவித்தாய். நான் ஆடாமல் தப்புவேனா? கண்காணாத சீமையிலே மண் சுமந்து, காசு சேர்த்து, வளமைப்படி உன் திருநாளை, என் மண்டபப்படியை, நல்ல தனமாகக் கொண்டாடக் கொடுத்து வச்சேனே! நான் பாக்கியவான்தான்! என் மானத்தைக் கட்டிக் காத்தாயே அம்மையப்பா! உன் விளையாட்டை என்னவென்பேன்? நீ மண் சுமந்த பாவத்துக்கு ஓர் புது அர்த்தம் கொடுக்க வேண்டித்தான் நானும் மண்சுமந்த புண்ணியத்தைப் பெற்றேனோ? நீ புதிரல்லவே! நான்தான் புதிர்! இல்லையானால்,

எனக்குன்னு மெய்யன்பரான ஒரு ஓதுவாரையும், ஓர் ஆண்டிப் பண்டாரத்தையும் கை காட்டியிருப்பாயா? கடைசியிலே என்னையும் மீறின வகையிலே என்னையும் இங்கே இப்போது மாயமாகக் கொண்டாந்து சேர்த்திட்டு இப்படிச் சிரிச்சுக்கிட்டு இருப்பாயா, அப்பனே! ஆகா! அம்மையே அப்பா! ஒப்பிலா மணியே!" அந்த உருவம் உருகிக் கரைந்து கொண்டே இருக்கிறது.

* * * *

திருநீற்று மடலும் கையுமாக வெளிப்புறப் பந்தலை அடைந்தார் ஓதுவார். அவர் பார்வை நாற்புறமும் ஓடியது. மறுகணம், "ஆ! ஐயாவா?" என்று தம் உள்மனம் ஆனந்த பரவசம் மேலிடக் கூவியவாறு, விரைந்து பாய்ந்து, விபூதிப் பிரசாதம் வழங்கினார். ஓதுவார். 'எம்பிரானே!' உன் விளையாட்டு இப்படியா நடந்திருக்குது!' கண்கள் கசிந்தன! மேனி உறுப்புக்கள் ஓசிந்தன.

அந்த உருவம் விபூதியை மெலிந்த கை நடுங்க வாங்கிப் பூசிக்கொண்டதுதான் தாமதம்; மறு இமைப்பில் அவ்வுருவம் அப்படியே தடாலென்று தரை மண்ணில் சாய்ந்தது.

ஓதுவார் துடியாய்த் துடித்தார்.

கூட்டம் பரபரப்படைந்தது.

"பாவம்! யாரோ பரதேசி ஒருவர் திடீர் மயக்கம் போட்டு விழுந்திட்டார். எல்லாரும் தயவு பண்ணி ஒதுங்கி நல்ல காற்றுக்கு வழி விடுங்க! ரங்கா, ஓடிப்போய் நல்ல தண்ணீர் கொண்டாப்பா!"

ஓதுவாரின் விழிகளினின்றும் கண்ணீர் மாலை நீண்டு மணக்கிறது.

* * * *

ஆகா! அந்தத் தூண்டாமணித் தீபம் எத்துணை அறக் கருணையோடும் அருட் சிரிப்போடும் ஒளி ஏற்று ஒளிகாட்டிக் கொண்டிருக்கிறது!

❑

# கடல் முத்து

"சீனி ஆத்தா பேரிலே ஆணையிட்டுச் சொல்லுறேன். அக்கரைச் சீமையிலேருந்து திரும்பியாந்ததும் உன்னைக் கட்டாயம் கண்ணாலம் கட்டிக்கிறேன், பவளக்கொடி?"

தூணுடன் தூணாகப் பிணைந்து நின்ற பவளக்கொடியின் விம்மித் தணிந்த நெஞ்சில், அவ்வார்த்தைகள் எதிரொலித்தன. கடல் கடந்து செல்லும் மாலுமிக்குக் கலங்கரை விளக்கு உறுதுணையாக அமைவதுபோல, அன்று கடல் கடந்து சென்ற நடேசன் விடுத்துச் சென்ற ஆறுதல் மொழியை நேருக்கு நேர் நின்று நேற்றுச் சொன்ன மாதிரி அவள் உணரலானாள்.

சாயங்காலம் இருக்கும். கடை அலுவல்களைச் சீர் செய்துவிட்டுப் பவளக்கொடி திரும்பினாள். அவள் காதுகளில் தன் தாய்மாமன் 'கண்டிச் சீமை'யிலிருந்து வந்திருக்கும் சேதி காற்றுவாக்கில் விழுந்தது. உடனே அவளுக்குத் தன் மச்சான் நடேசனின் நினைவும் கூடவே வந்தது. மாமனைக் கேட்டால் மச்சானைப்பற்றி ஏதாகிலும் தெரியுமே என்ற ஆவலில், 'ஆயா, மாமன் வந்திருக்குதாமே; தெரியுமில்லே' என்றாள் பவளக்கொடி.

"அப்படியா? நீ சொல்லத்தான் எனக்குத் தெரியுது. தம்பியை விசாரிச்சா உன் மச்சானைப்பத்தி ஏதுனாச்சம் தாக்கல் கிடைக்குமே" என்று கூறியவாறு கிழவி செல்லி புறப்பட்டாள்.

பூங்கரங்களில் கன்னத்தைப் புதைத்தவண்ணமிருந்த பவளக்கொடியின் இதயத் தடாகத்திலே நீர்மட்டத்திடை தலைமறைவாக இருந்த எண்ண மலர்கள் கம்பீரமாகத் தலைதூக்கிச் சிரித்தன. அவளும் பூப்போலப் புன்னகை பூத்தாள். கடந்த நினைவுகளை மீண்டும் எண்ணிப் பார்ப்பதில்தான் எவ்வளவு இன்பமிருக்கிறது.

அறந்தாங்கி பட்டுக்கோட்டை ரஸ்தாவில் அந்தச் சாயாக் கடை இருந்தது. டீ என்றால் டீ அப்படி இருக்கும். முன்பெல்லாம் அதாவது பவளக்கொடி 'பெரியவள்' ஆவதற்கு முன்னர் அவளே நேரில் நின்று சாயா பரிமாறுவாள். வாடிக்கைக்காரர்களுடன் குழந்தைபோல விளையாடுவாள்; கிளிமாதிரிக் கிள்ளை மொழியைப் பாங்காக உதிர்ப்பாள்; இளம் பூஞ்சிட்டுப் போன்று சிறகடித்துப் பறப்பாள். அவள் என்றால் ஏனையோருக்கும் ஒரு அன்பு மயக்கம்! அவள் மயக்க உரு!

பவளக்கொடி அலைகடலில் சேகரிக்கப்பட்ட முத்து; ஒளிபரப்பி ஒய்யாரமாய்த் திரியும் கடல் முத்து. பவளமாய் திறந்தால் முத்துக்கள் நகைக்கும்; கண் திறந்தால் வண்டுகள் ரீங்காரமிடும்; கன்னக் குழிவில் ரோஜா சிரிக்கும். அவள் காட்டு ரோஜா!

அவள் பக்குவமடைந்ததும் கடையில் மாற்றம் நிகழ்ந்தது. அவள் இப்போதெல்லாம் சாயா போட்டு நேரில் வியாபாரம் பண்ணுவது நின்றுவிட்டது. அதற்குப் பதில் அவள் உள்ளறையில் எல்லாம் தயாரித்து, ஒவ்வொரு 'செட்'டாக வெளியே நீட்டுவாள். ஒவ்வொன்றையும் நிதானமாக வாங்கி வியாபாரம் செய்வாள் அவள் அம்மா.

நடேசன் அடுத்த பத்தாவது மைலிலிருந்தவன். காளைப் பருவம்; வயதின் பெரும் பகுதியைப் பர்மா - ரங்கூனில் கழித்தவன். ஊரின் சுற்றுச் சூழ்நிலைப் பாசி அவனைப் பற்றவில்லை.

அவன் பவளக்கொடியை முதலில் கண்டதுமே மனதை அவள் வசம் பறிகொடுத்துப்போனான். அவன் ஆணழகன்; அவள் பெண் பதுமை; அழகும் அழகும் பின்னின பூங்கொடிக்குத் தாவிப் படரக் கொழுகொம்பு கிடைத்துவிட்டால் அப்புறம் அதன் வளர்ச்சிக்கு கேட்கவும் வேண்டுமா?

இதே போன்றதொரு பொங்கல் திருநாளில் பவளக்கொடி நடேசன் முதல் காதல் சந்திப்பு நிகழ்ந்தது. அந்த வட்டாரத்தில் 'வழுக்கல் மர' வேடிக்கை பிரமாதம். வானளாவிய கம்பமொன்று பூமியில் நடப்பட்டிருக்கும். கம்பம் பூராவும் பசை வழிந்தோடும். விரல் பட்டால் 'சர்'ரென்று வழுக்கி விட்டுவிடும். கம்பத்தின் உச்சியில் சாயத் துண்டில் பத்து ரூபாய் முடிந்திருக்கும். பரிசைத் தட்டி, மார் தட்டிக்கொள்ள அனைவர் உள்ளமும் சுவரிலடித்த பந்தாக எழும்பும். பலர் பரிசைத் தட்டக் கனவு கண்டதுடன் சரி.

கடைசியில் நடேசன் ஒருவனால் தான் சாயத் துண்டையும், பணத்தையும் கம்பத்தின் உச்சியிலிருந்து கொணரமுடிந்தது. ஆனால் கம்பத்தினூடே சார்ந்து இறங்குகையில் அவன் கால் பின்னிச் சறுக்கிவிட்டது. 'தொபுகடீர்' என்று பூமியில் சாய்ந்தான்.

சுய நினைவு வரப்பெற்றதும் நடேசன் துயில் நீத்து விழிகளை மலரத் திறந்தான். அவன் ஒரு பெண்ணின் கண் காணிப்பில் இருப்பதை அறிந்தான். உடம்பில் லேசாக வலியிருந்தது; பலத்த காயமில்லை.

'மச்சான், மச்சான்' என்று பன்னெடு நாள் பழகிய பாவனையில் ஆதரவு செய்த பவளக்கொடியைக் கண்டதும், நடேசன் மெய்மறந்தான்; உடம்பு வேதனையை மறந்தான். உலகமே ஒரு சொப்பன சொர்க்கமாகத் திகழ்ந்தது. அதில் அந்த நங்கை கனவுக் குமரியாக மாய மோகினியெனத் தோற்றம் கொடுத்தாள். அழகின் அன்வயமன்றோ அவள்!

ஆம்; அவள் அவனுள் உருமாறினாள். அப்படியே அவனும் அவளுள் இடம் பெற்றான்.

ஆக மறு மூன்று நாட்களும் நடேசன் அவள் வீட்டில் தங்கும்படி வாய்ப்பு அவர்களை ஒன்று கூட்டியது.

"மச்சான் அன்னிக்குக் கம்பத்திலே ஒவ்வொரு அடியா முன்னே ஏறிக் கடைசியாய்ச் செயிச்சதைக் கண்டதும் எம்மா சந்தோசப் பட்டுப்பூட்டேன் தெரியுமா? ஆனா, அதே சுருக்கிலே நீங்க கீழே விழுவிங்கன்னு கனாக்கூடக் காணல்லே, இதுமட்டும் உயிரு தப்பிச்சது புண்ணியந்தான்" என்ற பவளக்கொடியின் தேறுதல் அவனை ஆறுதல் படுத்தியது. இதெல்லாம் பழைய கதை.

"பவளக்கொடி, பவளக்கொடி" சுய நினைவு பெற்ற பவளக்கொடி அலறியடித்துக்கொண்டு வந்த தன் அன்னையைக் கண்டதும், 'என்னவோ ஏதோ' வென்று பதைத்துவிட்டாள்.

"தங்கச்சி, ஒன் மச்சான் காட்டுக் காய்ச்சலிலே செத்துப் போயி நாலைஞ்சு நாளாயிடுச்சாமே?" என்று ஓலமிட்டாள் செல்லி.

'மச்சான் எப்போது வரும்' என்று நாட்களை யுகங்களாகக் கழித்து வந்து பவளக்கொடி இந்த எதிர்பாராத இடியைக் கேட்டதும் மனமிடிந்தாள்; பித்துப் பிடித்தவள் கணக்கில் அலறினாள். அடுத்த

தருணம் அவளை ஆறுதல் படுத்த வந்த அவள் 'ஆயா' விடம் அவளுக்கு ஆத்திரம் பற்றி எரிந்தது. எரிச்சல் மூண்டது, தீயின்றிப் புகையா?

நடேசனைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகும் தீர்மானத்தை ஒரு நாள் பேச்சு வாக்கில் தன் தாயிடம் பவளக்கொடி எடுத்துரைத்தாள்.

"தங்கச்சி, நடேசனை நீ கட்டிக்கிறதுக்கு அட்டியில்லை. ஆனா அதுகிட்டே பேருக்குக்கூட நாலு காசு பணம் கிடையாதாமே. நம்ப பலகாரக் கடை மிச்சத்திலே எப்படி மூணு வயிறு நிரப்ப ஏலும்? நீ ரோசனை செஞ்சுக்க, பவளம்"

சொல்லாமல் சொல்லிய கிழவியின் பேச்சு நடேசனுக்கு எட்டியது.

"பவளக்கொடி, எண்ணி ஒரு வருசத்துக்குள்ளே எப்பாடுபட்டும் கையிலே நாலு பத்துச் சேர்ந்திடும். கொஞ்சம் பசையுடன் திரும்பி வந்து உன்னைக் கண்ணாலம் செய்துக்கிறேன். உன் நினைவு ஒண்ணுதான் எனக்குப் பலத்தைத் தரமுடியும், பவளக்கொடி"

அவள் பவளவாய் திறந்து விடை ஈந்தாள். இச்சம்பவத்தை மீளவும் நினைவுகூர்ந்த அவள், பெற்றவளை நிந்தித்தாள். யார் யாரை நோவது? அம்பு எய்தவள் அக்கிழவி. அம்பை நோவதா? அவளைக் கோபிப்பதா? அவள் ஏங்கினாள். இங்ஙனம் அதிர்ச்சி ஏற்படும் என்று அவள் எப்படி எதிர்பார்த்திருப்பாள். பாவம்? பின்னர் நிகழவிருக்கும் நியதியின் நீதியை முன் கூட்டியே அறியும் 'அஷ்டசித்தி படைத்த மாமுனியா' அவள்?

'ஜம் ஜம்' என்று சதங்கை ஒலி முன் அறிவிப்பு மொழிய வந்து நின்ற வில் வண்டியிலிருந்து மாசிமலைத்தேவன் இறங்குவதைக் கண்ட பவளக்கொடி உள்ளே சரேலெனப் பாய்ந்தாள்.

'ஆயா, மாமா வந்திருக்காக' என்ற அளவில் படபடப்புடன் கூறியதைக் கேட்ட கிழவி செல்லி ஆச்சரியம் பொங்கக் கையில் வெற்றிலைச் சம்புடத்துடன் வெளியே வந்தாள்.

"வா, தம்பி, சௌக்கியமா? ஏது இந்த வீடு தேடி அத்திபூத்தாப்பிலே, உம்; முதலிலே வெத்திலை போடு தம்பி."

தேவன் வருகை கிழவியை மலைக்கச் செய்தது. அவன் சுற்று வட்டாரத்தில் பசையான ஆசாமி. கிழவியுடன் கூடப் பிறந்தவன். பர்மா, மலேயா, கண்டி இதெல்லாம் அவனுக்குத் தண்ணீர் பட்ட பாடு.

செல்லியும் மாசிமலையும் உடன் பிறப்பில் ஒட்டிக் கொண்டார்களே தவிர, இயற்கையில் அவர்கள் ஒட்டவில்லை. சில மனத் தாங்கல்கள்! கடைசியில் செல்லியின் கணவன் இறந்த சடங்கில் ராசியானான் தேவன்.

"அக்கா, ஒங்கிட்ட ஒரு சேதி கேட்கலாமின்னு வந்தேன். எம் பெண்சாதி செத்து வீடே வெறிச்சோடிக்கிடக்குது, மறுபடியும் வீட்டிலே விளக்கு ஏத்தி வைக்க மனசிலே ஆசை துள்ளுது. அதுக்கு நம்ப பவளக்கொடியை எனக்குக் கொடுத்துட்டா எம்பிட்டோசீரா வச்சிருப்பேன்."

தேவன் இப்படிப் பேசினான்.

கிழவிக்குத் தூக்கிவாரிப் போட்டது.

பவளம் கதவைப் படீரென்று சாத்தினாள்.

ஆக மூன்று உள்ளங்களிலிருந்தும் நீண்ட பெருமூச்சுப் புறப்பட்டது!

"என்னா அக்கா, ரொம்ப யோசனை செய்யிறே. இடம் தேடி வருகுது சீதேவி. வார கிழமை நல்ல நாள்; பரிசம் போட்டுடலாம்."

கிழவி திரும்பவும் சிலையானாள்.

"அக்கா, என்ன பதிலே பேசல்லே. பவளக்கொடி அந்தப்பயல் நடேசனைக் கையிலே போட்டுக்கலாமின்னு நினைச்சிருக்கும். விதி யாரை விட்டுச்சு? இல்லாதபோனா அந்த அனாதைப் பய செத்திருப்பானா? ஹூம்; முடிவான சொல் இது. உன் மகள் எனக்குத்தான். அதுக்கு ஏற்பாடு செஞ்சுத்தான் ஆகணும்."

கணத்தில் வில் வண்டி பறந்தது. அதிகாரம் வரிசை செலுத்தப் பேசிச் சென்ற தம்பியின் உத்தரவைக் கேட்டுச் சொல்லி பிரமித்தாள்; சுவர் ஒண்டலில் நின்றிருந்த பவளக்கொடி வாய் விட்டுக் கதறினாள்.

அவளுக்கு அந்த ஒரு ஏச்சு அதுவும் இறந்த நடேசனைப் பற்றிய கேலி அவளை வெகுவாகத் துன்பப்படுத்தியது. ஆசை மச்சானின் அன்பு முகம் அவள் முன்தோன்றியது. அவனது ஆதரவு வார்த்தைகள் கணீரென்று ஒலித்தன. அவள் கண்ணீர் பெருக்கினாள்.

விண்ணைச் சாடியது அவள் பார்வை. கற்பனை போல எல்லையற்ற வண்ண விதானமே, நீயாகிலும் அவளுக்கு இதமொழி சொல்லாயா?

அமிர்தம் பொழிந்த நிலவைப் பார்த்தாள். நிறைமதியே, உன் சீதளக் கதிரெனச் சில வார்த்தைகளை அவளுக்குக் கூறிச் சாந்தி செய்யமாட்டாயா?

"பவளக்கொடி"

"ஆயா"

"கேட்டியா சேதியை"

"கேட்கிறது என்ன ஆயா. மாமா துப்பு இப்பல்ல புரியுது. கண்ணாலமா? எனக்கா? மச்சானை மறந்துட்டா? ஒருக்காலும் ஏலாது. காளி மேலே சத்தியமிட்டுச் சொல்லுகிறேன். இனி மாச்சான் ஞாபகம் ஒண்டியே எனக்கு உலகம். மாமா கிட்டே, சங்கதியைச் சொல்லிப்போடு."

"பவளம், கலங்காதே, உன் எண்ணத்துக்குக் குறுக்கே நான் எதுவும் செஞ்சிடமாட்டேன்."

மறுமறையும் தேவன் வந்தபோது, தன் மகள் ஒப்பவில்லை என்று சொல்லியதைக் கேட்ட அவன் தீப்பறக்கப் பேசிச் சென்ற வார்த்தைகள் அவளைச் சித்திரவதை செய்தன. அவள் கொடிபோலத் துவண்டு போனாள்.

"என்னா திமிரா? மாமனா அவன்? பணம் ஒண்ணு இருந்தாக்க அல்லாரையும் கொடிகட்டி ஆண்டிட முடியுமாக்கும். அவன் பணம் அவனோட. என்னை அவனுக்குக் கல்யாணம் பண்ணித் தராமப் போனா ஆளையே தூக்கிட்டுப் போயிடுவானாமே. அத்துக்குத்தான் சம்யுக்தை பிருதிவி மகாராசா காலங்கூடப் புல் முளைச்சுப் போச்சுதே"

"ஆயா, நம்ம ரெண்டுபேரும் நிலத் தெளியறத்துக்குள்ளாற

மாமன் கண்ணுக்குத் தெரியாத இடத்துக்கு ஓடிப் போனாத்தான் தப்பிக்கலாம் போல, என்ன செய்யிறது? பாம்பைக் கண்டாக்க நாமதானே தள்ளிப் போகவேணும்"

பவளக்கொடி விம்மினாள்; கிழவி கண் கலங்கி நின்றாள்.

அடிமுடியின்றி எண்ணங்கள் சிதலம் பெற்றன; சிதலமடைந்தவை பின் சேகரம் பெற்றன. சராசரங்கள் ஓய்வுற்ற சாமம். உறக்கமும் விழிப்புமற்ற நிலையுடன் பவளக்கொடி புரண்டு படுத்தாள். அதே சமயம் 'பவளக்கொடி' என்ற குரல் கேட்டது.

கனவு கண்டு விழிப்பவள் போலானாள் அவள். யார் குரல் அது? கதவைத் திறந்தாள். அங்கே நடேசன் நின்று கொண்டிருந்தான்

"மச்சான்"

எத்தனையோ காலம் கனவு கண்ட இன்பத்திரளை ஒரு நொடிப்போதில் அனுபவித்துவிட்டது போன்ற நெடுமூச்சு இன்பப் பெருமூச்சு அவள் இதயத்தினின்றும் வெளிப்பட்டது.

பவளக்கொடி தேம்பினாள். மச்சான் இறந்ததாக மாமன் சொன்ன செய்தியை ஞாபகப்படுத்திக்கொண்ட அவளுக்கு அப்பொழுதே தேவனின் சூது புலனாயிற்று. செல்வியும் இதை உணரலானாள்.

"பவளம்!"

"மச்சான், உங்களைக் காணுவோமின்னு நினைக்கவேயில்லை."

"என்னா சங்கதி?"

"நீங்க காயலிலே செத்துப்போனதா என் மாமன் வந்து சொன்னாரு. அதுக்கு ஒத்த மாதிரி நீங்களும் கடுதாசிகூட எழுதல்லே. இப்பத்தான் அவரு தந்திரம் விளங்குது. இப்படிப் புரளி பண்ணி என்னை அவரு கட்டிக்கிறதுக்குப் போட்ட திட்டம் இது"

"பவளக்கொடி, நான் காய்ச்சலிலே பிழைச்சது மறுபிறப்புத்தான். அதாலே காகிதம் போட வாய்க்கல்ல. ஆனா உன் மாமன் இப்படித்தான் தீவினை பண்ணுவாருன்னு தெரியாது. மாசிமலைத் தேவனுக்கு எங்கிட்டே என்ன வயித்தெரிச்சலோ? முகம் நிமிர்ந்து அவரை ஒண்ணுக்கு ரெண்டு தடவைகூடப் பார்த்ததில்லையே? ஊம்"

*பவளக்கொடி புத்துயிர் பெற்றாள்; மறுவாழ்வு பெற்றாள். கன்னக் கதுப்பெழிலில் நாணம் குமிழியிட்டு மின்னியது; கருவண்டுக் கண்களில் இன்ப வேதனையிருந்தது. அவள் மார்பகம் ஒரு கணம் விம்மித் தணிந்தது.*

*குமுதம் மலர்ந்தது; அங்கே தண்மதி மடலவிழ்ந்திருந்தான். வண்டு கானம் இழைத்தது; அங்கே மலர்மீது காட்சி தந்தது.*

*பவளக்கொடி புதுமை பெற்றாள், அங்கே நடேசன் முறுவலித்து நின்றிருந்தான்!*

"என்ன, நடேசன் வந்துட்டானா? வந்து என் பவளக் கொடிக்குத் தாலியும் கட்டிப்புட்டானா?" என்று கர்ஜித்தான் மாசிமலைத்தேவன்.

பண்ணையாள் கூறிய விவரம் தேவனின் ஆத்திரத்தைக் கிளறிவிட்டது. கூடப்பிறந்த அக்காளாக இருந்தும்கூடத் தனக்குப் பவளக்கொடியைத் திருமணம் முடித்து வைக்கவில்லையே என்று ஆத்திரப்பட்டான் கிழவியின்மேல். அக்குடும்பத்தை ஒழித்துவிட வேண்டுமென்ற ஒரே நோக்கமே தேவனின் மனதில் வைரம் பாய்ந்தது.

"என்ன அகங்காரம்! நேற்றுப் பிறந்த பயல்; வக்கத்த அனாதைப் பயல் நடேசன் என் சொத்தைத் திருடிக்கிட்டானா? பார்க்கலாம், அவங்க ரெண்டுபேரும் எப்படி ஜோடியா இருக்காங்கண்ணு?"

அடுத்த நிமிஷம் தேவன் வெற்றிச் சிரிப்புச் சிரித்தான். மேற்கண்ட விஷ விதை அவனது வைர நெஞ்சில் சக்தியாகப் பரிணமித்தது.

மறுநாள் இரவு மூன்று நாழிகைப் பொழுது.

"ஏய்."

"எசமான்."

"சொல்றதைச் செம்மையாக் கேட்டுக்கணும். இன்னிக்குச் சாமத்துக்குக் கைவசமிருக்கும் சாராயப் புட்டிகள் அத்தனையையும் அப்படியே கொண்டுபோய் அந்த நடேசன் குடிசையிலே வச்சிரு. மற்றபடி இந்தத் துப்பு யாருக்கும் மூச்சுக் காட்டப்புடாது. உடனே ஓடிப்போய்ப் போலீஸ்காரங்கிட்டே விசயத்தை சொல்லிக் கையோடே அழைச்சிட்டு வந்திடு. கையும் மெய்யுமாப் பிடிபட்டப்புறம் பயல்

எப்படித் தப்புறான்னு காணலாம். அவன் கையிலே விலங்கிட்டாத்தான் அவன் செஞ்ச பழிக்கு என் மனசு குளிரும்."

முறுக்கேறியிருந்து மீசையை ஒருமுறை தடவிக்கொண்டான் தேவன்; அவன் கண்கள் சிவப்பேறின.

அச்சமயம் கம்பீரமாகத் தோன்றிய நடேசனைக் கண்ட மாசிமலைத்தேவன் திகைத்தான்.

"தேவர் ஐயா, உங்களுக்கு ஏதுக்கு வீணாகக் கஷ்டம் கொடுக்கவேணாமின்னுதான் நானே வலிய உங்க கிட்டே வந்திருக்கேன். என்னை இப்போ என்னா செய்ய உத்தேசம்?" என்று முழங்கினான் இளைஞன் நடேசன். அவன் குரலில் சோளம் பொரிந்தது; இடியும் மின்னலும் மின்னின.

மலைத்துவிட்ட மாசிமலை தலைநிமிர்ந்தான். அவன் மனச்சவுக்கு அவனை வளைத்து முத்தமிட்டதோ?

"ஐயாவே, நான் ஒங்களுக்கு என்ன தீவினை செஞ்சேன்? உசிரோடேயிருக்கிறப்பவே செத்துப் போனதாச் சொன்னீங்களாம். இப்போ என்னைக் கேசிலே மாட்டி வைக்க ரோசிக்கிறீங்க. வினை விதைச்சவன் வினையறுத்துத்தான் தீரணும்."

நடேசன் பேசினான்.

"ஐயா, என்னை அடையாளம் புரியுதா?"

"........."

"தேவர் ஐயா, உங்களுக்கு லீலாவைத் தெரியுமா?"

"என்ன, லீலாவையா? ஆமா தம்பி" என்றான் தேவன் பதட்டம் குரலில் இழையோட.

கண்கள் நீரைச் சொரிய நின்ற நடேசனைக் கவனித்த தேவனுக்கு உலகம் சுற்றியது. அவன் எடுத்து நீட்டிய புகைப்படத்தைப் பார்த்த தேவனுக்குக் கண்முன் தெரிந்ததெல்லாம் ஆலவட்டம் சுழன்றன. அந்தப்படத்தில் மூன்று உருவங்களிருந்தன. தேவன் லீலா நடேசன், அந்த நாளில் எடுத்தது!

"நடேசா; ஆமா நீ என் மகன்" என்று அலறினான் தேவன் நடந்த சம்பங்களை எண்ணினான்.

நடேசனின் தாய் லீலா பர்மாவில் தேவன் இருக்கையில் அவனது அன்பிற்குப் பாத்திரமானவள். ஆனால் திடீரென்று கிளம்பிய உள்நாட்டுக் கலகம் அவர்களைத் திசை வேறாகப் பிரித்தது. தேவன் தாயையும் சேயையும் மறந்தான். காலம் மாற்றிவிட்டது அவனை. பின் மூண்ட பர்மா யுத்தத்தில் உயிர் தப்பிய அவர்கள் எப்படியோ காலத்தை ஓட்டினார்கள், நடேசனும் பெரியவனான். அதற்குள் அவன் அன்னையின் வாழ்வும் முடிந்தது. மரணப் படுக்கையில்தான் அவள் தன் மகனுக்கு ரகசியத்தை உணர்த்தினாள். இதை நடேசன் மனத்திலேயே புதைத்துவிட்டான். எதற்கும் ஓர் வரையறை உண்டல்லவா? தன் தாயை வஞ்சித்ததற்குத் தேவனிடம் பழிவாங்கத் துடித்தான் நடேசன். ஆனால்...?

தேவனுக்கு நடேசன் தன் மகன் என்று அதுவரை தெரியவே தெரியாது. அவன் தூண்டில் புழுவாகத் துடித்தான்; விம்மினான். சம்பவங்கள் எத்துணை விந்தையாக உருப்பெற்றுவிட்டன?

"நடேசா"

புத்துணர்வில் மகனை அழைத்தான் மாசிமலைத்தேவன்.

கண்ணீரில் நீந்திய விழிகளை மேலுயர்த்தினான். நடேசன் சரேலென்று வெளியேறினான். தேவனும் 'நடேசா' 'நடேசா' என்று அரற்றிய வண்ணம் பின்தொடர்ந்தான்.

அப்போது "யார் அங்கே?" என்ற அதிகாரத் தொனி எதிரொலித்தது. வாசலில் இரண்டு போலீஸ் ஜவான்கள் நின்றிருந்தனர்.

"மிஸ்டர் 204 துரிதம் பண்ணி வீட்டைச் சோதனையிடுங்க" என்ற உத்திரவு சப் இன்ஸ்பெக்டரிடமிருந்து வந்தது.

ஒரு கேசைப்பற்றி துப்பறிய வந்த தாணாக்காரர்கள் வழியில் தேவனின் சதியை நீண்ட நேரமாக மறைவில் நின்று கேட்டிருக்கின்றார்கள். வெறும் வாயை மெல்லுபவனுக்கு அவல் கிடைத்தால் எப்படியிருக்கும்?

அவ்வீட்டினின்றும் ஆறு சாராயப் புட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டன. தேவன் கைது செய்யப்பட்டான். அவன் வினை அவனைச் சுட்டுவிட்டது!

முன் நிலா.

மாசிமலைத்தேவன் படுத்த படுக்கையாகிப் போனான். அவன் மனச்சாட்சி அவனை அணு அணுவாகப் பிய்த்துத்தின்றது. எலும்பும் தோலுமாகிட்டான். அவன் சொத்து முழுவதையும் நடேசனுக்கு எழுதிவைத்தான்.

"அக்கா, மகனையும் மருமகளையும் பார்க்கத்தானே ஜாமீனிலேகூட ஓடியாந்தேன். திருநாளைக்குப் போன அதுக ரெண்டும் இன்னம் திரும்பல்லியே. என்ன விசயம்?"

விளக்கு வைக்கும் நேரத்தில் கிழவிக்குக் கடிதம் ஒன்று வந்தது. நடேசனும் பவளக்கொடியும் அக்கரைச் சீமைக்குப் போய்விட்டார்கள். அந்த 'ஜோடி' தேவனின் கண்களில் மீண்டும் விழிக்க விரும்பவில்லை!

"அப்படீன்னா என் உயிரு இருக்கிறதுக்குள்ளே அதுங்க ரெண்டு பேரையும் கண்ணாலே காண முடியாதா? ஐயையோ! நான் படுபாவி, கொடுத்து வைக்காதவன். ஐயோ" என்று புலம்பினான் மாசிமலைத்தேவன். மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது.

அணையப்போகும் விளக்கு அழகாக ஒளி வீசியது!

❑

# பவளக் கொடி

ஊர் வெற்றிலை பாக்கு வைத்தாகி விட்டது.

விடிந்தால் கல்யாணம்.

ரங்கூன் தேவர் என்று அழைக்கப்பட்ட சின்னத்தம்பித் தேவரின் ஒரே மகனான சிரஞ்சீவி முத்தையனுக்கும், சிங்கப்பூர்த் தேவரென்று கூப்பிடப்பட்ட பெரியண்ணத் தேவருடைய ஒரே மகளான சௌபாக்கியவதி பளவக்கொடிக்கும் திருமணம்.

இந்த சுபச் செய்தியைக் கேள்விபட்டதும், பணங்குளம் மட்டுந்தானா மூக்கின்மேல் விரலை வைத்தது?

"கண்டீங்களாடி பொண்டுகளா இந்த அதிசயக் கூத்தை? நம்ப பவளக்கொடி 'வாழ்க்கைப்பட்டால் தன்னோட சொந்த அயித்தை மகன் வீரமணிக்குத்தான் வாழ்க்கைப்படுவேன்; இல்லாங்காட்டி, காளிகோயில் பாதாளக் கேணியிலே குதிச்சு உசிரை விட்டுப்புடுவேனாக்கும்' அப்படின்னு வீறாப்புப் பேசினாளே?... ஆனா, இப்ப கதையே மாறிப் பூடுச்சுதே?... பாவம், பவளக்கொடி. பவளக்கொடி அப்பனுக்கும் வீரமணி அப்பனுக்கும் இடையே ஊடாடி உரப்பட்ட அந்த ஜன்மப் பகைமை கெலிச்சதுதான் மிச்சம் போலே. ஆனா, பவளக்கொடியும் வீரமணியும் தங்க அப்பன்மார்களையும் எதிறிக்கிட்டு ஒண்ணடி மண்ணடியா கூடிக்குலாவிப் பேசி மகிழ்ந்ததெல்லாம் இனிமே கதையாகப் போகுதேடி, பொண்டுகளா!...."

சமைந்த பெண்கள் கற்களாகச் சமைந்து போனார்கள்.

"என்னாங்கடா இது? நம்ப சேக்காளி வீரமணி, தன்னோட அம்மான் மகள் பவளக்கொடியைக் கொண்டுக்கிட வேணும்னு ஒரே வைராக்கியத்தோட ஒத்தைக்காலிலே நின்னுக்கிட்டிருந்தானே? இப்ப என்னடான்னா கதையே தடம் மாறிப் பூடுச்சே?... என்னோட பவளக்கொடி கழுத்திலெ என்னைத் தவிர இன்னொரு பய இந்த ஊர் நாட்டிலே மூணு முடிச்சுப் போட்டுப்புட ஏலுமா? அப்படிக்கொத்த

ஒரு இடுசாமம் வரும்னு புரிஞ்சா, அப்பவே எம்புட்டு அம்மான் மகளைச் சிறை எடுத்துக்கிட்டுப் பறந்திட மாட்டேனா நான்?' அப்படின்னு மார்தட்டிப் பேசினானேடா நம்ப வீரமணி?... ஐயோ, பாவம்! வீரமணிக்கு இனி பைத்தியம்தான் பிடிக்கப்போகுது!... ஊம்!..."

இள வட்டங்களுக்கிடையிலும் குமுறல்!

ஊர் வெற்றிலை பாக்கு வைத்தாகிவிட்ட பிறகு, இனிமேல் ஊர் பேசி என்ன, உலகம் பேசி என்ன?

விடிந்தால் முகூர்த்தம்!

⁂ ⁂ ⁂ ⁂ ⁂ ⁂

பெரியண்ணத் தேவருக்கு சந்தோஷம் தலைகால் புரியவில்லை. இந்த ரகசியத்தை வாசலை அடித்துப் போடப்பட்டிருந்த மணப்பந்தலின் நட்ட நடுவில் எரிந்து கொண்டிருந்த காந்த விளக்கு அம்பலப்படுத்திக் கொண்டேயிருந்தது.

"உங்க மச்சான் வேலுத் தேவர் வீடு தவிர பாக்கியுள்ள சகலத்தனை வீடுகளிலேயும் கண்ணாலப் பத்திரிகையும் ஊர் வெற்றிலைப் பாக்கும் வச்சு விருந்தும் சொல்லிப்புட்டோமுங்க அண்ணாச்சி!"

"சபாசு!" என்று வாய்விட்டுச் சிரித்தார் பெரியண்ணன். "பாவம், வேலுத் தேவனும் அவன் மகன் வீரமணியும் உப்புப் போட்டுச் சாதம் உண்ணிருந்தாக்க, இம்மா நேரம் அவங்க ரெண்டுபேருக்கும் நானும் என் தங்கப் பொண்ணு பவளக்கொடியும் செஞ்சு காட்டின அவமரியாதைக்கு கேணியிலெ விழுந்து உசிர்களை மாய்ச்சுக்கிட்டிருக்கோணும்!... என்னமோ, காளிகோயில் முதல் காளாஞ்சி தாவாவிலே ஆந்தா மூத்தவள். வேலுத் தேவனுக்கு அனுசரணையாக இருந்ததாலே, என்னோட வீம்பு பலிக்காமல் போயிடுச்சு. அதுக்காக அவன் ஊருக்கு உசந்த மனுசனாக ஆகிவிட ஏலுமா? என்னோட பணத்துக்கும் பகைக்கும் முன்னாடி அவன் எம்மாத்திரம்? அதனாலேதானே ரங்கூன் தேவர் எங்க வீட்டுச் சம்பந்தத்தை விரும்பி வந்து ஏற்றுக்கிடவும் வாய்ச்சுது! ... சரி, சரி, பொழுது ஓடிக்கிட்டிருக்குது. வாழைமரம் கட்டுங்க. கூந்தல் தோரணம் கட்டியாகணும். ஆளுக்கொரு சாயாத் தண்ணியை ஊத்திக்கிட்டு வந்து, அலுவலை முடிச்சுப்புட்டுத்தான் தலையைச் சாய்க்க வேணும்!" என்றார் அவர்.

முதுகுப்புறத்திலிருந்து பெருமூச்சுச் சத்தம் கேட்டது.

பதற்றம் மூள திரும்பிப் பார்த்தார் பெரியண்ணத் தேவர், "அடடே, பவளமா? வாம்மா, வா" என்றார். அவரது கரிய பெருவிழிகள் மகளைத் துருவி அளந்தனவோ?

பவளக்கொடி முல்லைப்பூ மலர்வது போலப் புன்னகை காட்டினாள்; "அப்போ, முதல் காளாஞ்சி தவசலிலே உங்களுக்கு அயித்தை புருசன் ஏற்படுத்தின அவமானத்துக்கு ஒருபடி கூடுதலாவே இப்ப நீங்க அவங்களுக்குச் செஞ்சு காட்டிப்புட்டீங்களே? பலே!... பலே! நம்ம வீட்டு விருந்துச் சாப்பாட்டுக்கு அவங்களுக்குப் பொசிப்பு இல்லாமல் பூடுச்சே! பாவம்!" என்று ஏளனம் காட்டி நகைத்தாள்.

"அல்லாத்தையும் எங்கண்ணு கேட்டுக்கிட்டுத்தான் இருந்தியாக்கும்!... நீ சொல்றது ஒட்டு மொத்தமான உண்மை அம்மா."

"உங்களுக்கு வார நல்லது கெட்டது எல்லாம் உங்க மகளுக்கும் சேர்த்துதான் என்கிற துப்பு எம்புட்டுக்கன்னி நெஞ்சுக்கு மட்டுப்பட்டடியும் உங்க வழிக்கு வந்திட்டேனே, அப்பா?"

"ஆமா, ஆமா!" என்று பெருமை சுடர் தெறிக்கச் சிரித்தார் தேவர்; "அது சரி, நெக்லேஸ் புடிச்சிருக்கா?" என்று கேட்டார்.

"பிரமாதமா இருக்குங்க!"

"தென்னம்பாளைச் சங்கிலி?"

"கழுத்துத் தாங்காது போலிருக்குங்க!"

"அப்பிடியா? சம்பந்தி வீட்டு அந்தஸ்துக்கும், நம்ப அந்தஸ்துக்கும் தக்கனைதான் அல்லாத்தையும் வீச்சாவே முடிச்சிருக்கேனாக்கும்!"

அப்போது சம்பந்தி வீட்டிலிருந்து முகூர்த்தப்பட்டு வந்தது.

நாணம் கண் பொத்தி விளையாட "ரொம்ப நேர்த்தியாய் இருக்குன்னு நான் சொன்னதாகச் சொல்லியனுப்புங்க, அப்பா!" என்றாள்.

"அப்படியே சொல்லியனுப்புறேன். நேரமாயிருச்சுது. காலா காலத்திலே நீ சாப்பிட்டுப்புட்டு கெட்டியமாய்ப் படுத்துத் தூங்கம்மா, பவளக்கொடி!" என்றார் தந்தை.

"நீங்க எதொண்ணுக்கும் பயப்படாதீங்கப்பா... எனக்குத் தெரியாம என்னை எவனும் சிறை எடுத்துக்கிட்டுப் போயிட முடியாதுங்க அப்பா!" என்று சிரித்தாள் பவளம்!

* * * * *

வட்டிற் சோற்றைத் தட்டி விட்டு எழுந்தான் வீரமணி.

வேலுத் தேவர் திடுக்கிட்டார்.

அவருடைய தர்மபத்தினி சீரங்கம் துவண்டாள்; "தம்பி, கெட்ட சொப்பனம் கண்டதொப்ப அந்த இடுசாமச் சங்கதியை மறந்துப்பிடுறத்தை விட்டுப்புட்டு, வட்டிச் சோற்றைத் தட்டி விட்டுட்டியேப்பா?" என்றாள்.

கண்ணீர் மல்க அன்னையை ஏறிட்டு நோக்கினான் வீரமணி, "ஆயி, நான் என்னோட அம்மான் மகள் பவளத்தை நினைச்சு இப்போ கிலேசம் காட்டலே. உங்க கூடப் பொறந்த பொறப்பு நம்மளுக்குச் செஞ்சு காட்டியிருக்கிற அவமரியாதையை நினைச்சுத்தான் சங்கடப்படுறேன். ஊர் வளமைப் பிரகாரம் நம்ம வீட்டுக்கு மாத்திரம் ஊர் வெற்றிலை பாக்கும், கண்ணாலப் பத்திரிகையும் வைக்காமல் பண்ணிப்பிட்டாரே எங்க அம்மான்காரர்? இதை நினைச்சால்தான் நெஞ்சு ஆறவேமாட்டேங்குது!" என்றான் இளவட்டம்.

"தம்பி, கும்பிடு கொடுத்துக் கும்பிடு வாங்கணும்னு நம்ப ஊர் நாட்டிலே சொல்லிக்கிடுவாங்க. உன் அம்மானை, சிங்கப்பூர்ப் பணம் கண்ணை மறைச்சிடுச்சு. எங்கிட்டே புதுப்பணம் நடமாடாட்டியும், பழைய பணத்துக்கு குறைச்சல் இல்லேயே? நம்ப மச்சு வீட்டு மனாத்தைக் கட்டிக் காப்பாற்றி விட்ட தங்கமப்பா நீ... உனக்குப் பொண்ணுக்கா பஞ்சம்? இந்தத் தையிலேயே நம்ம வீட்டிலேயும் கொட்டு மேளம் கொட்ட வச்சுப்புடுறேண்டா, மகனே!" வீறுபூண்டு பேசினார் வேலு.

வீரமணி சிரித்தான்.

"தம்பி, சாப்பிட்டுப்புட்டுப் படுத்துக்க. விடிஞ்சதும், நீ சிலட்டூர் ரேக்ளாப் பந்தயத்தைப் பார்க்கிறதுக்குப் பறிஞ்சிடு. 'நாளைக்குக் காலம்பற நீ இங்கிட்டு இருந்தா உம் மனசு உன்னையும் தாண்டி மீறிக்கிட்டு ஏங்கித் தவிச்சுக்கிட்டிருக்கும்!"

வீரமணி தலையை ஆட்டினான்!

* * * * *

மாப்பிள்ளை அழைப்பு முடிந்தது. படகுபோல அலங்கரிக்கப் பட்ட காரிலே பவனி வந்த மாப்பிள்ளை முத்தையன், புதிய முறுக்கு மீசை இளம்பரிதியில் மின்ன, தோளில் டிரான்ஸிஸ்டருடன் காரிலிருந்து இறங்கி மணலறையில் அமர்ந்தான்.

மாப்பிள்ளையை உட்கார வைத்துவிட்டு உள்ளே விரைந்தார் சிங்கப்பூர்த் தேவர்.

ஆனால்...

ஏன் இப்படிப் பதறுகிறாள் தேவரின் மனைவி வள்ளியம்மை?

"மச்சான், நம்ப பொண்ணைக் காணலீங்க. எல்லா நகை நட்டுகளையும் போட்டுக்கிட்டிருந்த பொண்ணுகிட்டே கங்கணம் கட்டிக்கிடுறதுக்குப் புதுப் பட்டைக் கட்டிக்கிடச் சொல்லிட்டு உள்ளாற பலகாரம் சுட்டுக்கிட்டு இருந்தேன். மாப்பிள்ளைக்காகத் திரும்பி வந்து பார்த்தாக்க, நகை நட்டுங்க அல்லாம் ஆல வீட்டிலே அப்படியே அப்படியே இருக்குதுங்க! நம்ப மகளைக் காணலீங்க!"

தாய் துடிக்க, தந்தை துடித்தார்.

'காளி ஆத்தா, என்ன சோதனை இது?... நான் எப்பிடி சம்பந்திக்காரங்க மூஞ்சியிலே முழிப்பேன்?' தவித்துத் தண்ணீராக உருகின பெரியண்ணத் தேவர், உறவுக்காரர்களை அழைத்துப் பவளக்கொடியைத் தேடும்படி காதோடு காதாக உத்தரவிட்டார் அவர். மாப்பிள்ளையோ டிரான்ஸிஸ்டரில் பாரதத்திடம் மண்ணைக் கவ்விக் கொண்டிருந்த பாகிஸ்தானின் நிலையைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

தேடப் போனவர்கள் வெறுங்கையாகத் திரும்பினர்.

அப்போது ஒருவன் ஓடிவந்து, "உங்கா அக்கா மகன் வீரமணியையும் வீட்டிலே காணலீங்க!" என்றான். "மெய்யாலுமா" என்று கேட்டுப் பதறினார் தேவர். 'ஒரு வேளை, வீரமணப் பயல் எம் மகளைக் கடத்திக்கிட்டுப் பறிஞ்சிருப்பானோ?' என்ற ஐயப்பாட்டில் துடித்த வண்ணம் கொல்லைப்புறமாக ஓடினார்; "அக்கா, எங்கே வீரமணி?" என்று பதட்டம் மூள வினவினார்.

"ஏம்ப்பா, விருந்து சாப்பிடவா?" என்று கேட்டாள்.

"எம் மகளைக் காணலே; அதுக்காகத்தான் விசாரிக்கிறேன்!"

"உம் மகளை எம்மவனா மடியிலே பதுக்கி வச்சிருக்கான்? எம்மவன் ரேக்ளா பந்தயம் பார்க்கப் போயிட்டானாக்கும்!"

மணப்பந்தல் அமளி துமளிப்பட்டது.

"எங்கேங்கறேன் கண்ணாலப் பொண்ணு?" என்று அதிகாரத்தோடு கேட்டார் ரங்கூன் தேவர், தொடர்ந்து, "முத்தையா!" என்று வீரிட்டார்.

"பொண்ணைக் காணலையாம்டா! எங்கிட்டு ஓடிப்பூடுச்சோ?... இல்லே, அந்தப் பொண்ணோட முறை மச்சான்காரன் சிறை எடுத்துக்கிட்டுப் போயிட்டானோ தெரியலே...! ம்... ஏந்திருடா!... இந்தப் பெரியண்ணன் பண்ணின சின்னத்தனத்துக்கு இவனைப் பின்னாலே ஒரு கை பார்த்துக்கிடுவோம்!"

மாப்பிள்ளை எழுந்து விட்டான்.

பெரியண்ணத் தேவர் விம்மிக் கொண்டு நின்றார்.

வாசலில் வந்து நின்றது ஓர் அழகான ரேக்ளா. அதில் பவளக்கொடியும் வீரமணியும்.

"முத்தையா அண்ணாச்சி!... ஒரு நிமிஷம் நில்லுங்க. நான் பிறந்திச்சு. அப்பவே, எனக்குத்தான் பவளக்கொடி, பவளக்கொடிக்குத்தான் நான் அப்படின்னு எங்க இரண்டு தரப்புப் பெற்றோர்களும் முடிவு செஞ்சிட்டாங்க. அந்த உறவு முறையைச் சத்தியவாக்காக நம்பி நாங்க ரெண்டு பேரும் அஞ்சு வயசிலேயே காளி ஆத்தா சந்நிதியிலே ஒருத்தருக்கொருத்தர் கையடிச்சுச் சத்தியம் பண்ணிக்கிட்டோம். ஆனா ஊடாலே முளைச்ச முதல் காளாஞ்சித் தகராறைப் பெரிசுபடுத்தி எங்க அம்மான்காரர் பவளத்தை உங்களுக்குக் கட்டிக் கொடுக்கத் துணிஞ்சிட்டார். ஆனதாலேதானுங்க, நான் என்னோட முறைப் பொண்ணு பவளத்தை என் அம்மான் மகள் பவளத்தைச் சிறை எடுத்துக்கிட்டுப் போனேன், அதோட பரிபூரண சம்மதத்தின்பேரிலே!... நான் ஆணாகப் பொறந்தவன்... என்னைப் பற்றி இந்த ஊர் நாட்டிலே எப்படியும் பேசிக்கிடலாம்... பரவாயில்லே! ஆனா... எங்க பவளக்கொடி பொண்ணாகப்பொறந்ததாச்சே? அதைப்பத்தி நாளைக்கு ஊர் உலகம் ஏசுமே? அதனாலே நாங்க ரெண்டு பேரும் புருசன் பெண்சாதியாக ஆகிறதுக்கு முன்னாடி ஓடி வந்து

விட்டோம்! இது ஆத்தா பேரிலே ஆணை வச்சுப் பேசற தாக்கல்! இதை நீங்க நம்புங்க. பவளத்தை ஏற்றுக்கிடுங்க. வாங்க மணவறைக்கு!..."

"வீரமணி" என்று விளத்தான் முத்தையன், அவன் கண்களும் பனித்தன; "தம்பி, நான் இதயம் இல்லாத பாவி இல்லே. உன்னோட பவளம் உன்னோட பவளமாகவே எப்போதும் இருக்கட்டும்!... குறித்த முகூர்த்தத்திலே நீ உன் பவளத்துக்குத் திருப்பூட்டு!... என்னைப் பார்க்கிலும் நீயேதான் சகலத்தனை வகையிலவும் உன்பவளத்துக்குப் பொருத்தமானவன்... ம்.. இன்னொரு சங்கதியையும் கேட்டுக்க. நான் நாளைக்கு 'வாரு' க்கு கிளம்பிடறேன். அழைப்பு வந்திருச்சி. இதோ, இந்த டிரான்ஸிஸ்டரிலே."

முத்தையன் கம்பீரமாக மணப் பந்தலைவிட்டு நடக்கலானான்.

பவளம் உள்ளே போனாள்!

* * * * *

"முகூர்த்த வேளை முடியப் போவுது. சீக்கிரம் மணவறையிலே வந்து குந்திக்கிடுங்க, மாப்பிள்ளை!" என்று பகைகடந்த பாந்தவ்யத்தோடு கெஞ்சினார் பெரியண்ணத் தேவர்.

"பவளம்...!"

"இதோ வந்துடுவா - பட்டு உடுத்துக்கிட்டு..."

"வீரமணி!...தம்பி!" என்று அலறிக்கொண்டு வந்தான் முத்தையன்: "தம்பி, உன் பவளம் விருந்து அடுப்பிலேருந்து கொள்ளிக் கட்டையை லாவி எடுத்து அதைத் தன் சேலைத் தலைப்பிலே வச்சுக்கிடுச்சு! ... ஓடியாயேன்!"

எல்லாரும் உயிர் துடிக்க, உள்ளம் துடிக்க, திட்டி வாசலுக்கு ஓடினர்.

அங்கே...

தீச்சுடர்கள் அவள் மேனியெங்கும் தொட்டுத் தோடர்ந்து கொண்டிருந்தன.

"பவளம்! பவளம்!" என்று ஓலமிட்ட வீரமணி, தண்ணீர் வாளியுடன் அவளை நெருங்கினான்.

"மச்சான்! அங்கிட்டே நில்லுங்க! ஆமா, செப்பிட்டேன்!" என்று ஆணையிட்டாள் பவளக்கொடி.

"பவளம்! என்ன விளையாட்டு?"

விழி வெள்ளம் கரை புரள, பவளம் இதழ் திறந்தாள்; "மச்சான்! இது விளையாட்டு இல்லீங்க... இது அக்கினிப் பிரவேசமாக்கும்!... சீதாப்பிராட்டி தீக்குளி நடத்தினாங்களே, அது ராமர் சாமிக்கு மட்டுந்தானா? ஊர் உலகத்துக்காகவும் தானுங்களே?... அந்த நாள் தொட்டு உங்களுக்கிண்ணே காத்துத் தவம் கிடந்தவள் நான். ஆனா, இடை, நடுவிலே கதை தடம் மாறிப் பூடுச்சு... ஆனாலும், விதிப்படி அந்தக் கதை முடிய வேளை பார்த்துக்கிட்டும் இருக்குது. அதுக்குள்ளாற, நான் என்னோட பரிசுத்தத்தை உங்களுக்காக இல்லாட்டியும், ஊர் உலகத்துக்கு மெய்ப்பிச்சுக் காட்ட வேணுமில்லே!... என்னைப் பெரிய மனசு பண்ணித் தடுக்காதீங்க... எப்பவுமே நான் உங்க சொத்தேதான். அட்டியில்லேதான். ஆனாலும், உங்களால சிறையெடுக்கப்பட்ட நான், இப்போ திரும்பி வந்திருக்கேன். உங்களுக்கேதான் வாழ்க்கைப் படவும் போறேன். ஆனாலும்... என்னை ஊர் உலகம் தூய்மையானவள் அப்படின்னு ஒப்புக்கிட வேண்டாமா?"

பவளக்கொடி தீயாகச் சிரித்தாள்.

"பவளம்! நீ தங்கம்! சொக்கப் பச்சை ஆத்தா நீ! உத்தரவு தா!... நெருப்பை அணைச்சுப்புடுகிறோம் தாயே!.."

அழுகுரல்கள் விண்ணைச் சாடின.

"காளி ஆத்தா!... என் பவளத்தைக் காப்பாற்ற மாட்டேயா, தாயே மூத்தவளே?... சரி, நானும் என் பவளத்துக்குத் துணை போறேன்!..."

வீரமணி வெறிகொண்ட நிலையில், பவளத்தைச் சுற்றி எரிந்து கொண்டிருந்த தீக் கங்குளைச் சரண் அடைந்தபோது....

'பட பட' வென்று நீதியின் தீர்ப்புப் போலே முழங்கத் தலைப்பட்டது வானம்! ஆமாம், அதோ மழை பொழிகிறது!

❑

# உலகம் பொல்லாதது

அறந்தாங்கி ஸ்டேஷனில் ரயில் நின்றதுதான் தாமதம்; ரயிலினின்றும் ஜனங்கள் கும்பல் கும்பலாக இறங்க ஆரம்பித்தனர்; அவர்களில் குமாரசாமியும் ஒருவன். தலையில் சுமந்திருந்த பெரிய மூட்டையுடன் ரயில் நிலையத்தைவிட்டு ஊருக்குள் நடந்தான். வெய்யிலின் வெக்கை சற்று தணித்திருந்தது; அந்தி மயங்கும் வேளை.

ஊரின் முன்னடியிலிருந்த கடையில் 'சாயா' குடித்துவிட்டுப் பணத்தை முதலாளியிடம் நீட்டியவண்ணம் 'ஏனுங்க, ஆவணத்தாங்கோட்டைவரை துணைக்கு ஒரு ஆள்வேணும். சில்லரை எதாச்சும் கொடுத்துடலாம்; கிடைக்குங்களா?' என்று கேட்டான் குமாரசாமி.

"அவசியமானா ஒரு ஆளை வரச் சொன்னாப் போச்சு" என்று சொல்லிவிட்டு, 'ஏய், காளி' என்று அழைப்பைச் சுண்டிவிட்டான் கடைக்காரன். சோம்பல் முறித்து விசித்தெழுந்த காளியை ஏற இறங்கப் பார்த்தான் குமாரசாமி.

"காளி, சீக்கிரம் எழுந்திருப்பா, ஒரு கிராக்கி வந்திருக்கு. பாக்கி தூக்கத்தைத் திரும்பவந்து மறந்துடாமல் தூங்கிக்கலாம், ஐயாவோடே சாலைவரை போகணும்" என்று மேலும் துரிதப்படுத்தினான் டீக் கடைக்காரன்.

கந்தலும் கிழிசலுமாகப் பார்க்கப் பரிதாபமாகத் தோற்றம் கொடுத்த காளிக்கும் ஒரு தேத்தண்ணீர் வாங்கிக் கொடுத்துப் புறப்பட்டான் குமாரசாமி.

அந்தி மங்கல் எங்கும் படர்ந்தது. சூரியனின் கதிர்கள் பொன் ரேக்குப் பெற்றுப் பிரகாசித்தன. இயற்கை கண்ணாமூச்சு விளையாடியது.

மூட்டையை இதம் பதமாகத் தோளில் சாய்த்துத் தலை

முண்டாசுக்கு அணைவாக வைத்துக்கொண்டு காளி முன் சென்றான். குமாரசாமிக்கு அவனையும் அறியாமல் காளியிடம் அனுதாபம் சுரந்தது. வழிப்பயணத்துக்குப் பேச்சு இருந்தால் தொலை தூரம் தோன்றதல்லவா? காளியின் வாயைக் கிளறிவிட்டால் ஒருகால் அவனைப்பற்றி ஏதாகிலும் விருத்தாந்தம் புறப்படுமென்ற ஆவல் குமாரசாமிக்கு. மறு வினாடி அவன் இதய சபலத்தைத் துழாவியிறந்தவனாட்டம் காளியே முதலில் பேச வாய்தூக்கினான்.

"அண்ணாச்சி, என்ன இப்படி ஒண்டியாய்ப் புறப்பட்டீங்க? ஆனா முடிச்சைப் பார்த்தாப் பெலமாக் கனக்குது. வேறு யாரும் உங்க சம்சாரம், பிள்ளைகுட்டி யாராச்சும் வருவாங்களா? அல்லது முன்னாடியே போயாச்சா?"

இது காளியின் கேள்வி.

சற்றே மறந்திருந்த ஏதோ ஒன்றை அவன் நினைவு படுத்திவிட்டவன் போலக் கணநேரம் குமாரசாமி பேசாதிருந்தான்.

"காளி, எனக்கு இன்னும் கல்யாணம் ஆகலை. ஆனா என் தங்கச்சிக்கு முதலிலே கல்யாணம் கட்டினப்புறம்தான் என்னைப்பற்றி யோசிக்கணும். தங்கச்சியையும் அம்மாவையும் காலம்பற வண்டிக்கு ரயிலேற்றிவிட்டேன். அவசரமா ஒரு காரியம் எனக்குத் தலைமேலே இருந்துச்சு. அதாலே நான் அவங்களோடு போக வாய்க்கல்லே எனக்காகக் காத்துக்கிட்டிருப்பாங்க. சொந்தக்காரங்க வீட்டிலே ஒரு சடங்கு. அதுக்குத்தான் போறேன்" என்று குமாரசாமி கூறினான். 'ஊம்' கொட்டிக் கேட்டான் காளி.

குறுக்கிட்ட ஆற்று மணலைத் தாண்டிச் சென்ற சமயம் கூப்பிடு தூரத்தில் 'குபு குபு' வென்று தீப்புகை மண்டலம் மேகத்தை எட்டிப்பிடிப்பது போன்று பரவி வந்ததைக் கண்ட குமாரசாமி, வேடிக்கை மாதிரி அக்காட்சியைக் காளிக்கும் காண்பித்தான்.

"இதுக்கு இம்மாம் தெகப்புக் கொள்றீங்களே, அஞ்சாறு வருசத்துக்கு முந்தி ஜப்பான்காரன் பர்மாவைக் குண்டு போட்டுத் தீக்கிரையாக்கினதை நீங்க கண்ணாலே காணக்கூடத் துணிச்சல் படமாட்டீங்க போலே. ஹும்; பாவிப்பய சண்டைவந்து..." என்று பேசிக்கொண்டு வந்த காளியின் குரலில் அளவிறந்த துயரம் தடம்பதிந்திருந்தது. இதையுணர்ந்த குமாரசாமி கனிவுடன்

பச்சாதாபத்தோடு காளியைப் பார்த்தான். அவன் கண்களினின்றும் அருவி சோர நீர்ச்சொட்டுகள் படிப்படியாக வழிந்துகொண்டிருந்தன.

"காளீ"

"ஐயா, இருந்திருந்தாப்போல இப்படி ஏன் கண் கலங்குதுன்னுதானே ரோசனை பண்ணுறீங்க. வயிற்றுப்பிழைப்புக்காக நானும் என் தங்கச்சியும் கடல் கடந்து பர்மா தேசத்துக்குப் போனோம். பெற்றவுங்க எங்களை அனாதரவாவிட்டுட்டுச் செத்துட்டாங்க. வேலை செஞ்சு பிழைச்சு அதிலே கிடைக்கும் வரும்படியைக் கொண்டு நானும் தங்கச்சியும் காலத்தைக் கடத்தினோம். இப்படி வருசம் ஒண்ணு தாண்டிப்போச்சு. அப்புறம்தான் சண்டை மூண்டு குண்டு வீச்சுத் தொடங்கியது. கடை அலுவலா அடுத்த வங்குசாலை வரை போயிட்டுத் திரும்பி வந்து பார்த்தேன். ஊரே நிர்த்தூளிப்பட்டுச்சு. பிணக்காடு கணக்காப்பட்டணம் தோனுச்சு. உயிரு தத்தளிக்க, பதைச்ச நெஞ்சோடு என் கண்ணை எங்கெல்லாமோ தேடினேன்; அலசினேன்; காண முடியலை. அப்பவே என் ஜீவன் வடிஞ்சிருச்சு. உயிர் தப்பிச்ச இரண்டொரு பொங்கிச் சாமியார்களையும் விசாரிச்சுப் பார்த்தேன். தெரியாதுன்னுட்டாங்க. நடைப் பிணமாக நடந்து நம்ப மண்ணை மிதிச்சேன். சுற்று வட்டாரத் திருநாள் ஒண்ணு பாக்கி வைக்காம இன்னமும் தேடிக்கிட்டுத்தான் இருக்கேன். ஐயாவே, நீங்களும் ஒரு தங்கச்சியோடே பிறந்தவங்கதானுங்களே. என் ஆசைத் தங்கையை என் உயிர் இருக்கிறதுக்குள்ளே காணலாமா? காணக்கூடுமா?" என்றான் காளி. அவன் பேச்சில் சொல்லுக்குப் புறம்பான சோகமிருந்தது; சஞ்சலமிருந்தது; ஆர்வமிருந்தது; ஆதுரமிருந்தது!

குமாரசாமி காளியை நோக்கினான். அவன் செயலிழந்த பாவையாக நின்றிருந்தான். விழிக்குழியில் புதைந்து கிடந்த கண்ணின் கருவிழிகள் அங்குமிங்கும் யாரையோ தேடியலைந்தன. அவன் தங்கையையா? 'சகோதரியை மீண்டும் பார்க்கலாமா?' என்ற ஆசைக் கனவில் மிதந்த அவன் இமைப்பொழுது அதிர்ச்சியடைந்தான். அதே நொடியில் 'இனி, எப்படி, எங்கே அவளைக் காண இயலும்!' என்ற நிலை ஏற்படவே மலர்ச்சி பெற்ற அவன் வாட்டமுற்றான்; வாடிப்போனான்.

சாலை எல்லையை மிதிக்கும் வரை இருவரும் மோன நிலையில் வழிநடந்தனர். ஊரை அடைந்தவுடன் குமாரசாமி

சில்லரையை எண்ணி எட்டு அணா காளிக்குக் கொடுத்தான். காளி சிரித்தான்; பலமாகச் சிரித்துக் கொட்டினான், ஊழிக் கூத்தில் பிரமன் உதிர்த்த பேய்ச் சிரிப்புக் கணக்கில்! அவன் சிரிப்பில் இதய அந்தரங்க எண்ணங்கள் பூராவும் அலைபாய்ந்து மேல் பூச்சாகி எதிரொலிப்பது போன்று குமாரசாமி நினைத்துக்கொண்டான்.

"பாவம் பைத்தியம் போல"

குமாரசாமி இரக்கங் காட்டினான். காளி அப்படியென்றால் பைத்தியமா? யார் சொன்னார்கள்?

"ஐயா, காசு பணத்துக்கு என்னாங்க. உங்க மாதிரி நல்ல மனுசங்கதான் எனக்குப் பெரிசு. எனக்கு என் தங்கச்சிப் பொண்ணு கிடைக்குங்களா?" என்று கூறி, அவன் தங்கியுள்ள வீட்டைக் கேட்டுக்கொண்டு காளி விடை பெற்றுக்கொண்டான்.

அடுத்த நாள்.

மத்தியானம் கடைத் தெருப்பக்கம் குமாரசாமி சென்றிருந்தான்; சடங்கு விசேஷம் முடிந்ததால் ஊருக்குப் புறப்படச் சாமான்கள் வாங்கி வரப் போயிருந்தான் அவன்.

வீட்டின் தாழ்வாரத்தில் கைகளால் முகத்தை ஏற்றபடி உட்கார்ந்திருந்தாள் அவன் தங்கை. சீவி முடித்திருந்தாள்; புது ஆடை உடுத்தியருந்தாள். அழகான முகம் பொலிவுடன் விளங்கியது.

"குமாரசாமி ஐயா இருக்காங்களா?" என்று கேட்டுக் கொண்டு காளி முன்னே வரலானான். திரும்பவும் ரயிலடிக்குப் போக ஏதாவது 'சான்ஸ்' தட்டலாமல்லவா?

உட்கார்ந்திருந்த அப்பெண்ணை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தான். யாருடைய முகம் அது? காளி பின்னும் ஓர் அடி முன் எடுத்து வைத்து, அந்த யுவதியை நோக்கினான்.

"நெசமாவே நம்ப தங்கச்சியேதானா இது?"

கனவின் தொடுகோட்டில் சஞ்சரித்துக்கொண்டிருந்த அவனுக்குச் சுய நினைவு முடுக்கப்பட்டதும், அடுத்தும் ஒரு தரம் அவளைப் பார்த்தான்.

*தன் தங்கச்சியைப் போன்ற அதே சாயல் அதே முகம்! அதே பார்வை. அப்படியென்றால் அவள்தான் அவன் தங்கையா?*

*அவன் தங்கச்சியை அப்படியே உரித்து வைத்திருந்தது போலிருந்தது அப்பெண்ணின் உருவம். ஆனால் தன் தங்கச்சி மண்ணாகிவிட்டிருப்பாள் என்பதையும் காளி அவ்வப்போது உணராதில்லை. என்றாலும் சபலம் பாசம் அவனை ஆட்டிப் படைத்தது. ஆட்டுவித்தால் ஆடாதார் யாரே ஊர்?*

*இனம் விளங்காத பாந்தவ்யம், சிதைந்த எண்ணக் கலவையின் பிரதிபலிப்பென அந்தப் பெண்மீது கனிந்தது காளிக்கு. அவள் அவனுள் இடம் பெற்றாள்.*

*“தங்கச்சி” -*

*அழைத்த மனம் மணம் பெற்றது; உள்ளம் மலர்ந்தது; உடல் சிலிர்த்தது. காளி பரவசமடைந்தான். நரம்புக்கு நரம்பு புத்துயிர் ஊர்ந்து கிளர்ந்தது.*

*தங்கச்சி என்ற பாசத்தின் பிணைப்புடன், துல்லிய அன்போடு அந்தப் பெண்ணை இமை கொட்டாது பார்த்து நின்ற காளிக்கு இவ்வுலக எண்ணமே கிடையாதுபோலும். அவன் தன்னையும் மறந்து சிரித்தான். ஆமாம்; அவள் உருவிலே அவன் தன் சொந்தத் தங்கச்சி நடமாடுவதை, அழகு காட்டி விளையாடுவதைக் கண் மூடாமல் பார்த்து நின்றான்!*

*குமாரசாமி கையில் பழங்களுடன் பிரவேசித்தான். வழியில் நின்ற காளியைக் கண்டுவிட்டு, ‘காளி, வாப்பா’ என்று முகமன் கூறினான். காளி அப்போதுதான் உணர்வு பெற்றான்.*

*தமையன் வந்ததும் ஒதுங்கி நின்ற அப்பெண் சாமான்களை உள்ளெடுத்துப் போனாள்.*

*“ஐயா, கொஞ்சம் தாகத்துக்கு வேணும்” என்றான் காளி.*

*உண்மையில் அவனுக்குத் தாகமில்லை. ஆனால் அவள் கையால் ஒரு மிடறு தண்ணீரேனும் அருந்தவேண்டுமென்றிருந்தது அவனுக்கு. தண்ணீர், செம்பில் கொணர்ந்தாள் மங்கை.*

அவள் நீட்டிய செம்பைக் கை நீட்டி வாங்கின காளியின் விரல்கள் அவளது பூங்கரங்களைத் தீண்டின. அவன் புளகித்தான்; பூர்த்தான்; பாச வெள்ளம் கரைபுரண்டது. தன் தங்கச்சியுடன் கழித்த 'அந்த நாட்கள்' மனதில் நிழலாடின. அவன் அவளை உவகையுடன் சிருஷ்டி செலுத்தினான். ஆனால் பதிலுக்கு அவள் விழித்த நோக்கிலே ஏன் இத்தகைய புயல்? சூறாவளி.

துவண்டு மறையும் மின்னலென அவள் மறைந்தாள.

"அண்ணாச்சி."

ஏககாலத்தில் குமாரசாமியும் காளியும் திரும்பினார்கள். குமாரசாமி மட்டுமே உள்ளே நுழைந்தான். காளி ஏக்க முற்றுச் சிலையானான்.

"தங்கச்சி."

காளி மனதிற்குள் அழைத்துக்கொண்டான். அவன் நிலைப்படியைத் தாண்டி நின்றாள்; சேலை தரையில் மிதந்து கிடந்தது. பார்வையைத் திசை விலக்கிவிட்டாள்.

"அண்ணாச்சி, யாரு அந்த மனுசன். அப்பவே தொட்டு என்னையே விழுங்கிப்பிடுகிறவர் கணக்காப் பார்த்துக்கிட்டே இருக்காரு. அந்த ஆளு பைத்தியமாங்காட்டியும்?"

அந்த வார்த்தைகள் காளிக்குத் தெளிவாகக் கேட்டன. அந்தப் பெண்தான் பேசினாள்.

'சுரீர், சுரீர்' என்று அவ்வார்த்தைகள் ஒவ்வொன்றும் கூரிய அம்பாகப் பாய்ந்தன அவன் உடல், உள்ளம் இரண்டிலுமாக. எய்தவனிருக்க அம்பை நோவதா? அம்பை சொல் அம்பை எய்தது அந்தத் 'தங்கச்சி' யாயிற்றே? உடன் பிறக்காவிட்டாலும் உடன் பிறந்ததாகப் பாசம் சொரிந்தானே அவன்?

காளி அன்பு காட்டினான். அவேளா பழி காட்டிவிட்டாள். பேதை! அன்பும் பழியும் துருவங்களின் இரு மாறுபட்ட புள்ளி மையங்களல்லவா? இந்த இரண்டு உள்ளங்களும் எங்ஙனம் ஒன்று சேர முடியும்? அவன் பிணைத்து இணைக்கப் பார்த்தான். அவள் அபவாதம் சொல்லிவிட்டாளே! எண்ணெயும் தண்ணீரும் ஒன்று கலக்க முடியுமா, என்ன?

அந்த யுவதி எய்த அம்பு காளியைத் துளைத்துக்கொண்டிருந்தது. புண் ரணமாயிற்று. கணத்தில் மீண்டும் அம்பு வீச்சு. ஐயையோ! அவன் துடித்தான். கரையில் வீசியெறிந்த மீனைப்போல.

"தங்கச்சி"

கண்ணீர் வெள்ளம், வெந்து புரையோடிய நெஞ்சு, உயிர் ஊசலாடிய உடல்; இந்நிலையிலும் காளி அவளை மறக்கவில்லை.

துள்ளியோடும் ஆற்று நீரின் மேல்பரப்பு அழகாக சலனமற்றுத்தானே தோன்றுகின்றது. ஆனால் நீரின் அடிப்பரப்பிலே சுழித்தோடும் சுழல் யாருக்குப் புலப்படும்?

மனம் ஒரு குழந்தை; எடுப்பார் கைப்பிள்ளை. எடுப்பவர்கள் குழந்தைவசம் மனமிழக்கலாம். அதே சமயம் குழந்தை எடுப்பவரைப்பற்றி எந்நிலையில் தீர்ப்பு நிர்ணயம் செய்கிறதோ? யார் அறிவார்கள்? காளியின் மனமும் அப்படித்தான்; அவன் அந்தப் பெண்ணைத் தங்கையாக மதித்தான். தன் சொந்தச் சகோதரியைப் போலவே, ஒரே தினுசாக அசல் அவளே மாதிரி காணப்பட்ட அந்தச் சிறுமியின் சூழ்நிலையிலேயே இருந்து, ஏதேனும் குற்றவேல் புரிந்து வாழ்வின் எஞ்சும் நாட்களைக் கழித்துவிடலாமென்று கனவு கண்டான் காளி. இது குறித்துக் குமாரசாமியிடம் பேச்செடுக்கவுமிருந்தான் அவன். ஆனால் அந்தப் பழி! காளி பாவமறியாதவன். பழி சுமத்தப்பட்டான், பாவம்!

காளி கனவிற்குங் கனவின் விழிப்பிற்கும் ஊடே அல்லாடினான். விழிப்பு அவனது கண்களை வழி திறந்தது.

அதே கணம் அவ்வீட்டை விட்டு வெளியேறினான். நீர் முட்டிய கண்களால் உலகத்தைத் துழாவினான். காளிக்கு உலகம் இதயமற்றதாகப்பட்டது; பாசமற்றதாகப்பட்டது; அவிழ்க்கக்கூடாத விடுகதையாகப்பட்டது. உள்ளத்தில் என்றும் பசுமையுடன் சிலையோடிருந்த தன் ஆவித் தங்கையை அடுத்து அதே ஸ்தானத்தில் தங்கச்சியென மதித்த அந்தப் பெண்ணை அப்புறம் அவள் உண்டாக்கிவிட்ட ஆறாத புண்ணை ஆகிய இவற்றைச் சுமந்தவாறு அவன், கால்கள் இழுத்த திக்கில் நடக்க ஆரம்பித்தான். நடந்தான், நடந்துகொண்டேயிருந்தான். வர வர அவனுடைய நேத்திரங்களின் கூட்டுறவில் உலகம் சூன்யமாகிக் கொண்டே வந்தது! உலகம் பொல்லாதது! ❑

# தெய்வம் நேரில் வரும்

அந்தத் தேதித் தாள் அப்புறம் கிழிக்கப்படவே இல்லை!...

அப்படியென்றால், காலம் மாறவில்லையென்று பொருளா?

ஊஹூம்!

காலம் மாறிக் கொண்டுதான் இருக்கிறது.

ஆனால், அவர்களைப் பொறுத்தமட்டில் மட்டும் காலம் மாறவில்லை.

சுவரில் தொங்கிய காலண்டரில் கிழிக்கப்படாமல் இருந்த அந்தத் தேதித் தாளை பழுப்புப் படிந்து தூசும் தும்பட்டையுமாகத் திகழ்ந்த அந்த தேதித் தாளைக் கிழிபட்ட மனத்தோடு கிழிபட்ட மனத்தில் ரத்தமும் பாசமுமாகப் பொங்கிப் புரண்ட மனத்தோடு பார்த்தான். பார்த்துக் கொண்டேயிருந்தான் ஆனந்தன். கனத்து வலித்த கண் விளிம்புகளினின்றும் சுடுநீர் மாலையாக நீண்டது. எதை நினைத்தான். எதுவோ நினைவில் வந்தது.

'16-10-1970' என்று அந்தத் தேதித் தாள் சுட்டிக்காட்டிய வண்ணமிருந்த அந்த நாளை அவனுடைய உதடுகள் முணு முணுத்தன. இமைகள் பொருந்தின. இமைகள் மூடிய கருமணிகள் இரண்டிலும் அந்தச் சித்திரம் மாறி மாறி மாற்றித் தரிசனம் தந்தது. 'ஐயையோ... தெய்வமே! ... ராஜா! ... ஓ....மை டியர் ராஜா!' - விம்மல் வெடித்தது. நெஞ்சு எப்போது வெடிக்கப் போகிறதோ?

காலடிச் சத்தம் கேட்டது.

ஆனந்தன் சுயப் பிரக்ஞை கொண்டான். கொண்ட வளை ஏக்கம் சூழப் பார்த்தான். "நீ நடந்து வந்திருக்கே. அந்தச் சத்தத்திலே நான் நம்ப ராஜாவோட கால் சலங்கைச் சத்தத்தைக் கேட்டேன்... ஆமா... சுசீ!" என்று விம்மினான்.

சுசீலா உயிர்க் கழுவில் ஊசலாடினாள். இன்று நேற்றுத்தானா இப்படி? கழிந்த இருநூற்று இருபத்திரண்டு நாட்களாகத்தான் இந்த ஜீவ மரணப் போராட்டம். இவ்வீட்டில் விதியாக வினையாக தெய்வமாக விளையாடிக் கொண்டிருக்கிறது விளையாட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறது!

"அத்தான் வாங்க, சாமி கும்பிடலாம்..." என்றாள் சுசீலா. பூங்கரங்களிலே பூசனைப் பொருள்களும் பூவும் இருந்தன. குளித்து முழுகிக் கொண்டை போட்டிருந்த கேசக் கற்றைகளில் செருகப்பட்டிருந்த பூச்சரத்தினின்றும் நீர் சொட்டியது. சொட்டிய விழிநீரைத் தட்டிவிடச்சிந்தை இழந்து, கொண்டவனின் கரம் பற்றி அழைத்துச் சென்றாள் அவள் மெய் நடுங்கியது.

தீபாராதனை முடிந்தது.

"விபூதி குங்குமம் எடுத்துக்குங்க" என்றாள். "இன்னிக்கு சனிப் பெயர்ச்சியாம்!"

அவளை ஏறிட்டு ஊடுருவிப் பார்த்தபடி, விபூதி குங்குமம் எடுத்துக் கொண்டான் ஆனந்தன். நெற்றியில் தரித்துக்கொள்ளப் போனவன், 'டக்' கென்று நின்று, சுவர்க்கோடியின் கீழ்முனையை நோக்கி நடந்து, அந்தப் பேசும் பொற்சித்திரத்தின் நெற்றியில் அழகு கொழித்த நெற்றியில் விபூதியையும் குங்குமத்தையும் இட்டான். "ராஜா...! ஐயோ ராஜா... தெய்வமே! ஐயையோ தெய்வமே..." வெறிபூண்டு ஓலமிட்டான். பைத்தியம் பிடித்துவிட்ட மாதிரி சுசீலாவின் நடுங்கும் கைகளைப் பற்றிக்கொண்டு, "சுசீ, நம்ம ராஜா நம்மகிட்டே திரும்பி வந்து சேர்ந்திடுவான்னு இன்னமும் நீ நம்புறே! அப்படித் தானே சுசீ?" என்று சின்னப் பிள்ளை மாதிரிக் கெஞ்சும் குரலெடுத்துக் கேட்டான். மார்பை அழுந்தப் பிடித்துக்கொண்டான்.

சோகத்தில் தெளிந்த நம்பிக்கை அவள் இதழ்களிலே புன்னகையாகச் சுடர் தெறித்தது. "தெய்வத்தைத்தான் இன்னமும் நான் நம்பிக்கிட்டு இருக்கேன். ஆனதாலே, நம்ம ராஜாவை அந்தத் தெய்வம் நம்பிக்கிட்டே மீட்டுக் கொண்டாந்து பத்திரமாய் ஒப்படைச்சிடும்னு தோணுது அத்தான்..." பெற்ற மனம் உருகி வழிந்தது, கண்களில்! காலை இளஞ்சுடரொளியில் வெண் முத்தங்கள் பளிச்சிட்டன. "சனியும் பெயர்ந்திடுச்சாம்!" தொடர்ந்தாள்.

அவன் மெய்ம்மறந்தான். 'ஆஹா!' என்று தனக்குத்தானே சொல்லிச் சிரித்தான். புதிய ரத்தம் பெற்றவனென அவன் திசை மடங்க முனைந்தான். என்னவோ இடித்தது. 'டங்' கென்று அரவம் கேட்டது. அரவம் கண்டாற் போன்று விழித்தான்.

நடை வண்டி நிலை குப்புறக் கிடந்தது.

"ராஜா... என் கண்ணே! என் தெய்வமே... உன்னைப் பெற்ற எங்களுக்கு இனியானும் உயிர்ப் பிச்சை அளிக்க மனசு இறங்கப்படாதாடா?...ஐயோ!"

வீரமாகாளி சிரித்துக் கொண்டிருக்கிறாள்...

* * * * *

அறந்தாங்கி புதுக்கோட்டை பஸ், வீட்டைச் சுற்றி மடங்கியது.

எதை நினைப்பான்?

எதை மறுப்பான்?

ஆனந்தனின் மேனி புல்லரித்தது. அந்தப் பதினோரு மாதங்களில் ராஜாவை அழைத்துக்கொண்டு இதே காரில் போய் குழந்தை ஸ்பெஷலிஸ்ட் டாக்டர் விசுவிடம் எத்தனை தடவை காண்பித்து மருந்து வாங்கி வந்திருக்கிறார்கள்.

விதிக்கு மருந்து இல்லையாம்....

வினைக்கும் மருந்து இல்லையா?

"தெய்வமே, எங்க ராஜா எங்கே?"

மனம் அழுதது.

ராஜா எங்கே?

ஏமாற்றமும் ஏக்கமும் புடைசூழ, நெற்றி நரம்புகள் புடைத்து நிற்க, நிலைக்காமல், நிற்காமல் அங்கும் இங்குமாகத் தேடினான் ஆனந்தன். சித்தபேதம் கொண்டவன் மாதிரி.

"ராஜா..."

பாசம், கண்ணீராகப் பொங்கிப் புரள, கண்ணீர் பாசமாகப் பெருகி வழிய, வெறி கொண்ட பாவனையில் அலறினான் அவன்.

உயிர்ப் பதைப்புடன் ஓடோடி வந்தாள் சுசீலா. தாய் நெஞ்சம் தவித்தது. துடித்தது. புடவை முன்றானை நாசியை நாடியது. "அத்தான், இட்டிலியைச் சாப்பிடுங்க!" என்று வேண்டினாள்.

"நம்ப ராஜாவை விட்டுட்டு என்னை மட்டும் இட்டிலி சாப்பிடச் சொல்றியே, சுசீ?"

"ஐயோ, அத்தான்!"

"சுசீ, அப்போ நம்ப ராஜா துளித் துளியாக இட்டிலியை 'நப்பு'க் கொட்டிச் சுவைச்சுத் தின்பானே! தெய்வம் போல... அந்த அழகை எப்படி சுசீ மறக்கமுடியும்?"

"ஆமாங்க!" என்று கேவிக் கேவி அழுதாள் அன்னை, "சாப்பிட்டுட்டு கடைப்பக்கம் போங்க, மனசுக்கு ஒரு மாற்றம் கிடைக்கலாமுங்க" என்றாள்.

"சுசீ, நீ ஒண்டியா இருந்து, அழுது புலம்பி, உருகி உருக்குலைந்து போகிறேன் என்கிறாயா? உன் கண்ணீரைத் துடைக்க ராஜாகூட இல்லையே, சுசீ?"

"ஐயோ, ராஜா! தெய்வமே, எங்க தெய்வத்தை எங்ககிட்ட நல்லபடியாய் ஒப்படைத்து விடு, தெய்வமே!"

அப்போது, வீரமாகாளி கோயில் மணி ஒலித்தது.

"சுசீ!"

"அத்தான், தெய்வம் நல்ல சகுனம் கொடுக்குதுங்களே! நம்ம ராஜா உயிரோடு நம்பகிட்டே வந்து சேர்ந்திடுவான்னுதானே அர்த்தம்?"

'ஊம்' கொட்டினான் ஆனந்தன்.

அவள் சிரித்தாள்.

சிற்றண்டி முடிந்தது.

அவனும் அவளும் மௌனப் பிண்டங்களாக நின்றார்கள். அவர்கள் பார்வையில் ராஜாவின் வெள்ளிக்கிண்ணி தென்பட்டது; ராஜாவின் நடைவண்டி காட்சிதந்தது. அதோ, கிலுகிலுப்பை, ஊதுகுழல், டமாரம்!

ராஜா...ராசா...

பெற்ற உள்ளங்கள் இரண்டும் தணல் மெழுகுகளாயினவோ?

கனவுகள் கண்டு விழிப்பவன்போல ஆனந்தன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தோடினான்: "சுசீ! இதோ பார் நம்ப ராஜாவை!" என்று ஆனந்தக் களி துலங்கக் கூவினான்.

பழைய பத்திரிக்கையொன்று காலில் சிக்கியது. எடுத்தான் ஆன்ந்தன்.

இந்தப் படத்திலுள்ள ராஜா எங்கள் ஒரே குழந்தை. வீரமாகாளியம்மன் தந்த வரப் பிரசாதம். பூச்சொரியல் திருவிழாக் கச்சேரியின்போது நாங்கள் கச்சேரி கேட்டுக்கொண்டிருந்தோம். எனக்கும் என் மனைவிக்கும் நடுவில் எங்கள் கண்மணி ராஜா அமர்ந்திருந்தான். அம்மன் பேரில் பாடப்பட்ட ராகமாலிகையில் மெய்மறந்திருந்த நாங்கள் சுயநினைவு பெற்றுப் பார்க்கையில் எங்கள் தெய்வத்தைக் காணவில்லை!

தேடாத இடமில்லை; ராஜா இருபது சவரன் நகைகள் அணிந்திருந்தான்.

நகைகளைப் பற்றிக் கவலையே இல்லை. ஆனால், எங்கள் ராஜாவை மட்டும் யார் கண்டாலும், யார் கையில் இருந்தாலும் எங்களிடம் உயிரோடு ஒப்படைத்தால் போதும். அவர்கள் கேட்கும் பொருளைத் தட்டாமல் கொடுப்பேன். அறந்தாங்கியில் ராஜா காபி முதலாளி ஆனந்தனை யாவரும் அறிவார்கள். ஒரு உயிரைக் காட்டுவதன் மூலம் இரண்டு உயிர்களைக் காப்பாற்றிய புண்ணியம் கிடைக்கும்!

இப்படிக்கு
**ஆனந்தன் - சுசீலா**

விளம்பரம் ராஜாவைக் காட்டவில்லை.

'எங்களுக்கு பைத்தியம் பிடிச்சிட்டால்கூடத் தேவலாமே?' என்று தவித்தார்கள் பெற்றவர்கள்.

❋ ❋ ❋ ❋ ❋ ❋

நிலா மலர்ந்த முன்னிரவு வேளை.

ஆனந்தன் முன்கட்டிலும் சுசீலா பின்கட்டிலுமாகப் படுக்கைகளில் புரண்டு கொண்டிருந்தார்கள். ராஜா பிரிந்த பின், அவர்களும் இப்படிப் பிரிந்து விட்டனர் போலும்!

கசக்கிப் பிழிந்த பெருமூச்சுகள்!

கணங்கள் பேய்க் கணங்களாக ஊர்ந்தன.

அப்போது

"தாயே, ராப்பிச்சை போடு!.... உன் பிள்ளை குட்டிங்க நல்லா இருக்கும். என் மகன் பசியாலே துடிக்கிறான். பிச்சை போடம்மா... தர்மம் தலைகாக்கும் தாயே!"

வாசற்புறமிருந்து சாடி வந்த சொற்கள் சுசீலாவின் தாய் உள்ளத்தில் சிலிர்ப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ராசா சாப்பிடும் வெள்ளிக் கிண்ணியில் சோறும், குழம்பும் போட்டு எடுத்துக் கொண்டு வெளியே நடந்தாள்.

ஒளியில் மிதந்து நின்றாள் பிச்சைக்காரி. முரண்டு பிடித்து வீரிட்டலறியது இடுப்புக் குழந்தை.

"ஏம்மா, குழந்தையோட அழுகை ஓயறதுக்கு ஒரு வாட்டி பால் கொடுக்கப்படாதா, என்ன?" என்று குரல் தழு தழுக்கக் கேட்டாள் சுசீலா.

பிச்சைக்காரியின் முகம் மாறியது. தலையைத் தாழ்த்தியபடி, தோளில் தொங்கிய பையிலிருந்து பாத்திரத்தை எடுத்தாள்.

"இந்தா, இது உனக்கு, இது உன் பிள்ளைக்கு" என்று சொல்லி, பிச்சையிட்டுவிட்டு, தலையை நிமிர்த்தினாள் சுசீலா, கண்கள் கசிந்தன.

பிச்சைக்காரியின் மகன் அந்தச் சோற்றைக் கண்டதுதான் தாமதம், உடனே பிஞ்சுக் கரங்களால் சாதத்தை அள்ளி அள்ளி வாயில் திணித்துக்கொண்டான்.

சுசீலாவின் மேனி நடுங்கத் தொடங்கியது. விழிகளைத் துடைத்துக் கொண்டு உன்னிப்பாகப் பார்வையைச் செலுத்தினாள். 'ஆ!....ராஜாவா? ஆஹா! ராஜாவேதான்! என் ராஜாவேதான்!...

தெய்வமே!' அவளது அன்னை மனம் ஆனந்தத்தில் தவித்தது. 'அதே கண்கள், அதே உதடுகள்...!' அதோ, இரண்டு பற்கள் கீழ்வரிசையில்!...

அந்தக் குழந்தை சுசீலாவைப் பார்த்துக் கொண்டேயிருந்தது. எப்படிக் கறுத்து மெலிந்துவிட்டது!

கைக்கு ஐந்து வீதம் போட்டிருந்த ஐந்து கொலுசுகள் எங்கே? இடுப்பில் கட்டியிருந்த சலங்கைச் சங்கிலி எங்கே? கடுக்கன்கள் எங்கே? டெர்ரின் ஸ்லாக், நிஜார் எல்லாம் எங்கே?

"தாயே, உனக்குக் கோடிப் புண்ணியம் உண்டு, உன்பிள்ளை குட்டி எழுதிக் கெடக்கும்!" என்று கும்பிட்டு விட்டுக் குழந்தையும் தானுமாகப் புறப்பட்டாள் பிச்சைக்காரி.

தத்தளித்தாள் சுசீலா, "ஏ, பிச்சைகாரி! நில்லு!"

பிச்சைக்காரி நிகைத்து நின்றாள்.

அந்தக் குழந்தை இப்போதும் சுசீலாவை இமைக்காமல் பார்த்த வண்ணம் இருந்தது.

"பிச்சைக்காரி, இப்படி உள்ளே வா. பயப்படாமல் வா!"

"இந்தாப் பாரு, நீ வச்சிருக்கிற இந்தக் குழந்தை உன்னுடையதா?"

"பின்னே?..." அதிகாரமாக எதிர்த்துக் கேட்டாள் பிச்சைக்காரி. கீழே இறங்கத் துடித்துக் கொண்டிருந்த குழந்தையை இறுகப் பற்றிக் கொண்டாள். "இருடா, காளி!" என்று அடக்கினாள்.

"தாயே! காளி ஆணையாய்ச் சொல்லு. இந்தப் பிள்ளை, நீ பெற்ற பிள்ளையா? சொல்லு தாயே, சொல்லு!" விக்கலுக்கும் விம்மலுக்கும் இடையே கை கூப்பிக் கெஞ்சினாள் சுசீலா.

"நான் பெத்த மகன் இல்லீங்க! ஏனுங்க கேட்கறீங்க?" என்று மேனி நடுங்கினாள்.

"அது என் குழந்தை! பத்து மாசம் தவமிருந்து சுமந்து நான் பெற்ற மகன் அவன்!" உணர்ச்சிப் பெருக்குடன் செப்பினாள் சுசீலா. எம்பித் துடித்த மார்பை அழுந்தப் பற்றிக்கொண்டாள். விழிகள் புனலாடின.

"இது உங்க பிள்ளை என்கிறதுக்கு ருசு என்னா? ஆதாரம் என்னா?" என்று ஓங்காரமாகக் கேட்டாள் பிச்சைக்காரி.

"ராஜா! என் தெய்வமே!" என்று அலறினாள் அந்தத் தாய்.

அடுத்த கணம்....!

தாய்ப்பால் பீரிட்டுப் பொங்கிச் சிதறி வழியத் தொடங்கி விட்டது!

மேனி புல்லரிக்க நின்ற சுசீலா, தன் தெய்வ மணிக்கரங்கள் இரண்டையும் குழந்தையை நோக்கி ஏந்தி விரித்தாள்.

தாவி ஓடி வந்த அந்தப் பிள்ளை, சுசீலாவின் மார்பகத்தைச் சரண் அடைந்தது. "அ...ம்...மா! அம்மா!"

"தாயே! உங்க மகன் தான் என் காளி!" என்று தேம்பினாள் பிச்சைக்காரி.

"ஏழெட்டு மாசத்துக்கு முன்னாடி இப்ப இருக்கக் கூடிய இதே கோலத்திலே பிறந்த மேனியாய் இந்தப் பிள்ளையை பட்டுக்கோட்டை நாடியம்மன் சந்நிதியிலே கண்டெடுத்தேன். என் பேச்சு சத்தியமுங்க! குழந்தையைக் கயவாடிக்கிட்டுப் போன எந்தப் பாவியோ, நகை நட்டுகளைக் கழற்றிக்கிட்டு, மனசு இரங்கி இதைக் கொல்லாமல் விட்டுப்புட்டுப் போயிக்க வேணும்!" என்றாள் அவள்.

"ராஜா! தெய்வமே!"

ஆனந்தனே வந்து விட்டான்.

ராஜா திரும்பினான். "ப்...பா! ப்...பா!" என்று செருமினான்.

"ராஜா! எங்க தெய்வமே! இந்தாப் பாரு உன்னை!" என்று தழுதழுக்கக் கூறிய ஆனந்தன், தன் கையிலிருந்த ராஜாவின் புகைப்படத்தைக் குழந்தையிடம் காட்டினான்.

ராஜா கைகொட்டிச் சிரித்தான்.

"தாயே, நான் புறப்படுறேனுங்க!" என்று விம்மினாள் பிச்சைக்காரி.

"தாயே, நீ எங்க கண்ணுக்குப் பிச்சைக்காரியாகவே தோணலே!...இந்தா! " என்று சொல்லி ஐந்து ரூபாய், பத்து ரூபாய் நோட்டுக் கொத்தை நீட்டிக் கெஞ்சினாள் சுசீலா.

பிச்சைக்காரி நடு நடுங்கினாள். "தாயே, இந்தப் பிச்சைக்காரிக்கு இனி வேண்டியது சாண் வயிற்றுக்குப் பிடி சோறு மட்டுந்தான்... அதைத்தான் அள்ளி அள்ளிக் கொடுத்துப்பிட்டீங்களே? பின்னே, எனக்கு எதுக்குங்க தாயே, பணமும் காசும்?... ஒண்ணும் வேண்டாம்! ஆனா, இந்த ஏழைக்கு ஒரேயொரு ஆசைதான் மனசிலே, தவிச்சுக்கிட்டு இருக்குது. இந்தப் படத்தை மட்டும் எனக்குக் கொடுத்துப்பிடுங்க. கோடிப் பொன்னைக் கொட்டிக் கொடுத்ததாட்டம் நினைச்சுக்கிடுவேனுங்க, தாயே!" கும்பிட்ட கைகளில் ஈரம் சொட்டியது.

அதோ, கைகளில் புகைப்படத்துடன், கண்களில் கண்ணீருடன் புறப்பட்டு விட்டாள். அந்தப் பிச்சைக்காரி!

"ராஜா...! எங்க தெய்வமே!...தாயே! வீரமாகாளித்தாயே!..."

ஆஹா!....வீரமாகாளி எவ்வளவு கருணையோடு சிரிக்கிறாள்!

❑

# காஸ்பழ அரிசி ஆத்மா!

"ஆமாங்க, செட்டியாரே! இந்த ஆலமரத்தடிக்கிழவன் சொன்னா சொன்னதுதான்!"

"என்னங்காணும், இப்படி ஒரேயடியாய் விலையை ஒசத்திச் சொல்றீரே?"

"கட்டினாப் பாருங்க; இல்லாட்டி நடையைக் கட்டுங்க, ஐயா!" ... தொண்டையைக் கனைத்துக் கொண்டார் கிழவர். குவியல் குவியலாக இருந்த கத்தரிக்காய் தக்காளிகளை பிள்ளையை வருடுகின்ற பாவனையில் மெல்ல வருடிவிட்டார்.

"தாத்தா, கருகப்பில்லை இருக்குதுங்களாங்காட்டி?" என்று ஒரு சிறுமி கேட்டாள்.

"தாத்தாகிட்டே கிடைக்காத சாமான் சட்டு ஏதாச்சும் உண்டா, ஆத்தா?"

"மெய்தான்."

"எம்புட்டுக்கு வேணும்?"

"மூணு காசுக்குக் குடுப்பீங்களா?"

"ஓ!"

ஐந்து காசைக் கொடுத்த சிறுமி, கருவேப்பிலை கிடைத்த மகிழ்வில், பாக்கிச் சில்லறையைப் பற்றின ஞாபகம் இல்லாது நடந்தாள்.

கிழவர் சுருக்குப் பையிலிருந்து தடவி இரண்டு காசை எடுத்து வைத்துக் கொண்டு தலையை நிமிர்த்தினார். கைகளை முடிந்த மட்டும் ஓசைப்பட தட்டினார். "இந்தாத்தா, ரெண்டு காசு!..." என்று பொக்கை வாயை அகலத் திறந்து, ஓர் அழகான பாசச் சிரிப்பை உதிர்த்தபடி, இரண்டு காசு நாணயத்தை, அந் நாணயத்தின் நாணயம் பங்கப் படாத ரீதியில், உரியவளிடம் நீட்டினார்.

தக்காளிக்காகத் தவம் இயற்றி, ஒற்றைக்காலால் நின்று கொண்டிருந்த செட்டியார் இன்னமும் நகரவில்லை.

அறந்தாங்கி நாகப்பட்டினம் எக்ஸ்பிரஸ் அந்த ஆவணத்தாங்கோட்டைச் சாலையை அசட்டை செய்துவிட முடியுமா, என்ன?

கிழவர், மண்டையில் அடித்த உச்சி வெயிலைச் சட்டை செய்யாமல் இடது காதிடுக்கில் ஒளிந்திருந்த பாதி சுருட்டை வாய் ஊற எடுத்து, ஒரே தீக்குச்சியில் சமர்த்தாகப் பற்ற வைத்துப் புகையை இழுத்தார் புகையின் ரசிப்பில் வெகு சுவாரசியமாக ஈடுபட்டிருந்தார் மனிதர். ஏதோ சத்தம் கேட்டது. ஆடொன்று அவரது சோற்றுப் பானையை 'லாவி' க் கொண்டிருந்தது. "இந்த ஊரு நாட்டிலே பணக்காரங்க வூடு அனந்தமா இருக்கே? அங்கிட்டாலே நாடிப் போவேன். இந்தக் கிழடு கதை ஒனக்குத் தெரியாது போலே. ஊருக்குப் புதுசோ?... நான் வடிக்கிறது ஒரு நாளைக்கு ஒரு கடுத்தம். இந்த லச்சணத்திலே. நீயும் வந்துதான் தீரணும்னு அடம் பிடிச்சா, நில்லு, ஒனக்கும் போடுறேன். அல்லாச் சோத்தையும் நான் தின்னுதான் என்ன கண்டேன்?... நாத்த ஒடம்பு மேலுந்தான் நாறித்தொலையுது!" என்று ஒரு 'பாட்டம்' பேசிவிட்டு, தலையில் சுற்றியிருந்த ஹைதர் காலத்துவாலையை நிமிண்டிச் சொறிந்து கொண்டார். ஈரும் பேனும் மண்டையைத் தாண்டிக் கொண்டு வந்திருக்குமோ? கிழவர் இருந்திருந்தாற் போலத் தனக்குள்ளாக ஒரு சிரிப்புச் சிரித்துக் கொண்டார். ஓர் இமைப்பிலே, அச்சிரிப்பு மறைந்துவிட்டது!

கிழவர்... கிழவர் என்றால் அவருக்கும் பெயரென்று ஒன்று இருக்குமே?

இருக்கும். இருக்கும்! ஆனால், அந்தப் பெயர் யாருக்குத் தெரியும்?

ஆலமரத்தடிக் கிழவர் என்றால், 'சுற்று வட்டை' யில் ஏகப் பிரசித்தம். கறார்ப் பேர்வழி. எழுபத்திரண்டு வருஷம் தன் ஜீவனைக் காபந்து செய்து கொள்ளப் பழகிவிட்ட அசகாய சூரர் அல்லவா அவர்? மிஸ்டர் எமதர்மராஜனுக்கு 'டேக்கா' கொடுக்கப் பழகிவிட்ட படுசமர்த்தராம் கிழவர்! பேசிக்கொண்டார்கள்! அந்த ரகசியமும் அவர் வரை ஒரு மர்மம்தான்!

❋ ❋ ❋ ❋ ❋

சிந்தனை வசப்பட்ட நிலையிலே, காய்கறிக் கடையை மறந்து, அந்த ஆட்டை கண் பாவாமல் பார்த்தவர், கண்மூடிக் கண் திறந்த வேளையில், அந்த ஆடு நல்லதனமாக அங்கிருந்து நகர்ந்து விட்டதைக் கண்டுகொண்டார். அவரது இமைகளில் ஈரம் பனித்தது. 'மனுஷங்க பாஷை தெரிஞ்ச வாயில்லாச் சீவன்...பாவம்! வாயுள்ளதாலே இந்த மனுசங்களுக்கு என்ன பிரமாதமாக் கொட்டுதாம்? ம்... எப்படியும் சாண் வயித்தைக் கழுவி மூடிக்கிடத் தெரியும். அம்புட்டுத்தானே!... ம்... அப்பாலே, கடாசீலே, அல்லாம் பிடி சாம்பலாகப் பூடவேண்டியதுதானே?... சே! என்னா சென்மம்டாப்பா இது! பிறவா வரம் வேணும்னு, அனுபவிச்ச புண்ணியவான் யாரோ பாடினார்!...' சுருட்டு சுட்டுவிட்டது போலும்! உதறினார். சாம்பல் தாள் பறந்தது.

"பெரியவரே! கடைசியா என்ன விலை சொல்லுறீங்க தக்காளிக்கு?" என்று மீண்டும் கேட்டார் செட்டியார்.

"ஒரே விலை! இப்ப தக்காளி வேணுமா? இல்லே... நான் பசியாறப் போவட்டுமுங்களா?"

"வேணும்... வேணும்... ஒரு அரைக் கால் வீசைதாங்க படிக்க கல்லைப் பார்த்துப் போட்டுக்குங்க... ம்... சரி... சரி. இந்தாங்க பணம். இந்தப் படிக்கல்லுங்களை மாத்திக்கிடுங்க. இல்லாட்டி, எவனாச்சும் வந்து புடிச்சுடப்போறான், பெரியவரே!"

"அப்படிங்களா? பிடிச்சிக்கிட்டுப் போனாப் போய்த் தொலையட்டுமே!... இந்தப் பதினைஞ்சு மாசப் பொழைப்புக்கு ஏதாச்சும் ஓய்வு கெடைச்சாக்கூட தேவலாம்தான்!" என்று அழகாகச் சிரிக்கலானார் காய்கறி வியாபாரி.

திரும்பி வந்த ஆட்டுக்கு ஒரு பூவன் பழம் கிடைத்தது.

* * * * *

'லொக்... லொக்...!'

ஆலமரத்தடிக் கிழவர் இருமினால், அதில் சுருதிபேதம் இருப்பது சகஜமேயாயினும், பேதத்தைக் கடக்கத் தெரிந்தவர்களுக்குக் கட்டாயமாக அந்த இருமலின் சுருதியைத் தெரிந்து கொள்ளக்கூடும்.

வியாபாரம் மும்முரமாக நடைபெற்றது.

அந்தி சந்திப் பொழுதல்லவா?

உலை ஏறிவிட்டால், 'வெஞ்ச' னத்துக்கு வழி சொல்ல வேண்டாமா?

வழிசொல்லிக் கொண்டிருந்தவர் கிழவர், வேர்வை வழிந்தது. இருந்தும், கந்தல் துவாலையை எடுத்து உதறக் கூட நினைவின்றி, அதை எண் சாண் உடம்பைச் சுற்றிப்போர்த்திக் கொண்டார். அட்டணைக் காலிட்டுக் குந்தியிருந்தவரை பைசாச் சுருட்டு தேடி வந்தது.

"தாத்தா..."

"வாப்பா, பேராண்டி!"

"மேனி ஒரே முட்டா நடுங்குதே? காயலாவா?"

"என்னமோ, அப்பிடித்தான். படுது!"

"அப்படின்னா, எல்லாத்தையும் தூக்கி ஓங்க எதாஸ்தானத்திலே போட்டுப்பிட்டு, பூந்து படுக்கறது தானே?... இவ்வளவு வயசானப்பறமும் இப்பிடிக் கஷ்டப்பட்டு யாருக்குச் சேர்த்து வைக்கப் போறீங்க? இப்பத்தான் ஓங்க கையிலே ரொம்பச் சேர்ந்திருக்கிறதா ஒரு பேச்சு சதா அடிபட்டுக்கிட்டு இருக்குதே, இந்தச் சாலை நெடுக!"

கிழவர் தனக்கே உரிய மர்மத்துடன் 'கடகட' வென்று சிரித்துக் கொட்டினார். அள்ளத்தான் ஆள் இல்லை, பாவம்!

சிரிப்போடே சொல்கிறார் : "பேராண்டிக்கில்லே சொல்லுறேன். நான் நித்தம் உழைக்காட்டி, என்னோட சாண் வயித்தை வஞ்சனை செஞ்சிடுறதாய்த்தானே அருத்தம்? ஊர்னா, யாரும், யாரைப் பத்தியும் எப்பவும் எதுவும் பேசிக்கிடுவாங்க. இது சகஜம்தான்! பணம் காசுன்னாக்க, யாருக்குத்தான் ஆசை வராது? நானும் கேவலம் ஒரு மனுசப் படைப்புத்தானே?"

"தாத்தா பேச்சு எப்பவுமே மூடு மந்திரம் கணக்குத்தான்!"

இப்போதும் வாடிக்கையான ஒரு சிரிப்புத்தான் வெளிப்பட்டது.

செவ்வாய்ச் சந்தைக்கு வைக்கோல் வண்டிகள் சரம் தொடுத்துச் செல்ல ஆரம்பித்து விட்டன.

பேராண்டி என்ற புதிய சொந்தத்துக்குப் புதிய பாத்தியத்தை பூண்ட அவ்விளைஞன் தன்னுடைய தாத்தாவுக்கென்று ஒரு சாயா வாங்கி வந்து கொடுத்தான்.

கிழவர் அதை மறுக்க மாட்டார். ஒரு முறை காசு கொடுக்ப் போக, அவன் பிரமாதமாக் கோபித்துக்கொண்டு விட்டான். "போறப்ப யாரும் எதையும் தூக்கிட்டா போகப் போறோம்? நம்பளைத் தூக்கத்தானே நாலு பேருக்கு வேலை வைப்போம்?" என்று வேதாந்தம் படித்தான். அந்தப் பேச்சின் விதரணை, வயசை மீறயதொரு வாக்காகவே பட்டிருக்கவேண்டும்... வயோதிகருக்கு. அதிலிருந்து, அந்தப் பிள்ளையென்றால் அவருக்கு ஒரு பிரியம். "நீங்க எந்த ஊரு? ஒங்க பேர் என்ன? ஒங்க கதை என்ன? இத்தனை வயசுக்கப்புறம் ஏன் இப்படிக் கஷ்ட ஜீவனம் நடத்த வேணும்? உங்களுக்கு பிள்ளைகுட்டி இல்லியா?" என்றெல்லாம் துளைத்தான்.

"நான் அநாதை.... அதிலேயும் நாதியத்த ஒரு புறம்போக்கு. இதுக்குப் பெரிசா என்ன கதை வேண்டிக்கிடக்கு, காரணம் வேண்டிக் கிடக்கு?....மூச்சு ஓடுற மாட்டுக்கும் ஓடித் தொலையட்டுமே! மூச்சு நின்னுட்டாக்க, நல்ல மனுசங்கன்னு ஈவு இரக்கம் கொண்ட தலைங்க நாலா இந்த நாட்டிலே அத்துப் போயிடும்? அவங்க இந்தச் சனியனைத் தூக்கி எறிஞ்சிட்டுப் போகட்டுமே?" என்று அடைத்துவிடுவார். உடனே "தாயே பராபரி... அங்களாம்மை!" ... என்று ஓர் ஆறுதல் கொள்ளத் தவறுவதில்லை.

சாலையிலே ஓர் அப்பனும் மகனும் சண்டை போட்டுக் கொண்டார்கள்.

கிழவர் ஆத்திரத்தோடு எழுந்தார். "ஏம்ப்பா தம்பி, பெத்த அப்பனையா எதிர்த்துப் பேசி, கைநீட்டப் போறே? போப்பா, விலகி!" என்று தந்தையையும் மகனையும் விலக்கி விட்டார். "காலம் மாறிப் போச்சு... நீங்க நடங்க, சேர்வை!" என்று சமாதானம் செய்தார். சுருக்கம் படிந்து கிடந்த அவர் முகத்தில் வேதனையும் விரக்தியும் நிழலாடின.

* * * * *

ஜன நடமாட்டம் கம்மிபடத் தொடங்கியது.

இந்தாருங்காணும், இதுகளை எடுத்துக்கும்... நாளைக்கு இருந்தா, தூக்கி எறியத்தான் வேணும்!" என்று சொல்லி குணம் கணித்து, குற்றம் கண்டு ஒதுக்கிவிடத் துணிந்த காய்கறிகள் சிலவற்றை, பூவத்துக்குடி தேவருக்கு மனமுவந்து யாசகமாக நீட்டினார் அவர். கூழைக் கும்பிடு ஒன்று நியாயமான உண்மை போலக்கிடைத்தது.

ஆதாயம் என்றால், ஆதாயம் தானே?

பாவம், இவரா கருமி?....

என்ன உலகம்?

※ ※ ※ ※

"ஆலமரத்தடிக் கிழவர் போயிட்டாருங்க!"

"ஆங்...!"

கும்பல், வித்தைக்காரனைச் சுற்றிக் கூடுவது மாதிரி சிறுகச் சிறுகக் கூடத் தலைப்பட்டது.

அதோ, வித்தைக்காரன்! என்ன உறக்கம்... என்ன உறக்கம்!

"ராத்தரி நல்லாயிருந்தாரே, முத்துமலை அம்பலம்?"

"நல்லாத்தான் இருந்தார். போன கிழமையாச்சும் லேசா காயலா இருந்தாரு. நேத்தைக்கு ராவு யாதொண்ணும் இல்லே. வரக் காப்பி குடுத்தான் பேராண்டி. அப்பாலே, வளமைப்படி சாமான் சட்டுகளை உள்ளாற தூக்கியாந்து சரி பார்த்து வச்சிட்டு, சுருக்குப் பையை எண்ணிக் காட்டி எங்கிட்டே ஒப்படைச்சிட்டு, இந்த வெளித் திண்ணையிலேதான் படுத்தாரு. கோழி கூப்பிட, வேம்பாவைச் சூடு பண்ண ஏந்திருச்சேன். அவரு காலை மிதிச்சுப்பிட்டேன். திரும்பிப் பார்த்தேன். ஆளுமுண்டலை, முடங்கலை. சம்சயம் தட்டிச்சு. லாந்தரைப் புடிச்சு மூஞ்சியைப் பார்த்தேன். வெறும் கட்டைதான் மிச்சம்..." முத்துமலைக் கிழவர் கண்ணீரை வழித்துவிட்டார்.

"ஆமா, இங்கிட்டு வந்து வெகு தொலைக்குச் சொத்து சேர்த்து வச்சாராமே? அது சங்கதி ஓமக்குத் தீரத் தெரியணுமே?" என்றார் தேவர் சன்னாசித்தேவர்.

"அந்தச் சங்கதியை அந்தக் கிழவரைக் கேட்டால் தான் தெரியுமுங்க..." குரல் நெகிழ்ந்து ஒலித்தது.

"அதெல்லாம் சொல்லித் தெரியிறதாக்கலா? என்ன இருந்தாலும், முத்துமலை அம்பலம் யோகக்காரப் புள்ளிதான்..."

"ஆமா.... ஆமா... விரிச்சுப்படுக்கறதுக்கு நிழல் குடுத்தாரில்லே?"

"வெட்டிப் பேச்சு ஏதுக்கு? ... பொணத்தைத் தூக்கறதுக்கு வழி பண்ணுங்க. ஆளுங்க நாலு பேரைப் பிடிங்க, அம்பலம்..." என்றார் மணி.

"அல்லாரும் சித்தே பொறுத்திடுங்க உண்மைங்கிறது. தெய்வத்துக்குச் சமட்டி நாமள்ளாம் காளிக்கு அடிமைப் பட்டவங்க. இதை நானும் மறந்திடலே; நீங்களும் மறந்திடாதீங்க; அந்த சன்னாசித் தேவர் ஒரு தாக்கலைத் தூக்கிப் போட்டாரு, ஊர் முழுவதும் அப்படிகட்ட நினைச்சிருக்கும். இந்தாப் பாருங்க, இந்தச் சுருக்குப் பை. இதுதான் ராவு அந்தக் கிழவர் கடோசியாத் துடுத்து வச்சுது பத்தணாவுக்கு மூணு காசு கெ.,றைச்சல் அம்புட்டுத்தான் பணம் உள்ளாற கூடையிலே இருக்கற காய்கறிங்க மிச்சம். மத்தப்படி... மத்தப்படி அவரோட காசு எங்கிட்டே இன்னிய தேதி வரைக்கும் ஒரு தம்பிடி சேர்த்ததில்லை. அவரு கணக்கு வழக்கெல்லாம் இந்த நோட்டிலேதான்... அதை வேணும்னாலும் பார்த்துடுங்க" என்று ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்துப் போட்டார் அம்பலம்.

அப்போது அந்தக கணக்கு நோட்டிலிருந்து மக்கிப் போனதொரு பழைய செய்தித்தாள் சிதறி விழுந்தது.

மணி, சிதறி விழுந்த அந்தப் பத்திரிகையை எடுத்தார். பிசிறுகள் உதிரலாயின.

எடுத்த எடுப்பில் ஓர் அதிசயம் வெளிப்பட்டது.

மணி, வாய்விட்டு வாசிக்கலானார்.

"காணவில்லை"

இந்தப் படத்திலுள்ள என் தந்தை தேவிபட்டினம் உயர்திரு மு. காசிநாதக் கங்காணி, என் பேரில் கொண்ட சிறு மனஸ்தாபம் காரணமாக, தம்முடைய சொத்து சுகத்தையெல்லாம் துறந்து. கடந்த இருபத்தேழு மாதமாக எங்கோ கண் காணாத இடத்தில் தலைமறைவாக வைராக்கியத்தோடு இருந்து வருகிறார். ஆட்டுக்குட்டி வளர்க்க வேண்டாமென்று நான் சொன்னேன். அவர் கேட்கவில்லை.

ஆத்திரத்தில் புத்தியில்லாமல், திட்டிவிட்டேன்! ரோஷக்காரர் அவர்! யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல், வீசின கையும் வெறுங் கையுமாக இரவோடு இரவாக வெளியேறிவிட்டார், என் தெய்வம்! இது வரை தேடாத இடம் இல்லை. போடாத விளம்பரம் கிடையாது. நாங்கள் குடும்பத்தில் பயித்தியம் பிடிக்கும் நிலையில் இருந்து வருகிறோம்!... ஆகவே, இந்தப் புகைப்படத்திலுள்ள பெரியவரை இனம் காணும் புண்ணியவான் யாராகயிருந்தாலும், உடனே ரகசியமாக கீழுள்ள என் விலாசத்துக்குத் தந்தி கொடுத்து உதவும்படி ரொம்பவும் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன். கோடிப் புண்ணியம் கிடைக்கும்!... அவர்களுக்கு வேண்டும் பணத்தை அள்ளிக் கொடுப்பேன். அங்காளம்மை பேரில் ஆணை இது!..."

கத்தரிக் காட்டுக் கிழவர் உணர்ச்சி வசப்பட்டுச் செருமலானார்: "மனுசர் விதியோடே எப்படி எப்படியெல்லாம் விளையாடிப் பார்த்திருக்கார்?... அட கடவுளே!"

மணி முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

"மணி! இந்தாங்க, பத்து ரூபாய்த்தாள் இருக்கு. சைக்கிள் ஒண்ணு எடுத்துக்கிட்டு அறந்தாங்கிக்குப்போயி, அந்தப் பத்திரிகையிலே கண்டிருக்கிற விலாசத்துக்கு ஒரு 'எம்ம சன்டு' தந்தி பேசிட்டு வாங்க. நம்ப கிழவனாரய்யாவோட மகனை உடனே புறப்பட்டு வரும்படி மட்டும் பேசுங்க...போதும்! பாவம்!" முத்துமலையின் சாயத் துண்டு ஈரத்தால் கனத்தது!

ஆலமரத்தடிக் கிழவர் எத்துணை மகத்தான ரோஷத்தோடு உறங்கிக் கொண்டேயிருக்கின்றார்!...

உறங்கட்டும்! உறங்கட்டும்!...

எழுப்பிவிடாதீர்கள்....!

□

# பிள்ளைக் கனியமுதே

'பிள்ளைக் கனியமுதே - கண்ணம்மா
பேசும் பொற்சித்திரமே!
அள்ளி யணைத்திடவே - என்முன்னே
ஆடிவருந் தேனே!'

ரேடியோவினின்றும் எழுந்து காற்றில் மிதந்துவந்த இனிய கானம் டாக்டர் சுந்தரத்தின் மனத்தில் இன்பவலை பின்னியது.

"கண்ணம்மா ஆம்; பேசும் பொற்சித்திரமேதான்! அன்று அமரகவியின் கனவில் தோன்றி மனத்தைப் பித்தாக்கினாள் அந்தக் கண்ணம்மா. ஆனால் தற்சமயம் இழந்த இன்பத்திற்கு நிரவல் கொடுத்து வாழ்விலே அமுத கீதத்தைப் பொழிகின்றாள் இந்தக் கண்ணம்மா."

டாக்டரின் மனம் குதூகலத்தில் ஆழ்ந்திருந்தது. அவர் பார்வை எதிரே சென்றது. "கண்ணம்மா" என்று அழைத்துக்கொண்டே எழுந்து நின்றார். தந்தையின் மனநிலையை அறிந்துகொண்டது போலக் கண்ணம்மா தன் சின்னஞ்சிறு வாயைத் திறந்து நயனங்களை உருட்டி விழித்தாள். அத்தருணம் டாக்டரின் தங்கை லலிதா குழந்தைக்கு அன்னம் பிசைந்து ஊட்டிக்கொண்டிருந்தாள்.

"அண்ணா, கண்ணம்மா வரவர அதிக சேட்டைபண்ண ஆரம்பிக்கிறாள். இந்த மாதிரி சிரித்துக்கொண்டு விளையாடும் சமயம் பார்த்துச் சாதம் ஊட்டினால்தான் கொஞ்சமேனும் சாப்பிடுகிறாள். மற்ற சமயங்களில் ஒரு பிடி அன்னம் கூடச் சாப்பிடமாட்டேன் என்கிறாள். தப்பித் தவறி அண்ணியின் போட்டோப் படத்தண்டை எடுத்துச் சென்றுவிட்டால் படத்தைப் பார்த்து விரலைக் காட்டி 'அம்மா' எனக் கதற ஆரம்பிக்கிறாள்!"

"பாவம், தாயில்லாக் குழந்தை. இந்த ஒரு வருஷம் பட்டதெல்லாம் கஷ்டமில்லை. ஆனால் இனித்தான் நமக்கெல்லாம் சிரமம் காத்திருக்கிறது. இனிமேல்தான் தவழும் பருவம்; அப்போது

பேணிக் காப்பதுதான் ரொம்பவும் சங்கடம். நீயும்கூட இன்னும் சில நாளில் சென்னை போய்விடுவாய். என்னமோ ஈசன் விட்டவழி."

இவ்விதம் பேசிக்கொண்டிருந்த டாக்டர், தன் தங்கை லலிதாவின் முகத்தை நோக்கினார். அவர் முகத்தில் சஞ்சல ரேகைகள் தடம் பதிந்திருப்பதைக் கண்டதும் அவர் கண்கள் கலங்கின.

"லலிதா, குழந்தை தூங்கி விழுகிறது. கொண்டு போய்ப் படுக்க வை" என்று சொல்லித் திரும்பவும் தன் அறைக்குச் சென்றார் சுந்தரம். அவரது கண்ணோட்டம் மேஜைமீது ஸ்டாண்டில் வைத்திருந்த புகைப்படத்தின் மீது லயித்தது. காஞ்சனா உயிருடனிருந்தபொழுது எடுத்த போட்டோ அது. அவளுடைய மென்மலர் வதனத்தில் அன்புக்குழி மிளிரப் புன்முறுவல் பூத்தவண்ணம் சல்லாப மொழி பல பேசித் தன்னை ஊக்குவித்து வருவது போன்ற ஒரு பிரமை தட்டியது அவருக்கு.

டாக்டரின் மனம் கடந்ததை நினைத்து வருந்த, எண்ணங்கள் அலையலையாய் மிதந்து கண்வழியே நீர்முத்துக்களைச் சிதறின.

* * * * *

கல்யாணத்திற்குப் பெண் பார்க்கச் செல்லும் படலத்தின் முதல் அத்தியாய ஆரம்ப தினம்!

காஞ்சனாவின் வீட்டில் மலர் மணம் எங்கும் பரவியிருந்தது. குழல் ஊதி லீலைகள் செய்த மாயக்கண்ணனின் படம் ஒருபுறம்; மற்றொரு பக்கம் கால்மாறி நடம்புரிந்த நடராஜமூர்த்தியின் திருவுருவம்! இரண்டிற்கும் நடுவில் அஹிம்சையின் திருஉரு தியாகத்தின் சின்னம் அமரவாழ்வெய்திய அண்ணல் காந்தி மகாத்மாகவின் மோகன பிம்பம் தீபஒளியாகப் பரிணமித்தது.

அறையின் மத்தியில் வீற்றிருந்த சுந்தரத்தின் கவனம் நாற்புறமும் சுழன்றோடி நிலைத்தது.

சகலகலாவல்லி போலக் காட்சியளித்தாள் காஞ்சனா, கையில் வீணையுடன், வீணையின் நரம்புகளை மெதுவாக மீட்டி ஜீவநாதத்தைத் தட்டி எழுப்பினாள். அவளது வீணாகானத்தில் லயித்த அவர், அவளை நிமிர்ந்து நோக்கின சமயம், ஒருகணம் அவர் மனம் சஞ்சலித்துவிட்டது.

நாணிக் கண்புதைத்த வண்ணம் எழுந்து சென்றாள் பூத்துக் குலுங்கும் கொடி போன்ற அக்கட்டழகி. ஒய்யாரமான அவள் உருவத்தின் ஒவ்வொரு அங்க அமைப்பிலும் இளமை கொந்தளித்தது.

அவளது முகச் சாயலிலே ஒருவிதக் கவர்ச்சி; அந்த வசீகரத்தில் ஒரு குளுமை! பிடியிலடங்கும் இடை : கொடி மாதிரித் துவளும் மெல்லுடல். மெல்லிய கீற்றுப் போன்ற இதழ்களிலே முறுவல் ஊறும்போதெல்லாம் குழி விழும் ரோஜா நிறக் கன்னங்கள். நீண்ட புருவத்தின் கீழ இருட்கனலெனத் திகழும் விழிகள்!

அந்த அழகியின் வனப்பில் சுந்தரம் மயங்கியதில் ஆச்சரியமென்ன?

முகூர்த்தம் நிச்சயமாகித் திருமணமும் நடந்தேறியது.

சாயந்தரம் ஆனவுடன் 'காஞ்சனா' என்று தேன்குரலில் அழைத்துக்கொண்டே உள்ளே நுழையும் சமயம் அவளும் தன் பதியின் வரவை எதிர்பார்த்து நின்று கொண்டிருப்பாள். வசந்தத்தின் வரவை எதிர்கொண்டழைக்கும் வானம்பாடியைப் போல. சுந்தரத்தின் இதயம் அப்படியே ஆனந்தப் பூரிப்பிலே ஒருமுறை சிலிர்த்து அடங்கிவிடும். இம்மாதிரி இனிய சந்தர்ப்பங்கள் எத்தனை எத்தனையோ!

அன்று பிரசவ நாள். சுயஉணர்வு தப்பிவிட்டது காஞ்சனாவிற்கு. பிரவசம் சுகமாகத்தான் ஏற்பட்டது. ஆனால் டாக்டரை ஏமாற்றிவிட்டுப் போய்விட்டாள் அந்தக் காஞ்சனா!

தன் வாழ்வு அஸ்தமித்துவிட்டதென எண்ணிப் பொருமினார். ஆனால் அவ்விதம் நினைவு வரும் சமயமெல்லாம் அவருக்கு ஆறுதல் அளித்து வந்தது அவரது கண்ணம்மாதான்!

டாக்டர் சுந்தரத்திற்கு வேண்டிய உற்றார் உறவினர்கள். அவரை 'இரண்டாம் கல்யாணம்' செய்து கொள்ளும்படி மன்றாடிக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் அவர்களது வார்த்தைகளுக்கெல்லாம் சிறிதும் மசியவில்லை டாக்டர். அதே சமயம், பச்சைக் குழந்தையின் பராமரிப்பிற்குப் பெண் உதவி மிகவும் அத்தியாவசியம் என்பதைத் தீர உணராமலுமில்லை.

"காஞ்சனா போல இனிமேல் இந்த ஜன்மத்திலா ஒரு மனைவி எனக்கு வாய்க்கப் போகிறாள்?" இந்த ஒரு கேள்வியைத்தான் தன்னை நாடி வரும் பந்துக்களிடம் பிரயோகித்து வந்தார். காஞ்சனாவுடன் கழிந்து போன இன்பமயமான அந்நாட்களைத் திரும்பவும் எண்ணிப் பார்க்கும்போதெல்லாம் மறுமணத்தைப் பற்றிய நினைவே அவரது மனதில் தலைகாட்டாமலிருந்தது"

இப்படியே நாட்கள் நகர்ந்தன.

அன்று நடுநிசி. குழந்தையைப் படுக்க வைத்துவிட்டுச் சிறிதுநேரம் புத்தகம் படிப்பதில் முனைந்திருந்தார் சுந்தரம்.

"டாக்டர் ஐயா!"

அந்த அறிமுகமற்ற குரலில் வருத்தத்தின் சாயல் தெரிந்தது.

வெளியே சென்று பார்த்தார். பெரியவர் ஒருவர் படபடக்க ஓடிவந்த களைப்புடன் செய்தியைச் சொன்னார்.

டாக்டர் சுந்தரம் உடனே ஆஸ்பத்திரிக்குக் கிளம்பினார். ஓர் பெண் கட்டிலில் உணர்வு தப்பிப் படுத்திருந்தாள். 'ஸ்டெத்தாஸ்கோப்' கொண்டு பரிசோதிக்கக் குனிந்தார். அப்படியே ஸ்தம்பித்துப் போய்விட்டார் டாக்டர். ஏனென்றால் அந்தப் பெண், காஞ்சனாவை அப்படியே உருக்கிவைத்தாற்போலக் காணப்பட்டாள்!

அவ்வுருவத்தைக் கண்டதுமுதல் அர்த்தமற்ற ஒருவித அனுதாபம், வாத்சல்யம் ஏனோ அவரையும் அறியாமல் கிளர்ந்தெழுந்தன!

நான்கு நாள் கழித்து அந்த யுவதி ஆஸ்பத்திரியிலிருந்து 'டிஸ்சார்ஜ்' செய்யப்பட்ட சமயம் கண்கள் கலங்க அவளை வழியனுப்பி வைத்தார் அவர்.

❊ ❊ ❊ ❊ ❊

"லலிதா, என்னை உடனே புறப்பட்டு வரும்படி அத்தை இன்று தந்தி கொடுத்திருக்கிறார். கண்ணம்மாவை மிகவும் ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொள்" என்று தன் சகோதரியிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டார் டாக்டர் சுந்தரம்.

அத்தை வீட்டையடைந்ததும் வரவேற்பு உபசாரம் பலமாக நடந்து முடிந்தது.

"அத்தை, ஒன்றும் விசேஷம் கிடையாதே. தந்தியைக் கண்டதும் என்னவோ ஏதோ என்று பயந்துபோய் விட்டேன்."

"சுந்தரம், தந்தி கொடுத்திராவிட்டால் இவ்வளவு எளிதில் உன்னை இங்கே வரவழைத்திருக்க முடியுமா? காஞ்சனா, இறந்ததற்கப்புறந்தான் நீ இங்கு வரவில்லையே. எத்தனை

நாளைக்குத்தான் இப்படிக் கல்யாணம் பண்ணிக்கொள்ளாமல் இருக்கப் போவதாக உத்தேசம், கையில் ஒரு பச்சைக்குழந்தையை வைத்துக்கொண்டு? பெரிய பிள்ளைக்கு அதிகமாக நான் எதைச் சொல்ல இருக்கிறது?"

"அத்தை, நான் என்ன யோசிக்க இருக்கிறது? காஞ்சனா மாதிரி இனிமேல் இந்தப் பிறவியிலா எனக்கு ஒரு பெண் மனைவியாக வாய்க்கப்போகிறாள்? ஊஹூம். ஒருக்காலும் இருக்காது. ஏதோ விட்டகுறை, தொட்டகுறை என்பார்களே, அந்த மாதிரிதான் எங்கள் திருமணம் முன்னர் நடந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால்..."

டாக்டரின் பேச்சிற்குச் சோகம் சுருதி கூட்டிற்று.

"சுந்தரம், தேரடித்தெரு சோமுபிள்ளையின் சொந்தக்காரப் பெண்ணாம், பர்மாவிலிருந்து வந்திருக்கிறாள். முதன் முதலில் அவளைக் கண்டதும் அப்படியே திகைத்துவிட்டேன். அப்படியே உன் பெண்டாட்டி போல ஒரே அச்சு. நல்ல பதவிசு. நீ 'ஊம்' என்றால் போதும். காரியம் முடிந்த மாதிரிதான். மேலும், கைக்குழந்தைக்கு நல்ல ஆதரவாயிற்று. அதன் நன்மையை உத்தேசித்தாகிலும் சம்மதம் கொடு, அப்பா"

இவ்விதம் முகாந்தரங்கள் பலவற்றை எடுத்துக்காட்டி, அதற்கு அத்தாட்சிபோல அப்பெண் போட்டோவையும் அவரிடம் நீட்டினாள்.

படத்தைப் பார்த்ததும் அப்படியே நின்றுவிட்டார் டாக்டர். ஏனென்றால். அதே பெண்தான் சில தினங்களுக்கு முன்பு அவரிடம் வைத்தியம் செய்து கொண்டயுவதி. தன்னையும் அறியாமல் அந்தப் பெண்மீது உண்டான அன்பின் காரணம் இப்பொழுதுான் அவருக்குப் புலப்பட்டது.

"அத்தை, இரண்டாம் தாரமாகக் கல்யாணம் செய்து கொள்ள இஷ்டமா என்று கேட்டீர்களா பெண்ணிடம்?"

"எல்லாம் கேட்டாய்விட்டது. இதன்மூலம் ஏழைக்குடும்பத் திற்கும் ரொம்பவும் ஒத்தாசை செய்ததுபோல் இருக்கும்"

"புதியவள் வந்துவிட்டால் அப்புறம் கண்ணம்மாவை நன்றாகப் பேணி வளர்ப்பாள்" ... இந்த ஒரே ஆசையுடன் மனத்தைச் சாந்தியுறச் செய்துகொண்டு அவர் தன் அத்தையிடம் விடைபெற்று வீடு வந்தடைந்ததும், அவரது நெஞ்சம் பிளந்துவிடும் போலாய்விட்டது.

எங்கும் ஒரே அந்தகாரம்; மோன அமைதி! திடீரென்று அலறல் சத்தம் கேட்கத் திரும்பினார் டாக்டர்.

"அண்ணா, கண்ணம்மா போய்விட்டாள் அண்ணா, இன்று காலையில் குளித்துவிட்டுத் திரும்பும் சமயம் குழந்தை தண்ணீர்த் தொட்டியில் தவறிவிழுந்து இறந்து கிடந்தது, அண்ணா" என்று நினைவிழந்து, நெஞ்சம் விம்மத் தேம்பித் தேம்பி அழுதாள் லலிதா.

தன் குழந்தையை நீர் மல்கும் கண்களுடன் ஏறிட்டு நோக்கினார். கண்ணம்மா ஆனந்தப்பள்ளி கொண்டிருந்தாள். டாக்டர் அழுதார்! புரண்டார். பைத்தியம் பிடித்து விடாதது ஒன்றுதான் பாக்கி. தன் அருமைக் கண்மணிக்காக வாங்கிவந்த பிஸ்கட்டுகள், விளையாட்டுச் சாமான்கள் இவையனைத்தும் சிதறிக்கிடந்தன. அவரது மனம்போல.

என்னதான் வாழ்க்கை வேண்டிக் கிடக்கின்றது? அவரது வாழ்விலே சாந்தி, இன்பம் என்பனவெல்லாம் தாமரை இலையின் ஒளிரும் நீர்த்திவலைகள் தாமா? ஆமாம்; மனிதன் வகுக்கும் திட்டங்களை கட்டும் மனமாளிகைகளைத் தகர்த்தெறியத்தான் 'விதி' குறுக்கிட்டு விடுகிறேதே! விதி! நல்ல விதி!

அதே தினம் டாக்டரிடமிருந்து அவர் அத்தைக்கு 'ரிஜிஸ்தர்' தபால் ஒன்று பறந்து சென்றது.

'அத்தை'

இத்தனை காலம் எந்த ஒரே லட்சத்திற்காக எனது உயிர் காஞ்சனா இறந்ததையும் பொருட்படுத்தாமல் என் உடலில் தங்கியிருந்ததோ, எந்த ஒரே குறிக்கோளைக் காப்பாற்ற உங்களது பிடிவாதத்தின் துணைகொண்டு மறுமணம் புரிந்து கொள்ளச் சம்மதித்தேனோ அந்த லட்சியம் சிதைந்துவிட்டது! என் கண்மணி கண்ணம்மா இன்று இறந்துவிட்டாள்! என் கண்ணைச் சீராட்டிப் பேணிப் போஷிக்கத்தானே மறுகல்யாணம் செய்துகொள்ள இருந்தேன். இனி எதற்கு இந்தக் 'கட்டை' க்குக் கல்யாணம்?

பெண் வீட்டில் விஷயத்தைத் தெரியப்படுத்துங்கள். பாவம், ரொம்பவும் ஏழைக்குடும்பம். பெண் தங்கமான குணம். சேற்றில் முளைத்த செந்தாமரை! இத்துடன் அனுப்பியிருக்கும் ரூ. 500 செக்கை மாற்றி, நல்ல மாப்பிள்ளையாகத் தேடித் தாங்களே நேரில் இருந்து அப்பெண்ணுக்குக் கல்யாணத்திற்கு ஆயத்தம் செய்யுங்கள்! இதுவேதான் என் கடைசி வேண்டுகோள்! ❑

# செந்தட்டீ மம்மே பாரே!

மூன்று முடிச்சுக்கள் விழுந்தன. வத்சலைக்கு ஏற்பட்ட மகிழ்வு இவ்வளவு அவ்வளவு அல்ல. எல்லாமே கனாப்போலவே தெரிந்தது. மங்கல நாண் அவளது விழி விரிப்பில் இழைந்தது. தனக்குத் தாலிபாக்கியம் அருளிய அலகிலா விளையாட்டுடையவனை நன்றி நெஞ்சுடன் தொழுதாள். மேனி புல்லரித்தது. நாதசுர முழக்கம் அவளுக்கு உணர்வையும் சுயநினைவையும் கொடுத்தது. தலையை உயர்த்த எத்தனம் செய்தாள். விழிகள் நாணம் பூண்டன. மூன்று முடிச்சுக்களை அருளிய சொக்கலிங்கத்தின் கடைவிழி நோக்கைச் சந்திக்க முடியாமல் திக்குமுக்காடினாள்.

மணப்பந்தல் மளமளப்பு மிஞ்சியது. 'வாங்க, வாங்க!' என்ற வரவேற்பு மொழிகளும், "தம்பி அவங்க எல்லோரையும் உட்காரவை, பர்மா பாயை விரிச்சுப்போடு, ம். ரங்கூன் ஜமுக்காளத்தையும் உதறி விரியப்பா... இந்தா பார், மரவைத் தட்டிலே வெற்றிலை பாக்கை நிரப்பிக் கொண்டு வா!" என்ற உபசாரக் குறிப்புகளும் மாப்பிள்ளையின் இதழ்க் கரையினின்றும் ஒதுங்கி ஒலித்த வண்ணம் இருந்தன.

"சரி, நேரமாயிற்று. கல்யாணபரிசு, வாழ்த்து எல்லாம் வந்து குவிந்து கிடக்கிறதே. எல்லாவற்றையும் பிரித்துக் கொடுத்துவிடலாமே!... அப்புறம், பந்திவைக்க ஆரம்பித்து விட்டால், ஒரு சோலியைச் சமாளிக்கவே நேரமும் பொழுதும் காணாது!" என்றார் பெரியவர் ஒருவர். கழுத்தில் இருப்பிடம் அமைத்திருந்த 'ருத்திராட்சக் கெவுடு' அவரது விரல்களின் ஆணைக்கேற்ப அசைந்தது.

"ம், அய்யா சொல்றதும் சரியான யோசனைதான்!" சந்தனப் பேலாவை இடம் மாற்றிக்கொண்டிருந்த 'உக்கிராணப் பொறுப்பாளர்' ஆமோதித்தார்.

பத்தில் காவணத்தின் மையத்தில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த பரிசில்களையும், கடிதங்களையும், வாழ்த்துப் பத்திரங்களையும்

எடுபிடிகள் கைக்குக் கொஞ்சமாக அள்ளி எடுத்து, மணமகனுக்கு அருகில் வைத்தார்கள். மாப்பிள்ளை சொக்கலிங்கம் இளம் சிரிப்புத் தவழ, அவற்றைப் பார்க்கலானான். ஆர்வம் மிகுந்த பார்வை துள்ளிக் குதித்துத் தவழ்ந்தது; பட்டுச் சொக்காயின் இடது கைப்பகுதியைச் சுருட்டி மடக்கிவிட்டவாறு பரிசுப் பொருள்களை விரல் அமைத்து விலக்கிப் பார்த்தான். இதயத்தின் படபடப்பை நேத்திரங்களுக்கு மாற்றம் செய்து கொடுக்க ஒப்பாதவன் போன்று கடிதங்களின்மீது கண்ணோட்டம் செலுத்தினான். ஓர் அரைக்கணம் அவனது இதயம் அதிர்ந்தது. மார்பில் இழைந்திருந்த மகரகண்டி மாலை அவனுடைய நெஞ்சையே அமுக்கி அழுத்திவிடுவதைப் போன்று உணர்ந்தான். சிதைந்த ஆசை கண்ணீரின் அவதாரம் பூண்டது. மணமகன் அழலாமா? கூடாது. தன்னைச் சமாளித்துக்கொண்டான் அவன்.

அப்போது, வாழ்த்துப் பத்திரங்களை 'மைக்' கின் முன்னே வைத்துப் படித்துக்கொண்டிருந்தார் ஓர் இளைஞர்.

'நங்கை வத்சலை! அபிமன்யு கிடைத்தாற்போன்று உனக்குச் சொக்கலிங்கம் கிடைத்திருக்கிறார். நீ கொடுத்து வைத்தவள், உங்கள் தாம்பத்தியம் சகல சௌபாக்கியங்களுடன் பொலிவுபெற வாழ்த்துகிறேன்; பிரார்த்திக்கின்றேன்.'

வாழ்த்துமடல் வரிகளில் மிதந்தாள் வத்சலை. 'ஆம், நான் கொடுத்து வைத்தவள்தான். சாமிக்கு நான் எடுத்துப் போட்ட பூ நல்ல பூவேதான்!' கண்கள் கசிந்தன. அந்தக் கசிவில்தான், நடந்த கதை 'திருப்பம்' கண்டது.

புதுப்பட்டியில் மு.ஆ. வீடு என்றால் பசையான குடும்பம் என்று பேர். அந்த வீட்டின் தலைச்சன்தான் சொக்கலிங்கம். அவனுக்கு முறைப்பெண்தான் வத்சலை. அழகை ஒரு தட்டிலும், அவளை மறுதட்டிலும் வைத்து நிறுத்தலாம். தேர்ந்த எழில்; ஆனால் அவள் பிறந்த மனை தொடிப்பின் விளைவாக இறக்கம் கண்டது. 'சம்பந்தம் சாடிக்கை' விஷயத்தில் வத்சலையின் தந்தை வலியப்போய் எதையும் செய்யமுடியாமல் இருந்தார். இந்த இக்கட்டான நிலையில் தான் வத்சலை தவியாய்த் தவித்தாள். தன் கழுத்தில் மஞ்சள் கயிறு விழுமா என்று ஏங்கிக் கிடந்தாள். குலதெய்வத்தை நொந்துகொண்டாள். தன் முறை அத்தானை ரகசியமாகச் சந்தித்தது. தன் பரிதாப நிலையைக் கண்ணீர் மல்கிப் புரள விளக்கினாள். சொக்கலிங்கம் இதயம்

கொண்டிருந்தான். பணத்தை அவன் மதிக்கவில்லை : பெண்மையை மதித்தான். புதுச் சம்பந்தத்தை மதிக்காமல்; வத்சலைக்கு, அவன் அம்மான் சொக்கலிங்கத்தின் நிழலில் 'போக்கிடம்' கிடைத்தது.

சுயநினைவை மீட்டுக்கொண்டாள் அவள். இளநீலநிற ஒளிப்புனலைக் கடந்தன விழிகள். அவள், அவள் தேடிய கண்கள் நீரில் மிதந்து கொண்டிருக்கக் கண்டாள்!

'மஞ்சள் நீராடல்' சடங்கு முடிந்தது. முகூர்த்தப் பட்டு சலசலக்க மாடிக்கு வந்தான் சொக்கலிங்கம். நடையில் இருந்த நிலைக்கண்ணாடி அவன் உருவை எழுதிக் காட்டிற்று. அழகு முகம் சஞ்சலத்தின் இழை பின்னிக் காட்சி தந்தது. சூன்ய வெளியில் கண் பதித்தான் அவன். இதயம் முழுவதிலும் வெறுமை அட்டகாசமாகச் சிரித்தது. அந்தச் சிரிப்பிலே அவனது அழுகை விளைந்தது. அக்கணம் தன் உயிர் தன்னிடமிருந்து விடைபெறத் துடிப்பதுபோலப் பட்டது அவனுக்கு. 'ஆமாம்; அன்று தினம் அந்தத் தெய்வம் என் உயிரைக் காப்பாற்றவில்லையானால், இன்று நான் மாலையும் கழுத்துமாக விளங்கியிருக்க முடியுமா? முடியவே முடியாதே!...' அவன் நெஞ்சு ஏறி இறங்கியது. அந்த ஏற்றத் தாழ்வில் அன்பு விளையாடியது.

'மாண்டலே பெட்டகம்' வாய் திறந்தது. சிறிய புகை படமொன்று கண்திறந்தது. இமைக் கதவம் மூடாமல், அவ்வுருவத்தையே பார்த்துக்கொண்டிருந்தான் அவன். அன்பு கசிந்த கண்கள்; அருள் நிறைந்த உதடுகள்; தேஜஸ் மண்டிய முகவிலாசம்; கொண்டை சுற்றப்பட்டிருந்த சுருள் அலை படிந்த தலை முடியில் நட்சத்திரப் பூக்கள் மின்னின; இடது பக்கத்தில் தந்தச் சீப்பு இருந்தது. ஸில்க் அங்கி; அது பொங்கிப் பூரித்த யௌவனத்திற்குப் பாதுகாவல் போலும்!

சொக்கலிங்கம் நேத்திரங்களை மூடினான்; இதழ்கள் வழி கேட்டன. 'மாட்டீஞ்சி!' என்று தன்னுள் அவன் முணு முணுத்துக் கொண்டான். கண்ணீர் முட்டி மோதியது. உருப்பெற்ற அந்தப் பெயரிலே பர்மியர் நாடு உருக்காட்டியது; அன்பின் கதை உருக்கொண்டது.

அன்பு சோதனை வடிவானது அல்லவா? ஆனால், இதே அன்புச் சோதனைக்கு இலக்கான நிகழ்ச்சிகளுக்கும் பஞ்சம் இருந்தது கிடையாதுதானே?

மேல் பர்மாவின் நாட்டு வளப்பத்துக்குச் சிறப்புப்பாயிரம் அளித்து, நீர்வளம், காட்டிய பெருமை ஐராவதி நதிக்கு உடைமையாகும். 'தப்பிப்பீன்' என்னும் ஊர் நதிக்கரையில் அமைந்தது. நீர்ச் செழிப்புக்கு ஏகபோக வாரிசு மாதிரி விளங்கினாள் மாட்டீஞ்சி. அவளுடைய தகப்பன் 'கொல்லப்போ' மகா முரடன். அவனிடம் குதிரைவண்டி ஒன்று இருந்தது. இரங்கூன் முகத்துவாரத்தில் 'தீம்போனஸன்' கப்பல் பிடிப்பு நடந்து முடிந்து ஐந்தாறு நாட்கள் வரை, மீஞ்சான் போன்ற பகுதிகளிலிருந்து திரளும் பிரயாணிகள் அவனுக்குக் கை நிறையைக் கொடுப்பார்கள். ஆனால் அவனிடம் ஒரு கெட்ட குணம் குடிகொண்டிருந்தது. கல்லாக்களை இந்தியர்களை அவன் வெறுத்தான்.

ஒருநாள்.

சொக்கலிங்கம் தன்னுடைய நிர்வாகத்திலிருந்து மரக்கடைக் கல்லாவில் கணக்குப் பிள்ளையை அமர்த்திவிட்டு, கடையை விட்டு வெளியே வந்தான். கிஸ்தி வசூல் செய்யவேண்டிய இடங்களின் புள்ளி விவரங்கள் அடங்கிய 'சிட்டைப் புத்தகம்' அவனுடைய 'சேப்பி'யில் இருந்தது. அவன் அணிந்திருந்த 'சைட்யூ லாங்' தெருவில் ஊர்ந்தன. அந்தி மாலைப் பொழுது. சில்லறை வசூல்களை முடித்துக்கொண்டு, தமிழர்கள் வசிக்கும் 'பூசனிக்கன் அல்யா' வுக்கு வந்து, வேல்முருகனை வணங்கினான் அவன். இருள் சூழத் தொடங்கிற்று, புறப்பட்டான். இடை மறித்த வழியில் அன்பு இடை வெட்டியது. 'லாதம டைம்பாவ்!' என்று அவனை வரவேற்று உட்காரச் சொன்னான் பர்மாக்காரன் ஒருவன். கூம்ஸாவரம் தாம்பூலத்தட்டை வைத்த கையுடன் 'லப்பை' யை நீட்டினான். அவன் கொபாங்குவே; வாடிக்கைக்காரன். தேநீர் குடித்ததும், வசூல் விவரம் பற்றிச் சொன்னான் சொக்கலிங்கம். அது சமயம். ஏதோ காலடியோசை கேட்கவே, அவன் எட்டிப் பார்த்தான். யாரும் தட்டுப்படவில்லை!

"ஜப்பான்காரன் கொடுமை முடிந்து, பர்மா சுதந்திரம் அடைந்ததும், அதற்குள் ஆங்ஸான் கொலை காரணமாகக் கிளம்பிய புயல் இப்போதுதான் லேசாக அடங்கி வருகிறது. இருட்டு வேளை. உங்களிடமோ ஐயாயிர ரூபாய் வரை நிலுவை வசூல் பணம் இருப்பதாகச் சொல்லுகின்றீர்கள். நான் வேண்டுமானால் துணை வரட்டுமா?" என்று கேட்டான் பர்மாக்காரன்.

சொக்கலிங்கம் அவனது அன்பைப் பாராட்டி நன்றி சொல்லிவிட்டு, தானே ஒன்றியாக துணிவுடன் செல்ல முடியுமென்று புறப்பட்டுவிட்டான். அவனோடு ஆபத்தும் புறப்பட்டது. ஆபத்துக்கு ஓர் உருமென நின்றான் கொல்லாப்போ, இருட்செறிவுமிக்க சாலை முனையில் அவன் சொக்கலிங்கத்தை மடக்கினான். அவன் கையில் 'பக்கோ வீச்சரிவாள்' இருந்தது. 'ஒன்று பணம் கொடு; இல்லை, உன் உயிரைக் கொடு!' என்று முழங்கினான் முரடன். தலையில் சுற்றப்பட்டிருந்த சல்லாத் துணியை அவிழ்த்து சொக்கலிங்கத்தின் வாயைக் கட்டினான். குதிரை வண்டி பறந்தது.

மீண்டும் சொக்கலிங்கம் விழி மலர்ந்த தருணத்தில், தன்னைச் சுற்றிலும் பயங்கரமான இருள் ஆட்சி செலுத்தியதைக் கண்டான். அன்பின் கதவு மட்டுமின்றி, அறைக்கதவும் அடைபட்டிருக்கக் கண்டான். மீஞ்சானில் புதுப்பட்டி தோன்றியது. தன்னை மணக் கோலத்தில் காணவிழைந்து 'ஏர்மெயில்' மூலம் அந்த ஆசையை அனுப்பிய பெற்றோர்களை எண்ணினான். பர்மா நாட்டில் உள்ள சொத்துப்பத்தை நினைத்தான். 'ஸ்வேடீ கான் பயா' அவன் கண் முன் நின்றது. மண்ணிடை மெய்ப் பதித்து விழுந்து வணங்கினான். 'பத்து கியா' வுக்கு ஊதுவத்தி வாங்கிக் கொளுத்துவதாக பிரார்த்தனை செய்தான். இஷ்ட தெய்வங்களை வரவழைத்து, தன் உயிரைக் காத்தருளும்படி மன்றாடின். மேனியெங்கும் வேர்வை. அவன் மறுபடி கண்களைத் திறந்த சமயம், தன் முன்னே பர்மியப் பெண் ஒருத்தி நிற்பதைக் கண்டான். அவள்தான் அன்பின் உருவம்! 'என் அப்பன் விடிவதற்குள் உன்னைக் கொன்று போட்டுவிட்டு, உன் பணம் அத்தனையையும் லூட் அடித்து விடுவதாகத் திட்டம் போட்டிருக்கிறான். மகான் புத்தபிரான் தான் என் அப்பனைக் காத்து ரட்சிக்க வேண்டும். பொங்கிச் சாமிகளைக்கூட சட்டைப்பண்ணா தவனாயிற்றே அவன்! ஐயா, உங்களைப் பார்த்தால் ஏதோ என்னுடன் பிறந்த தமையனார் போலவே தோன்றுகிறது. அப்படித்தான் என் மனசில் பாசம் பெருகுகிறது. எனக்கு அண்ணன் இல்லை. உங்களையே அம்மாதிரி எண்ணுகின்றேன். இப்போதே நீங்கள் உங்கள் பணத்துடன் தப்பித்துக்கொள்ளுங்கள். என் தகப்பன் குடிபோதையில் தூங்குகிறான். இதுதான் தக்க தருணம். இன்று என் உயிர் என்னவோ அளவில்லாத ஆனந்தத்தினால் துள்ளுகிறது. ஆனால் ஒரு விண்ணப்பம். நீங்கள் இந்த லப்பையை அருந்துங்கள். இன்னொன்று, உங்கள் தங்கையை

மறந்துவிடாதீர்கள்!....' என்று உணர்ச்சிப் பெருக்குடன் பேசினாள் அப்பெண்.

தன்னைக்காத்த தெய்வமென அவளை வாழ்த்திப் பிரிந்தான் சொக்கலிங்கம். அவள் இறுதியில் சொன்னது 'செந்தட்டீமம்மே பாரே!' 'என்னை மறந்துவிடாதீர்!'என்ற வாசகம். அவளைத் துறந்து பிரிவதென்பது சாத்தியமா?

"மாட்டீஞ்சி! நீ என் உயிர் காத்த தெய்வமல்லவா? உனக்குத்தானே முதன் முதலாக என்னுடைய திருமணப் பத்திரிகையை அனுப்பினேன்?... நீ திருமண வாழ்த்துக்கூட அனுப்பவில்லையோ? ஏன்"

'அம்மான்!' என்று கூப்பிட்டாள் வத்சலை, கையில் பால்தம்ளர் வைத்திருந்தாள். கண்களில் கனவுகளைச் சுமந்திருந்தாள். மது மலரின் எழிலுக்கு வருணனையோ வக்கணையோ தேவையா, என்ன?

முதல் இரவு.

ஆத்திரம் பூக்கவில்லை; ஆதங்கம் குரல் கொடுத்தது; "அம்மான், அன்றைக்கே உங்ககிட்டே கேட்கணும்னு நினைச்சேன். எப்போ பார்த்தாலும் நீங்க ஏன் பிரமை தட்டிப்போய் இருக்கிறீங்க?... உங்க கண் ரெண்டும் சதா கலங்கிப் போகுதே, ஏன் அம்மான்?...."

மெய்மறந்த பரவசம் எய்தினான் சொக்கலிங்கம். மோகப் பெருமயக்கம் அடைந்த பாவனையில் அவளை ஏறிட்டுப் பார்த்தான். கண்ணாமூச்சி ஆட்டத்திற்குத் துணைவர வத்சலையைக் கைதட்டி அழைக்கும் அழகைப் பார்த்தீர்களா?

"வத்சலை, என்னைப் பார்க்கிறபோது உனக்கு என்ன தோணும்?"

"நீங்க என் தெய்வம் என்கிற ஞாபகம்தான்!"

"அப்படியானா, என்னையே ஒரு ஜீவன் காப்பாத்திச்சுன்னா, அந்த உயிரைப்பற்றி நீ என்ன நினைப்பே?"

"தெய்வத்தைக் காத்த தெய்வம்னு நினைப்பேன்!"

"சரி, இந்தப் படத்தைப் பார்!"

அவன் நீட்டிய படத்தைப் பார்த்தாள் வத்சலை. முகத்தில் சலனக்கோடுகள் எழும்பின.

"இந்தா பார், இந்தக் கதையை இல்லை நிஜமாகவே நடந்த கதையைக் கேள்!" என்று சொல்லி, மாட்டீஞ்சியால்தான் பிழைத்து மறு பிறப்புக் கொண்ட விந்தை நிகழ்ச்சியை விளக்கினான் சொக்கலிங்கம். மீண்டும் அவன் சிந்தனை வசப்பட்டான். பிறந்த மண்ணை மிதிக்க எண்ணி, முதல் கணக்கை முடிக்கத் திட்டமிட்ட அவன், முதன் முதலில் மாட்டீஞ்சியிடம் பணம் சொல்லிக்கொள்ளச் சென்றான். அவள் தந்தையை அண்டி, நிரம்பப் பொருள் கொடுத்தால், அது ஒரு வகையில் மாட்டீஞ்சிக்கும் உதவுமே என்பது அவன் கருத்து. மரப்பெட்டி வீட்டில் அடியெடுத்து வைத்ததும், புத்தரின் காலடியில் மாட்டீஞ்சியின் தந்தையின் படத்தைக் கண்டதும், அவனுக்கு மலைப்பு ஏற்பட்டது. தான் அனாதையாகிவிட்டதாகக் கதறினாள் அவள், நினைவுகளின் பிறப்புக்கு நேரம் காலம் இல்லை!

"வத்சலை, என் தெய்வம் மாட்டீஞ்சி எனக்கு வாழ்த்து அனுப்பாமல் இருக்கவே மாட்டாளே?... அவளிடமிருந்து எதுவும் வராததால், ஒருவேளை அவள் உயிருக்கு...!"

அவன் வார்த்தைகளை முடிப்பதற்கு முன்னதாக, 'அம்மான், என்னை, என்னை மன்னிச்சிருங்க' என்னும் அலறல் ஒலி அதிர்ந்தது. "இந்தப் படத்தைக் கண்டதும், தப்பா நினைச்சுக்கிட்டுத்தான் இந்தப் பர்மாக் கடுதாசியையும் ஒளிச்சுப்பிட்டேன். எனக்குத் தாலி பாக்கியம் நிலைக்கச் செய்ஞ்ச தெய்வத்தைத் தப்பா நினைச்சது எவ்வளவு பெரிய பாவம்!" என்று கூறிய வண்ணம், கையிலிருந்த படத்துடன் கிழிக்கப்பட்ட உறைக் கடிதம் ஒன்றையும் நீட்டினாள் வத்சலை.

பர்மிய மொழிக் கடிதத்தின் பொருளை சொக்கலிங்கம் சொன்னான்!

'உயிருக்கு நேரான அண்ணா!'

நலம். உங்கள் அழைப்பு பெற்றேன். உங்கள் தாம்பத்திய நல்வாழ்வுக்காக மகான் புத்தபிரானின் திருப்பாதங்களைத் தொழுது பிரார்த்தித்தேன். என் அண்ணியைக்காண, திருமணப் பரிசுகளோடு அடுத்த மாதம் கப்பலேறி வருகிறேன். என் எதிர்காலக் கணவரும் உடன் வருவார்.

❑

# வாழப் பிறந்தவள்

நடுச்சாமம்.

இரவு ஊர்ந்து கொண்டிருந்தது.

ஒளி உமிழ்ந்து பரப்பி நின்ற மேஜை விளக்கின் பாதத்தில் விரிந்து கிடந்த வைத்திய சஞ்சிகை ஒன்றில் கருத்தை மையமிட்டுப் படித்துக்கொண்டிருந்தார் டாக்டர் சேகரன்.

"டாக்டர் ஐயா."

"...."

"டாக்டர் எசமான்"

ஒன்றியிருந்த உள்ளத்தைத் திருப்பிவிட்டுக் குரல் குறுக்கிட்ட திசைக்குத் திருஷ்டியைத் திருப்பினார். வாசல் கதவு 'படீர் படீ'ரென்று ஓசை ஓலமிடத் தட்டும் சப்தம் காதைத் துளைத்தது; ஓடிப்போய்த் திறந்தார்.

மூச்சுப்பிடிக்க ஓடிவந்து அறையில் விழுந்த கண்ணுச்சாமியைக் கண்டதும் டாக்டருக்குத் திகைப்பு வளர்ந்தது.

"கண்ணுச்சாமி."

"எசமான், காஞ்சனை எங்கேயோ மறைஞ்சுப் போயிட்டாளே."

"காஞ்சனை!"

சேகரனுக்குப் பகீரென்றது. மனத்திரையில் புனையா ஓவியமெனத் தீட்டப்பட்டிருந்த அவள் எழில் பிம்பம் இமைப்பொழுதில் அவர் கண்முன் நிழல் வடிவிட்டது. விழிகள் கண்ணீர் கூட்டின.

"என்ன, காஞ்சனை மறைந்துவிட்டாளா? அதுவும் இந்த அகாலவேளையில் குமையும் இருள் வீச்சிலே?"

"ஐயையோ, என் அருமை மகள் எங்கே போனாளோ தெரியலையே. எப்பவும் போலத்தான் தூங்கிக்கிட்டிருந்துச்சு. என்னமோ லேசாச் சத்தம் கேட்டது. விழிச்சுக்கிட்ட நான், "யார் அது" என்று குரல் கொடுத்துப் பார்த்தேன். பதிலே வல்லை. மனசு சந்தேகப்பட்டது. விளக்கைத் தூண்டிக் காஞ்சனை படுத்திருந்த இடத்தைப் பார்த்தேன். அந்த இடம் சும்மா காலியாயிருந்துச்சு. என் உயிரே போயிடுச்சு எசமான்."

துயரம் சுருதி சேர்க்க விக்கலுடன் நடந்ததைச் சொன்னான் கண்ணுச்சாமி.

"காஞ்சானை இப்படித் திடுதிப்பென்னு மறைய என்னதான் காரணம்? பெண் இதயம் பேதலிக்கப் பிழைபட ஏதாகிலும் சொன்னாயா?"

மனம் கற்பித்தக் காரணத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு கேள்வியை உதிர்த்துவிட்டார் டாக்டர், கண்ணுச்சாமியிடம்.

ஆனால் கேட்ட கேள்வி அவனைச் சுட்டுவிட்டதோ என்னவோ, பாவம்! பச்சைக் குழந்தைபோல அவன் விசித்து அழ ஆரம்பித்தான்.

"எசமான், 'அது' பிறந்த நாளிலிருந்து முகம் கண்ட இதுவரை ஒரு வார்த்தைக் கூடச் சொன்னதில்லிங்க."

"ஒரு வேளை ரயிலடிப்பக்கம் போயிருக்கலாம்; ஏனென்றால், இன்னும் அரைமணி நேரத்தில் வடக்கே ஒரு ரயில் இருக்கிறது. எதற்கும் பதட்டப்படாமல் வா, போய்ப் பார்க்கலாம்."

எங்கும் மோனம்!

ரயிலடிக்குச் சென்றுகொண்டிருந்த அவர்கள் இருவரும் வழியில் குறுக்கிட்ட ஆற்றுப் பாலத்தை அணுகும்போது, இருளில் ஒரு புள்ளியென வெள்ளை உருவமொன்று முன்செல்வது புலனாயிற்று. மறுவினாடி, 'தொபேலெ'ன்று பெருத்த ஓசை ஓலம் எழுப்பி அமைதியைக் கலைத்தது, அதே தருணத்தில் பாலத்தில் போய்க்கொண்டிருந்த உருவமும் மறைந்தது.

"என்ன அந்தச் சப்தம்?"

"நீங்களும் கவனிச்சிங்களா எசமான்?"

அடுத்தகணம் சேகரன் தண்ணீரில் குதித்தார். நல்ல வேளையாகத் தண்ணீர் கழுத்தளவே இருந்தது. நீரில் மூழ்கி எழுந்த அவர் கையில் மனித உடல் ஒன்று தட்டுப்பட்டதை உணர, பலத்தை ஒன்றுசேர்த்து அவ்வுருவத்தைக் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்துவிட்டார்.

வழியில் கிடத்தப்பட்டிருந்த உடலை அருகிலிருந்த விளக்குக் கம்பத்தின் மங்கிய ஒளியில் உற்றுக் கவனித்தான் கண்ணுச்சாமி. உள்ளம் அதிர, "ஐயோ, கடைசியிலே அது என் காஞ்சனைதானா?" என்று அலறினான்.

"காஞ்சனை!"

முத்துப் பதிந்த மென்முறுவல்; அதிலே மயங்கச் செய்யும் காந்த இழைவு. வேல் விழிகள்; அதிலே மனங்கவர் மானின் மருட்சி தளிர் மேனி; அதிலே பருவ வளர்ச்சியின் பூரித்த அங்கங்கள். ஆமாம்; அனைத்தும் காஞ்சனை!

இருந்தும்...!

வாழ்க்கைப் பூங்காவில் புதுமணம் பரப்ப வேண்டிய புதுமலர் பேயும் அஞ்சும் மையிருட்டில் ஆற்றைச் சரணடையக் காரணம்? இளமையின் தொடக்கத்திலேயே வாழ்வு வெறுக்கும்படி என்னதான் சம்பவித்தது?

வீட்டிற்குக் கொண்டுவந்து படுக்கவைத்தான் கண்ணுச்சாமி. அவள் விரக்திக்குக் காரணம் பிடிபடாமல் மனம் குழம்பிக் கிடந்த சேகரன் 'ஸ்டெத்தாஸ்கோப்' கொண்டு சோதனை செய்து பார்த்தார். உயிருக்குப் பயமில்லை என்பதை உணர்ந்தும் அவருக்கு மிக ஆறுதல் உண்டானது.

நிமிஷங்கள் சில தேய்ந்தன.

இணைந்திருந்த இமை வட்டங்களிடையே விழி விரிப்பு. மெல்ல மெல்லக் கண்களைத் திறந்து சுற்றிப் பார்த்தாள் காஞ்சனை.

டாக்டர் முகத்தில் வியப்பு; கண்ணுச்சாமிக்கு அப்போதுதான் போன உயிர் மீண்டது போன்ற அமைதி.

காஞ்சனையின் புருவங்கள் மேலேறி நின்றன. சேகரன் திரும்பினார், அவள் பக்கமாக. பார்வைகள் பரிமாறின.

"காஞ்சனை, இருந்திருந்தாற்போல ஆற்றில் விழ நேரிட்டதின் மர்மம்தான் என்ன?" டாக்டர் அன்புடன் வினவினார்.

அவள் பதில் கூறாமல் கண்ணீர் பெருக்க ஆரம்பித்தாள்; உடல் நடுங்க மார்பகம் ஓர் முறை விம்மித் தாழ்ந்தது.

"காஞ்சனை, ஏன் இப்படித் தேம்புகிறாய்? உன் மௌனமும் மனக் கலக்கமும் உன் தந்தைக்கு எவ்வித சஞ்சலத்தை உண்டாக்கும் என்பதை யோசித்தாயா? சொல். என்னவானாலும் வாயைத் திறந்தது பதில் கூறு."

இவ்விதம் சொல்லிய டாக்டர் திரும்பவும் அவளை நோக்கினார். விழிவெள்ளம் அடங்கவில்லை. தன் தந்தையையும் சேகரனையும் மாறி மாறிப் பார்த்த அவள் பார்வையில் அடியுண்ட மானின் வேதனை தடம் பரப்பியது.

"டாக்டர் ஸார், தயவு செய்து என்னைத் தடுக்காதீர்கள். நான் சாகப் பிறந்தவள். உலகம் சிரிக்க, மனசுக்கு என் இதய அந்தரங்கத்தை வளைத்து முத்தமிட்டுச் செல்லும் நரக வேதனையைச் சகிக்க எப்படி என் மனம் தாழும்?"

"காஞ்சனை, விபரமாகச் சொல்."

"நான் கர்ப்பவதி."

"என்ன?"

இரண்டு குரல்கள் ஒரே சமயத்தில் எதிரொலித்தன.

"சில வாரங்களுக்கு முன் நடந்த விஷயம். பணத்தின் மமதையில் இடப்பட்ட விஷவித்து. மிட்டாதார் மகள் என்வகுப்புத் தோழி. ஒருநாள் அவளிடம் புத்தகமென்று வாங்கப் போனேன். அவள் இல்லை; அவள் தமையன் மட்டுமே இருந்தான். நான் புறப்படுவதைக் கண்ட அவன், தன் தங்கை வரும் நேரமாகிவிட்டதாகத் தங்கச் செய்தான். தான் தங்கினேன், தோழியைக் காண. ஆனால் மறுநிமிஷம் அந்தப் பாவி என்னை பலவந்தப்படுத்தி...ஐயோ.... இந்த இழிவு நிலையிலா மீண்டும் இவ்வுலகைத் திரும்பக் காண என்னை

காப்பாற்றியிருக்கிறீர்கள். ஊஹூம் சாத்திமில்லை. திரும்பவும் தந்தையின் முன்னிலையில்..உங்கள் முன்னிலையில்...அந்தோ!"

வார்த்தைகள் குழம்பின.

இளகிய நெஞ்சம் படைத்தவனல்லவா தமிழன்?

சேகரன் கண்கலங்கினார். கண்ணுச்சாமி செயலிழந்தான்.

டாக்டர் சிந்தித்தார். சிந்தனையின் தொடுவாயில் எண்ணங்கள் அலைபாய்ந்தன.

"காஞ்சனை கபடமற்றவள். பச்சைப் பசுங்குழந்தை போன்றது அவள் மனப்பண்பாடு. தகதகக்கும் செந்தணல் பிழம்புகளில் அவளைத் தள்ளி அவளுடைய மலரவேண்டிய வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளியிடத்தான் திட்டமிட்டிருப்பான் அந்த வஞ்சகன். அதன் நிமித்தம் அவள் வெந்து சாம்பலாக வேண்டியதுதானா? எத்துணை கோரமான நியதி! நினைக்கவும் மயிர் சிலிர்க்கும் ஆணையல்லவா? உலகில் பிறக்கத் தவங்கிடந்து, பின் இப்படிச் சாவை அரவணைக்க அதற்கு வரவேற்பும் அளிக்கவேண்டுமா? கூடவே கூடாது. பெண் பாவம் பொல்லாதது. தூண்டிற் புழுவாகத் துடிக்கும் அவளுக்கு அபயமளிப்பதே புண்ணியம் கடமை. ஆம்; அவள் காப்பாற்றப்படவேணும். இனி கொஞ்சனை என் உயிர்த்துணைவி...ஆகா!"

தன்னிடம் வேலைசெய்யும் காவற்காரனின் மகளைக் கரம்பற்ற முடிவு செய்தார் டாக்டர். வாழ்க்கைப் புத்தகத்தின் ஆரம்ப அத்தியாயம் அவளாலேயே துவக்கப்படவேண்டும். அவருக்கு அனைத்தும் கனவு மாதிரி தோன்றிற்று.

நீர்த்திரையிட்டிருந்த கண்களுடன் காஞ்சனையை நோக்கி "காஞ்சனை, நீ என்னை மணம் செய்துகொள்ள..." என்றார்.

இக்கேள்வியைக் கண்ணுச்சாமி எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்? அவன் முகத்தில் ஆச்சரிய ரேகை தாரை ஓடியது.

"டாக்டர், குற்றம் படைத்த என்னை ஏற்றுக் கொண்டீர்களானால் அப்புறம் சமூகம் உங்களைத் தூற்ற ஆரம்பிக்குமே."

சமூகம் அது கிடக்கட்டும். அதே சமூகம் உன்னுடைய மாசு மருவற்ற புனிதத் தன்மையை ஏன் ஊகித்துணர முடியாதென நினைக்கிறாய்.

"அப்படியென்றால் நான் வாழப் பிறந்தவள்தானா?"

நன்றியின் மிகுதியில் அவள் கண்ணீர் உகுத்தாள். டாக்டரின் கால்களைப்பற்றிப் பணிய ஓடினான் கண்ணுச்சாமி.

ஆனால்...?

மறுவினாடி அண்டம் கலங்க எழும்பிய 'ஐயையோ' என்ற வேதனை கலந்த அபயக் குரல் கேட்டுத் திரும்பினார் சேகரன்.

காஞ்சனையின் மார்பில் பதிந்திருந்த வாளைப் பிளந்து பிரவகித்துக்கொண்டிருந்தது குருதி வெள்ளம். தற்கொலை!...

ஒன்றும் தோன்றாமல் நின்ற டாக்டருக்கு உலகமே சுழன்றது. கண்ணுச்சாமி பேய்ச் சிரிப்பு உமிழ்ந்தான்.

என்ன தோன்றிற்றோ, அடுத்த கணம் மிட்டாதார் வீட்டை நோக்கி ஓடிக்கொண்டிருந்தான் கண்ணுச்சாமி.

❑

# குழந்தை உள்ளம்

"செல்லம்மாவுக்கு உடம்பு மட்டும் குணமாயிருந்தா, மற்றப் பிள்ளைங்க மாதிரி எவ்வளவு குதூகலமா ஆடிப்பாடி விளையாடும்!"

பக்கத்தில் கண்ணாமூச்சி விளையாடிக்கொண்டிருந்த குழந்தைகளைக் கண்டதும், சிங்காரத்திற்கு அந்த ஓர் எண்ணம் மாறி மாறித் தோன்றியது. மரம் செதுக்கிச் சீர்பண்ணிக்கொண்டிருந்த அவனுக்கு மேலே வேலை ஓடவில்லை. அவன் கண்களின் ஓரத்தில் கண்ணீர் பரவியது.

"உடம்பு காயலாக் கிடக்கும் மகளை விட்டுப்பிட்டு ஏதுக்கு வேலைக்கு வரணும்? வந்தபுறம் மனம் நொந்து ஏன் இம்பிட்டுத் துடிதுடிக்க வேணும்?" என்று வேறு சிந்தித்து மூளையைக் குழப்பிக்கொண்டான் சிங்காரம்.

அவன் நினைவுப் பிரகாரம் அன்றைக்கு வேலைக்கு வராமலிருந்திருக்கலாம்; ஜுரமடித்துக் கிடக்கும் கண்ணான மகளின் அருகில் இருந்து வேண்டியதைச் செய்து, மனத்திற்கு அமைதியை ஓரளவு தேடிக்கொண்டும் இருக்கலாம். ஆனால், அன்றையப் பொழுதைக் காலதேவன் தன் கைப்பிடியினின்றும் நழுவவிட்டாக வேண்டுமல்லவா? பணத்துக்கு என்ன செய்வது?

தினம் தினம் ஏதாவது வேலை செய்தால்தான் அவனுக்கும் மகளுக்கும் சாண் வயிற்றைக் கழுவி மூடமுடியும். செல்லம்மாவுக்குக் காய்ச்சல் விஷம்போல ஏறியிருந்ததால் முந்தின நாள் வேலைக்குப் போகவில்லை. அதன் பலன் அன்று சாப்பாட்டிற்குத் திண்டாட்ட மாகிவிட்டது. இந்த இக்கட்டான நிலையே சிங்காரத்தைக் காலையில் வேலைக்குச் செல்லத்தூண்டியது.

நைந்துபோன பாய்மீது முடங்கிக் கிடந்தாள் செல்லம்மா. தலைமாட்டில் அகல் விளக்கு மங்கலாக எரிந்தது. இரண்டு நாளாகக்

காய்ச்சலில் கஷ்டப்பட்ட குழந்தையின் முகம் வாடிவிட்டது. எண்ணெய் படாமல் சிக்கல் பாய்ந்திருந்த தேசத்தை மெல்லக் கைவிரல்களால் கோதியவண்ணம் தன் மகளை இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தான் சிங்காரம்.

செல்லம்மாவுக்குக் கிட்டத்தட்ட எட்டு வயதிருக்கும். ஆனால் அந்த எட்டு வருஷங்களில் முழுசாக ஏழு வருஷங்கள் தாம் தாயின் பராமரிப்பில் வளர அதன் தலையில் 'லவிதம்' இட்டிருந்ததுபோலும். அப்புறம் தாயற்ற மகளுக்குத் தந்தையின் பொறுப்புடன் தாயின் ஸ்தானத்தையும் சேர்த்து நிர்வகிக்க வேண்டியவனானான் அவன்.

காய்ச்சி வைத்திருந்த கஞ்சியைக் குவளையில் சீராக ஊற்றி மகளிடம் நீட்டினான். 'மடமட' வென்று குடித்தாள் செல்லம்மா.

"இன்னும் கொஞ்சம்?"

"ஊஹூம்! வேணாம்!"

தலையணையை இசைவாக வைத்துப் படுக்க வைத்தான் சிங்காரம்.

"அப்பா!"

"தூங்கலையா கண்ணு?"

"அப்பா, பார்த்தியா மறந்து பூட்டேன். சாயந்திரமா மேஸ்திரி ஐயா வந்துட்டுப் போனாரு பணத்துக்கு..."

சிங்காரத்தின் மன அமைதியைப் பறித்துச் சென்றது, செல்லம்மா கூறிய சேதி, அவன் கலங்கினான். கடன்பட்ட நெஞ்சமாயிற்றே! மனைவியின் பிரசவத்திற்கென ஐம்பது ரூபாய் கடன் வாங்கியிருந்தேன் மேஸ்திரியிடத்தில், பிள்ளையும் தாயும் வேறாகப் புனர்ஜன்மமெடுத்துச் சுகமுடன் பிழைக்கவேண்டுமேயென்று. டாக்டர் பீஸிற்குக் கரைந்தது மேற்படி பணம். அவன் போதாத காலம் மனைவி பிரசவத்தில் இறந்துவிட்டாள். கடன் பட்டதுதான் கண்ட பலன்.

சாப்பாட்டின் நினைவே சிங்காரத்துக்கு இல்லை. தலைகனக்க தரையில் துணியை உதறி விரித்தான். விழி, வெள்ளத்தில் மிதந்தது.

அடுத்த நாள், சுடுசோறு வடித்துச் செல்லம்மாவுக்கு ஊட்டிவிட்டான். மிகுதியை நாலு வாயாக உருட்டிப் போட்டுக்

கொண்டு வேலைக்குப் புறப்பட எத்தனித்தான். ஜுரத்தின் அடையாளம் கொஞ்சமும் குறையாமல் இருந்தது செல்லம்மாவுக்கு. சிங்காரத்திற்கு இதைக் காண மனம் குமுறியது. அவன் உடல் நடுங்கினான்; உள்ளம் சோர்ந்தான்.

'சிங்காரம்!' என்று அழைத்தவாறு உள்ளே பிரவேசித்த மேஸ்திரியைக் கண்டதும் அவனுக்குத் 'திக்' கென்றது. 'வாங்க ஐயா!' என்று உபசரித்தான்.

"சிங்காரம், பாவம் புண்ணியத்துக்கு மனசு இரக்கப்பட்டு, நோட்டுசாட்டுக்கூட இல்லாமல், ஐம்பது ரூபாய் சுளையா எண்ணித் தந்ததுக்கு இதுதான் பண்ணுவியா அல்லது இன்னமும் பண்ணப் போறியா? பணத்தைக் கொடுத்துப்புட்டு இப்படி நடையாய் நடக்கிறேன் பாரு. அதுக்கு என் புத்தியைச் சொல்லவேணும்! கடைசியாகச் சொல்றேன் எந்தக் குடி எக்கேடு கெட்டாலும் கடன் தொகை சாடா பொழுதுக்குள்ளே என் கைக்கு வந்துப்பிடணும்! சொன்ன பேச்சுக்கு மறுபேச்சுக்கு கிடையாது!...." என்று பொரிந்து கொட்டினார் மேஸ்திரி.

எதேச்சையாக அவர் திருஷ்டி அருகில் கலவரத்துடன் படுத்திருந்த செல்லம்மாமீது சென்று திரும்பிற்று. மின்னல் குமிழ் போன்ற அவள் கண்கள் மேஸ்திரியை ஏக்கத்துடன் துருவின. ஒரு கணம் துள்ளிக் குதித்தார் மேஸ்திரி.

"சிங்காரம், எத்தனை நாளாக என் பணத்தைத் தண்ணீரில் அடிக்கத் திட்டம் போட்டிருக்கிறாய்? உன் மகள் கழுத்திலே போட்டிருக்கும் அந்தச் சரட்டை வித்துப் பணத்தைக் கொடு! இல்லாட்டி அந்தச் சரட்டைக் கடனுக்கு என்னிடம் கழற்றிக்கொடு! கொஞ்ச நஞ்சம் குறைஞ்சாலும் பரவாயில்லை. கடன் கழிஞ்சாக் காற்றுப்போல..."

நெருப்பைத் தீண்டியவன் மாதிரி திகைத்துவிட்டான் சிங்காரம்.

"ஐயா, உங்க கடனை எப்பாடு பட்டுத் தலையை அடகு வச்சாகிலும் கொஞ்ச நாளிலே கட்டிப்பிடுறேனுங்க. பொறுத்தது பொறுத்திட்டிங்க. இன்னும் கொஞ்சம் பொறுங்க. உங்க பிள்ளை குட்டிங்க நல்லாயிருக்கும். ஆனா மகள் சரட்டை மட்டும் உயிர் போனாலும் கழற்றமாட்டேனுங்க..."

கண்ணீரை விலக்கிக்கொண்டான் சிங்காரம். செல்லம்மாவின் கழுத்தைவிட்டுச் சரட்டை அகற்ற அவன் பஞ்சை மனம் சம்மதிக்கவில்லை. காரணம், அச்சரடு மரணப்படுக்கையில் உழன்ற அவன் மனைவி தன் ஞாபகார்த்தமாக என்றும் இருக்கவேண்டுமென்று மகளுக்குப் பூட்டியே ஆபரணம் அது. ஆனால் மேஸ்திரிக்கு இதில் ஏதோ சூது இருப்பதாகத் தோன்றவே கோபம் கொந்தளித்தது.

"அயோக்கியன்! இன்று பொழுதுக்குள் கடன் பட்டு வாடா ஆகிப்போடணும்! இல்லாவிட்டால் நாளை விடிவதற்குள் உன் குடிசை பறிபோயிடும்! ஜாக்கிரதை!"

தகப்பனுக்கும் மேஸ்திரிக்கும் நடந்த சம்பாஷணை பூராவையும் ஒன்றுவிடாமல் கேட்டுக்கொண்டிருந்த செல்லம்மாவுக்கு அழுகை பீறிட்டது.

"அப்பா, எதுக்காக இம்பிட்டு யோசனை பண்றீங்க? மூச்சு விடாமே என் சரட்டை அந்த ஐயாகிட்டக் கொடுத்துக் கடனை அடைச்சுப்பிடுங்க. பெரிய மனுசங்க பொல்லாப்பு நமக்கு ஏன்? நமக்கும் ஒரு நாள் இல்லாட்டி ஒரு நாள் நல்ல காலம் பிறக்காமலா போயிரும்? அப்போ வேறே ஒரு சரடு செஞ்சுக்கலாம்..." என்பதாக விக்கலுக்கும் விம்மலுக்கும் மத்தியில் கூறினாள் செல்லம்மா.

தன் புதல்வியின் அறிவைக் காணச் சிங்காரத்துக்கும் அழவேண்டும்போலிருந்தது. 'ஆகட்டும் கண்ணு!' என்று சொல்லிச் சரட்டைக் கழற்ற நெருங்கினான் அவன். வேறு வழி?

அதே சமயம், "மேஸ்திரி எசமான்! உங்க மகள் கமலாவைப் பாம்பு கடிச்சு ரொம்பத் தடபுடலா இருக்குங்க!" என்று ஓடிவந்து சொன்னான் வேலைக்காரப் பையன்.

அவ்வளவுதான்! மேஸ்திரிக்கு உலகமே சுற்றியது! கை கால்கள் நடுங்கின. தன் குழந்தை ஆசை காட்டி அழகு காட்டி மனத்தை மகிழச் செய்த நிகழ்ச்சிகள் அடுக்கடுக்காக மனத்திரையில் விரிந்தோடின. மகளின் வதனத்தில் ஆசை கொண்ட மட்டும் பதித்த அன்பு முத்தங்களை ஒவ்வொன்றாக நினைவுபடுத்திப் பார்த்தார். ஒரு நிமிஷம் பயங்கர நினைவுகள் அவரை வாட்டி எடுத்தன.

மந்தரித்து எந்த விஷக் கடியையும் போக்குவதில் சிங்காரம் மிகவும் பிரக்யாதி பெற்றவன் என்ற எண்ணம் மின்னல் போல மேஸ்திரியின் மனத்தில் உதித்தது. "மகள் உயிர் சிங்காரத்தின் கையிலே தான் இருக்குது; அவன் மனது வச்சாக் கமலாவை உயிரோடே காணலாம். ஆனா கொஞ்ச முந்தி தயவு தாட்சண்யமின்றிப் பேசின எனக்கு அவன் இரக்கப்படுவானா? பகவானே!" எனத் தன்னுள் நினைத்துப் பார்த்த மேஸ்திரி, அப்போதுதான் சிங்காரம் அவன் மகளின் மீது கொண்டிருக்கும் பாசத்தை உணர்ந்தார். தனக்கு வந்தால் அல்லவா தெரியும் தலைவலியும் காய்ச்சலும்! அவனைக் கடிந்து சரட்டைக் கழற்றிக் கொடுக்கும்படி நிர்ப்பந்தப்படுத்தியதற்குத் தண்டனையாக இச்சம்பவம் நேர்ந்திருக்குமோ என்றுகூட நினைக்கலானார்.

"மேஸ்திரி ஐயா, இந்தாங்க சரடு; கடனுக்கு வச்சுக்குங்க! எதுக்கு இப்படி மலைச்சுப் போய் நிக்கறீங்க? வாங்க உங்க வீட்டுக்கு. பாம்பு விஷத்தை மந்திரிச்சுக் கண்சிமிட்டிற நேரத்திலே தணிச்சிடறேன்!" என்றான் சிங்காரம் பதட்டத்துடன்.

மேஸ்திரிக்குத் தன் செவிகளை நம்பவே முடியவில்லை.

"சிங்காரம், என் சின்ன புத்தியாலே உன்னைச் சந்தேகிச்சுத் தப்பா நெனைச்சேன். என்னை மன்னிச்சுப்பிடு. நான் சொல்றதைத் தட்டாமல், அந்தச் சரட்டை உன் மகள் கழுத்திலே போட்டுப்பிட்டு ஓடிவா! என் மகள் உயிரைக் காப்பாத்தித் தந்தா அதுவே நீ எனக்குக் கோடி ரூபாய் கொடுத்த மாதிரி..."

சிங்காரம் பின்தொடர, மேஸ்திரி ஓட்டமும் நடையுமாகச் சென்றார். சென்று பார்த்தார், அவர் வீட்டில் கண்டகாட்சி அவரைப் பிரமிக்கச் செய்தது. சர்வ சாதாரணமாகக் குதூகலத்துடன் நின்றுகொண்டிருந்தாள் அவர் பெண் கமலா. அப்படியென்றால் விஷம் தானாகவே அகன்று விட்டதா, என்ன?

"அப்பா, முதலிலேயே சொல்லிடுறேன். நீங்க என்னையோ, நம்ப வேலைக்காரனையோ கோவிச்சுக்கப்படாது. செல்லம்மாவுக்கு மேலுக்கு முடியலைன்னு கேட்டதும் பார்க்க ஓடியாந்தேன். அப்பத்தான் நீங்க அது அப்பாவைக் கண்டபடி, கோவிச்சுக்கிட்டு, சரட்டைத் தரத்தான் வேணுமின்னு கண்டிச்சிங்க. அப்போ இருந்த அவரு மனசு உங்களுக்கு எப்படித் தெரியும்? என்னைப் பாம்பு

கடிச்சதாகப் பொய் சொல்லியனுப்பினேன். கடைசியா என் தந்திரமும் பலிச்சுது. எனக்கு மந்திரிக்கச் செல்லம்மாவின் அப்பாரு வேண்டியிருந்ததாலேதானே உங்க மனசு திடுயின்னு மாறிச்சு? இல்லையானா அந்த ஆளைச் சும்மாவா விடுவிங்க? அப்பா, செல்லம்மாவும் நானும் உயிருக்குயிர். அவங்க ஏழைங்க; கடனைப்பத்தி இனித் தொந்தரவு பண்ணாதிங்க!" என்றாள் கமலா.

தன் ஆசை மகளைப் பாம்பு தீண்டவில்லை என்றறிந்ததும் மேஸ்திரிக்குப் போன உயிர் திரும்பிற்று. சிறு குழந்தையானாலும் விதரணை புரிந்த பெரியவர்களைப் போன்று பேசிய தன் புதல்வியின் உயரிய மனப்பண்பையும், தந்திரத்தையும் கண்டு அப்படியே அன்போடு அவளை அணைத்துக்கொண்டார்.

தன்னைப்பற்றி இவ்வளவு அக்கறைப்பட்டிருக்கும் மேஸ்திரி மகளைக் கண் கொட்டாது பார்த்து நின்ற சிங்காரத்தின் கண்களினின்றும் கண்ணீர் வழிந்தது.

❑

# போட்டா போட்டி

நுங்கும் நுரையுமாகக் குமிழியிட்டுச் சென்றிருந்த காவிரியின் புதுவெள்ளப் பூரிப்பில் மனம்விட்டு லயித்திருந்த அவள், காற்றில் கலந்துவந்த குழல் ஓசையைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். நினைத்தபடி முத்தையனைக் காணவில்லை. குணவதிக்கு ஏமாற்றமாகப் போய்விட்டது. வழக்கமாக வரும் அந்த ஒற்றையடிப் பாதையை மீண்டும் ஒருமுறை நோக்கினாள். செடி மறைவிலிருந்து மெல்ல எழுந்த முத்தையனைக் கண்டவுடன் குணவதிக்குச் சந்தோஷம் எல்லை கடந்தது. தன்னை வழக்கம்போல ஏமாற்றி வேடிக்கை பார்க்கவே இப்படிச் செய்திருக்கிறான் முத்தையன் என்பதை அறிந்த குணவதி, சுய கௌரவத்தை விட்டுக்கொடுக்க விரும்பாதவள்போல மறுபடியும் அலைபாய்ந்து ஓடிக்கொண்டிருந்த புதுப்பனலின் பரப்பில் கால்களைப் பதித்து விளையாட ஆரம்பித்தாள்.

"ஏலே, குணவதி."

குழந்தை அக்குரலின் மோகனநாதம் அவளை என்ன செய்ததோ? சற்றுமுன் கொண்ட திட வைராக்கியம் எங்கு ஓடி ஒளிந்ததோ? மெதுவாகத் தலையைத் திருப்பிப் புன்னகை பூத்தாள். தன் எதிரே ஒயிலுடன் நின்று கொண்டிருந்த முத்தையனைப் பார்த்து. ஆனால் மறுவினாடி அவளுடைய மலர்ந்த முகம் குவியக்கண்ட முத்தையன், காரணம் ஒன்றும் விளங்காதவனாய்க் கதிகலங்கினான்.

"குணவதி எம்மேலே கோவமா ஒனக்கு? ஏதுக்கு இப்படித் திடீர்னு ஒன் முகம் மாறிடுச்சு?"

"மச்சான், ஒங்களுக்கு விசயமே தெரியாதாங்காட்டியும்? ஆளு செத்தானா பொளைச்சனாங்கற சேதிகூட இம்பிட்டு வருசமாப் புரியாம இருந்த ஓட்டுவீட்டு மேஸ்திரியாரு மகன் மாரி நேத்திக்கு ரங்கூனிலேருந்து வந்திருக்கானாம். எல்லாங்கிடக்க அம்மாவையும் மத்தியான்னம் ஒரு ஆளு அனுப்பி மேஸ்திரி கூப்பிட்டுருக்காரு. என்ன

கதையோ....?"

'குணவதி' என்று மேற்கொண்டு ஏதோ சொல்ல வாயெடுத்தான் முத்தையன். அதற்குள் கண்கலங்க நின்று கொண்டிருந்த குணவதியின் வயதான தாயைக் கண்டதும் இருவர் நிலையும் மோசமானது.

"சோடிப் புறா கணக்கா நீங்க ரெண்டுபேரும் என்னைக்கும் இருப்பீங்கன்னு கொண்டிருந்த என் ஆசைக்கு மோசம் வருமின்னு துளிகூட நினைக்கலையே? மேஸ்திரி தன் மகனுக்குத்தான் ஒன்னைக்கட்டிக்கொடுக்க வேணுமாம். மொறைப் பொண்ணாம். அதேதான் நம் சாதிக்கட்டுப்பாடாம். இப்படி ஒரே மூச்சா என்னென்னமோ சொன்னாரு. மாரிக்கு ஒன்னைக் கண்ணாலம் பண்ணினா நாம்ப தப்பிச்சோமாம். இல்லாட்டி நம்பளை ஒரு கை பார்த்துடுவாராம்..." என்று குணவதியிடம் விம்மலுடன் கூறி முடித்தாள் அவள் தாய்.

முத்தையனுக்கு மனதில் ஒரு கலக்கம் ஏற்பட்டது. மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் நின்றுகொண்டிருந்த தன் அம்மா போனபிறகு தணிந்த குரலில் 'மச்சான்' என்றாள் குணவதி.

"குணவதி நீ கண் கலங்காதே. எதுக்கும் கொடுத்து வைக்கவேணும். அவங்க அவங்க தலையெழுத்தை மாத்திப்போட யாராலேதான் ஏலும்? ஒண்ணுக்கும் உதவாத இந்த ஒண்டியாலே, பாவம் ஒறமொறைக்குள்ளார ஏதுக்கு, வீணாதவசலும் சண்டையும்? நான் ஒண்ணு மாத்திரம் கேட்கிறேன். என்னைப்பத்திய நெனைப்பு மட்டும் மாறாம உனக்கு இருந்தா அதுவே போதும். மறு பேச்சாடாமல் மாரியைத்தானே கண்ணாலம்....."

வார்த்தைகளை முடிப்பதற்குள் குணவதி இடைமறித்து, "மச்சான் வெந்த புண்ணிலே வேலிடவா வேணும்? இவ்வளவு வருசமாப் பழகியுங்கூடக் குணவதியை நீங்க புரிஞ்சுக்கலையா? மொறப்பொண்ணாமில்லே மொறைப்பொண்ணு, அன்னிக்கு அப்பாரு சாகக் கிடக்கிறப்போ ஒரு உதவி ஒத்தாசை செய்யத் துப்பில்லை. அன்னிக்கு விட்டுப்போன சொந்தம் இப்ப எப்படிப் புதுசா முளைச்சுதாம்? மச்சான், ஒரு யோசனை தோணுது. மூணாம்பேருக்குத் தெரியாம ராவோடு ராவா கண்டிச் சீமைப் பக்கம் ஓடிடலாமே..." என்று பதட்டமாகக் கேட்டாள்.

“குணவதி, அவுங்களுக்குப் பயந்து ஏதுக்கு ஓடணும்? உன் அன்பு எம்மேலே உள்ளவரைக்கும் அதுவே எனக்குப் பத்து ஆளு பலத்தைக் கொடுக்கும்! பார்த்துக்கலாம்” என்று ஆத்திரத்தோடு மொழிந்த முத்தையனைக் கண்டதும் குணவதி ஆச்சரியப்பட்டாள்.

“குணவதி, ஏந்திரு. மஞ்சள் வெய்யல் மறையறதுக்குள்ளே ஒரு ஓட்டம் படகிலே போயிட்டுவரலாம்.”

மறுமலர்ச்சியடைந்தவர்களைப் போன்று குணவதியும் முத்தையனும் படகைத் தள்ளினார்கள். காவேரியின் அன்பணைப்பில் மிதந்தது பரிசல்!

அடுத்த நாள்!

நொந்த மனத்துடன் தெருவில் போய்க்கொண்டிருந்ததான் முத்தையன். அவன் கண்களை அவனால் நம்ப முடியவில்லை. தெருக்கூத்தில் வரும் ராஜபார்ட் மாதிரி உடையணிந்து குஷாலாக வந்து கொண்டிருந்தான் மேஸ்திரி மகன் மாரி. குணவதிக்குப் போட்டியிடும் அவனைக்கண்ட முத்தையனுக்கு நெஞ்சு படபடத்தது. மேலும் அன்று குணவதியின் தாய் சொன்ன விஷயங்களும் நினைவுக்கு வந்தன.

விவரம் தெரிந்த நாள் முதலாக முத்தையனும் குணவதியும் அன்னியோன்யமாகப் பழகி வந்திருக்கின்றனர். அந்நாள் தொட்டே குணவதி முத்தையனுக்குத்தான் என்று திட்டமிட்டாள் குணவதியின் தாய். தந்தை தாயற்ற தன்பேரில் தனித்த பரிவுகாட்டும் அக்குடும்பத்தில் முத்தையனுக்கு இனம்தெரியாத பாசம் ஏற்பட்டதில் வியப்பில்லைதான்.

காவேரியை அடுத்திருந்தது குடியிருப்பு. அதற்கெல்லாம் மேஸ்திரிதான் தலைக்கட்டு. கொஞ்சம் ‘பசை’யான பேர்வழி. பணப் புழக்கம் குலுங்கும் இடம். அப்புறம் கேட்பானேன்? மேஸ்திரி மகன் மாரி நாலைந்து வருஷங்களுக்கு முன் பர்மா போயிருந்தான். அவனைப்பற்றி அன்று வரை யாதொரு தகவலும் கிடைக்காததால் மேஸ்திரியும் குணவதி விஷயத்தில் ஒன்றும் குறுக்கிடவில்லை. ஆனால் குணவதியும் முத்தையனும் என்றோ கைபிடித்த தம்பதிகளாக வேண்டியவர்கள். அதுவேதான் வயதான குணவதியின் அம்மா

கண்டுவந்த கனவும் ஆகும். எதற்கும் காலமும் வேளையும் கூடிவரவேண்டாமா?

"முத்து அண்ணே"

"வா மாரி, இப்பத்தான் ஒன்னை நெனச்சேன், ஆயுசு நூறு" என்று மேல் பூச்சாக ஏதோ பேசினான் முத்தையன்.

"குணவதியை எம்மகனுக்குக் கட்டிக்கொடுக்காட்டி அப்பறம் ஒரு கை பார்த்துக்கலாம்" என்று மேஸ்திரி எச்சரித்த விஷயமும் அவனுக்கு ஞாபகத்துக்கு வந்தது.

"அண்ணே, ஒன்னைக் கண்டு சேதி பேசத்தான் ஓடியாந்தேன். தேடிப்போன மூலிகை காலிலே சிக்கின கதையா நீயே குறுக்கே வந்துப்புட்டெ, விசயம் அல்லாம் புரிஞ்சுக்கிட்டேன். அத்தைமவள், குணவதியைக் கட்டிக்க வேண்டியது நான். ஆனா அதுக்குப் போட்டியா நீ இருக்கே. இப்ப எல்லோருமாக் கூடி ஒரு முடிவு கட்டியிருக்கோம். அதாவது நம்ப காவேரியிலே கோடி முக்கம் வரைக்கும் நாம்ப ரெண்டு பேரும் பரிசல் ஒட்டி அதிலே யாரு முதலிலே வந்து செயிக்கிறாங்களோ அவனுக்குத்தான் குணவதி. நல்லா யோசிச்சு முடிவு சொல்லிப்பிடு. முத்து, அப்பறமாப் பேச்சை மாத்தப்படாது."

சாதுரியமாகப் பேசிய மாரியின் வார்த்தைகளில் முத்தையனுக்கு நம்பிக்கை பிறந்தது. அவன் சொல்லும் முடிவும் நியாயமானதாகவே பட்டது. உடனே சம்மதம் தெரிவித்தான்.

"என்னிக்குப் பந்தயம் வச்சுக்கிடலாம்?" என்று கேட்டான் முத்தையன்.

"அடுத்த கிளமை இன்னேரமா" என்று பதில் கொடுத்தான் மாரி.

மாரியை அனுப்பிவிட்டுத் திரும்பினான். வழியில் குணவதி குதூகலத்துடன் வந்துகொண்டிருந்தாள். இடுப்பில் கூடையுடன்.

"குணவதி, கூடையெல்லாம் பெலமா இருக்கே புதுசா" வேடிக்கையாக வினவினான் முத்தையன்.

"ஆமா மச்சான், ஒங்க அதிர்ஷ்டம் பெலமா இருக்கணுமேன்னு அரசமரத்துப் பிள்ளையாருக்கு நெதம் பூச்சாத்தரேன்னு வேண்டிக்கிட்டிருக்கேன்."

"நீ சொல்றது ஏதும் புரியலையே"

"மச்சான், ஒங்களுக்குத் தெரியாதா? அந்த நாளிலே சனக மவராசா தம் வில்லை ஒடிக்கறவுங்களுக்கத்தான் தம்மவ சீதையைக் கொடுக்கிறதாச் சொன்னாருன்னு கதை கேட்டிருக்கேன். இப்ப என்னாடான்னா பரிசல் பந்தயம்"

"இப்பல்ல புரியுது. குணவதி கொஞ்ச முந்தித்தான் மாரிப்பயவந்து சேதி பூராவையும் சொன்னான். நானும் சரின்னு சொல்லிட்டேன்" என்றான் முத்தையன் சன்னக் குரலில்.

"மச்சான் கண்ணாலம் கட்டிக்கிறதிலே எனக்கும் பாத்தியம் இருக்கு. ஒங்களை நெனைச்ச மனசு இனிக் கனாவிலேகூட அந்த பயமவன் மாரியை நெனைக்காது. அப்படியிருக்க என்னத்துக்குப் பந்தயமும் மண்ணாங்கட்டியும், மாரிப் பய என்னமோ சூது பண்ணி"

"உஸ், சத்தம் போடாதே குணவதி. அவங்க ஒருவளிக்குத் தோதா வர்றபோது நாமும் கொஞ்சம் விட்டுக்கொடுக்கத்தான் வேணுமாக்கும். நீ ஒன்னுக்கும் கவலைப்படாதே. இப்பச் சொல்றேன்னு பாரு. கடைசிவரை நீ மட்டும் என் குணவதிதான்" என்றான் முத்தையன்.

குணவதிக்கு முத்தையன் கூறின வார்த்தைகள் தெம்பை ஊட்டின. அவள் கன்னங்களில் நாணம் தடம் பதிந்தது. சூரியனின் இளங்கதிர்கள் அவள் வதனத்தைப் பின்னும் சோபிக்கச் செய்தன. அக்காட்சியில் தன்னை மறந்தான் முத்தையன்.

அந்தி வானில் விந்தைக் கோளங்கள் மலர்ந்திருந்தன. அன்று தான் முத்தையனும் மாரியும் ஒப்பந்தம் செய்து கொண்ட பந்தயநாள். காவேரிக் கரையில் கூட்டம் கூட்டமாகக் கூடியிருந்தனர். குணவதி படிக்கட்டின் ஒரு ஓரத்தில் அமர்ந்திருந்தாள். நாலைந்து நாட்களுக்கு முன்னிருந்த தைரியம் அவங்களுக்குத் தற்சமயம் இல்லை. எப்படியும் வெற்றிதன் மச்சான் முத்தையாவுக்குத்தான் என்பது நிச்சயமானாலும், ஒருக்கால் கெட்ட காலமாக மாரி பக்கம் அதிர்ஷ்டம் திரும்பிவிட்டால் தன் கதி என்னாகும் என்பதை நினைத்துப்பார்த்த அவளுக்கு அதிர்ச்சி உண்டாயிற்று. காதல் பரீட்சை அப்புறம் விஷப்பரிட்சையாகிவிடுமோ என்று மனம் நொந்தாள். இத்தைகைய இக்கட்டான நிலையில் கடவுள் பேரில் பாரத்தைப் போட்டுக் காணிக்கை வேண்டிக்கொண்டாள் குணவதி.

கண் மூடிக் கண் திறக்கும் போதில் கூட்டத்தில் அமைதி நிலவியது. முத்தையனைக் கண்டவுடன் ஓடிவந்து தைரிய மூட்டினாள் குணவதி. புத்துயிர் பெற்ற முத்தையன் சுதாரிப்புடன் படகில் தாவினான். அதே சமயம் மாரியும் ஜாடையாகக் குணவதியை நிமிர்ந்து நோக்கினான். ஆனால் அவள் இவனைச் சட்டை செய்யாமல் முகத்தை அப்பால் திருப்பிவிட்டாள். எதிர்பாராத ஏமாற்றத்தால் வேதனையடைந்த மாரி படகில் அமர்ந்தான். இரண்டுபேரும் மறுகணம் துடுப்பைத் தள்ள ஆரம்பித்தனர். ஒன்றையொன்று மிஞ்சும் வகையில் படகுகள் நீரைக் கிழித்தோடின. அக்கரை மூலையில் எல்லையிடப்பட்டிருந்தது கொடி ஒன்று.

அந்த வட்டாரத்தில் படகு ஓட்டுவதில் முத்தையன் ரொம்பவும் அனுபவம் பெற்றவன். ஆதலால் எவ்விதத்திலும் மாரியைத் தோற்கடித்துவிடலாமென்ற நினைப்பு. வரவர அவனுக்கு ஷோக்கு பிறந்தது. ஆனால் மாரியின் படகும் சளைக்கவில்லை.

கொஞ்ச நாழிகை சென்றது. எல்லையைத் தொட்டுத் திரும்பிய படகுகள் இரண்டில் ஒன்று மட்டுமே கண் பார்வையில் தெரிந்தது. ஜனங்கள் ஆர்ப்பரித்தனர். குணவதி கண்களைத் தீட்டிக்கொண்டு ஆதுரம் ததும்ப உற்று நோக்கினாள். அவளுக்கு அக்காட்சி உயிரையே மாய்த்துவிடும் போலாகிவிட்டது. 'யாரு மாரிப் பயலா?' என்று அலறினாள் குணவதி.

திரும்பும் படகு கட்டாயம் முத்தையனுடையதாகவே இருக்கும் என்று எண்ணிய அவள், மாரியின் படகு வந்து நின்றதைக் கரையில் ஓடிவந்து பார்த்தாள். 'அப்படின்னா என் மச்சான்' என்று மனதில் கேட்டுக்கொண்டாள்! மாரிதோளில் முத்தையனை அணைத்து வருவதைக் கண்டாள். 'மச்சான்' என்று அலறி விழுந்தாள். முத்தையனுக்குச் சுவாசம் மிகவும் லேசாக வந்துகொண்டிருந்தது. எல்லாம் ஏதோ சூழ்ச்சி என்பது அப்போதுதான் குணவதிக்குப் புலனாயிற்று.

"குணவதி, ரெண்டுபேரும் முக்கத்தைத் தாண்டி திரும்பையிலே, முத்து படகு ஓட்டையாப் போச்சு. தண்ணி படகிலே ரொம்பினதைக் கூடக் கவனிக்காமத் திரும்பவும் படகைத் தள்ளி முந்த ஆரம்பிச்சுச்சு. திடீர்னு அப்பறம் பரிசல் தண்ணியிலே கவிழ்ந்து போச்சு. தண்ணியிலே தத்தளிச்ச முத்தையனை நான் கஷ்டப்பட்டுத் தூக்கி எம்படகிலே

கொண்டாந்தேன். எதுக்கும் தலை எழுத்துன்னு ஒன்னு இருக்கில்லே. நான் சொல்றதைக் கேளு, இதிலேருந்து புரியலையா நீ எனக்கே தான் பூமியிலே பொறந்தவளுன்னு...” என்று சொல்லி மெல்ல நெருங்கினான் மாரி. அவன் பார்வையில் வெற்றியின் மிடுக்கு!

இமைப் பொழுதிற்குள் எவ்வளவு கோர சம்பவம் நிகழ்ந்துவிட்டது? பித்துப் பிடித்தவள் போலான குணவதி மற்றும் ஓர் தவணை முத்தையனைப் பார்த்தாள். பேசவும் திராணியிழந்து விழுந்து கிடந்த முத்தையனைக் காண அவளுக்கு அழுகை பீறிட்டது. கடைசியில் எல்லாம் கனவு தானா என்றெண்ணிய அவளுக்கு ஓர் நினைவு மின்வெட்டிற்று.

“மாரி முத்தையன் மேலே உனக்கிருந்த வஞ்சம் தீர்ந்து போச்சில்லையா? ஆனதாலே ஒம்மேலே எனக்குள்ள பழியைத் தீர்த்துவிட வேண்டியதுதான் பாக்கி. பாவிப்பயல்...” என்று வெறிப்பிடித்தவள்போலக் கர்ஜித்த குணவதி ஒரே மூச்சில் மாரியைப் பிடித்துத் தள்ளினாள். மாரியின் தலை கரையிலுள்ள படிக்கல்லில் படாரென்று மோதியது. அவ்வளவுதான். ரத்தம் பீறிட்டது. பிறகு முத்தையனைத் தொட்டுப் பார்த்தாள். உடல் ஜில்லிட்டிருந்தது. அதே சமயம் அமைதியுடன் ஓடிய ஆற்றில் சரண் புகுந்தாள் குணவதி.

“குணவதி, குணவதி”

தொடர்ந்து கேட்ட குரலைக் கண்டு விழித்தெழுந்தாள், கனவு கண்டு விழிப்பவள் போல.

‘சந்தேகமில்லை. நிச்சயமாக மச்சானேதான்’ இப்படிக் குணவதி தன்னுள் முனகினாள். சற்று முன் கண்டது பூராவும் வெறும் கனவு என்பது அப்பொழுதான் அவளுக்குப் பிடிப்பட்டது.

“மச்சான்!”

ஆச்சரியம் தொனிக்க ஆர்வத்துடன் அலட்டினான்.

“குணவதி, அன்னிக்கு நானும் மாரியும் பந்தயம் வச்சிக்கிறதா ஒப்பந்தம் கட்டினோமில்லையா? அதெல்லாம் அந்தப் பயமவன் மாரி செஞ்சிருக்கிற கபடம். இப்பத்தான் ஒவ்வொண்ணாத் துப்பு துலங்குது; விடிஞ்சதும் தானே படகுப் பந்தயம். அப்ப நான் படகு ஓட்டத் தொடங்கினதும் என்னை அப்படியே நடுத் தண்ணியிலேயே படகைக்

கவிழ்த்துத் தள்ளி ஆளை 'முடிச்சு' ப்பிடத் திட்டம் போட்டிருக்கானாம்; அப்புறம் ஒன்னை வலுக்கட்டாயமாக் கண்ணாலம் பண்ணிக்கிற முடிவாம்..." என்று நிறுத்தி மேற்கொண்டு அவள் காதில் ஏதோ மெதுவாகக் கூறினான் முத்தையன். குணவதிக்கு முகமலர்ச்சி ஏற்பட்டது. தான் கண்ட பொல்லாத சொப்பனத்துக்கும் இப்போது மச்சான் சொல்லும் சமாச்சாரத்துக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதுபோலத் தோன்றிற்று அவளுக்கு.

"சாமி கிருபையாலே இந்த மட்டும் உயிர் தப்பினது புண்ணியந்தான்" என்று நினைத்துக்கொண்டாள் குணவதி.

அடுத்த நாள் உச்சிப்பொழுது.

அன்றுதான் குறிப்பிட்டபடி முத்தையனும் மாரியும் பந்தயம் வைத்துக்கொண்ட தினம்!

வியர்க்க விறுவிறுக்க ஓடி வந்த மாரி குணவதியின் குடிசையின் முன் வந்து அலட்டினான். குணவதி வரவில்லை. அதற்குப் பதில் அவள் தாய் தள்ளாடிய வண்ணம் வெளியே வந்தாள்.

"அத்தை குணவதி எங்கே?" என்று கேட்டான் மாரி.

கிழவிக்கு ஆத்திரம் பொங்கியது. கோபம் ரௌத்திரகாரமாக வந்தது.

"மாரி, குணவதியையா தேடறே அம்பிட்டுப் பாசத்தோட; போதும்; நீயும் ஒங்க அப்பனும் எங்களைச் சாதிச்சது, ஒங்க வஞ்சகமும் சூதும் எங்களுக்குப் புரியாம இல்லே ஆமா! எதுக்கும் மேலே கடவுள் இருக்காரே...ஊம்...பந்தயமின்னு சாக்குப் பண்ணிட்டு அந்தப் புள்ளே முத்தையனைக் கொன்னுபுடச் செஞ்சிருக்கிற சூழ்ச்சி வெளங்கிச்சு..."

"அத்தை, நம்ம குல தெய்வத்து மேலே ஆணையாச் சொல்றேன். இப்பச் சொல்றதெல்லாம் சாடா நெசம். என்னமோ குணவதி மேலே இருந்த பிரியத்திலே .. அதை எப்படியும் கட்டிக்கிடணும்னு மனசிலே கொண்ட ஆசையாலே என்னமோ பாவம் செஞ்சுப்புடஇருந்தேன். ஆனா தெய்வம் சமயத்திலே எனக்குக் கனவுலே சோதனை காட்டிடுச்சு. என் கண்ணும் திறந்து பூட்டுது. ஆனா அப்பாருக்கு இந்தச் சேதி தெரியவே தெரியாது. மேலும் குணவதி முத்தையனைக் கட்டிக்காமப் போனா கட்டாயம் ஆத்திலே விழுந்து மாண்டுபோயிடறதா ஊரிலே

சொல்லியிருக்குதாம். அதுக்கு முத்தையன் மேலே இவ்வளவு உசிரு இருக்குமின்னு நெனைக்கலே. அப்படி உள்ளதை வலுக்கட்டாயப் படுத்தக் கட்டிக்க நான் நினைச்சது எம்புட்டு முட்டாள் தனமிங்கறது இப்பத்தான் புரியுது அத்தை. ஏன் இப்படி வெயிலிலே ஓடி வந்தேன் தெரியுமா? குணவதிக்கும் முத்தையனுக்கும் நாங்களே இருந்து கண்ணாலம் கட்டி வைக்கிறோம். அப்பத்தான் என் மனசு அடங்கும். குணவதி எங்க...?" என்று கேட்டான் மாரி ஆர்வத்துடன்.


இன்னும் அவன் பேச்சில் நம்பிக்கை விழவில்லை கிழவிக்கு. எப்படி ஏற்படும் நம்பிக்கை?

"மாரி வாய் கடுக்கப் பேசாதே. ஒங்க பணத்துக்கும் காசுக்கும் நாங்க ஏழைங்க, பயப்படத்தானே வேண்டியிருக்குது. இனி எனக்குக் கவலையில்லை. எப்படியும் குணவதியும் முத்தையனும் பொளைச்சுப்பூடுங்க. அதுக ரெண்டுபேரும் இதுக்குள்ளே கண்டிச் சீமைக்குக் கப்பல் ஏறியிருப்பாங்க..."

கண்கலங்க, ஆனால் குரலில் கண்டிப்புத் தொனிக்கக் கிழவி சொன்னதைக் கேட்டான் மாரி. அவனுக்கு உலகமே சுழன்றது. தன் நினைவு வந்ததும் விம்மிய உள்ளத்துடன் முகத்திலே தோல்வியின் சின்னம் தோன்ற வீட்டை நோக்கி நடந்துகொண்டிருந்தான் மாரி!

✿ ✿ ✿ ✿ ✿ ✿





- தமிழ்ப் படைப்பு இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் 200 - க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.
- கிராமியச் சூழலில் மண்வாசனை கமழ்ந்திட எழுதுவதில் தனிமுத்திரை பதித்தவர்.
- பொன்னி, காதல், மனிதன், உமா ஆகிய இதழ்களில் பொறுப்பாசிரியராக பணியாற்றியுள்ளார்.
- பக்தவச்சலம், கலைஞர், எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகிய 4 முதல்வர்களிடமும் தமிழக அரசின் சார்பில் பல்வேறு நூல்களுக்கு பரிசுகளைப் பெற்றுள்ளார்.
- காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடத்தின் சிறந்த எழுத்தாளருக்கான கௌரவப்பரிசு,

  'கடல்முத்து' நூலுக்கு கோவை லில்லி தேவசிகாமணி நினைவுப் பரிசு,

  கிருஸ்துவ இலக்கிய சங்கத்தின் சிறந்த எழுத்தாளருக்கான விருது ஆகியவற்றை பெற்றுள்ளார்.
- எழுத்துலகில் பொன்விழா கண்டவர்

Mass Media

**பூவை பதிப்பகம்**